ஆபரண மாளிகை
நகைசேமிப்புத் திட்டத்தில்
இணைந்து
அதிஷ்டசாலிகள் ஆகுங்கள்.
அதிஷ்டசாலி தொடர்ந்து
பணம் கட்டத்
தேவையில்லை.
நியூ ரூபி
7, rue Cail 75010 Paris Tel: 01 42 05 18 05

NORD OPTICAL

லாச்சப்பலில் முதல் முறையாக கண் பார்வைக்குரிய
கண்ணாடி. லென்ஸ். என்பன இங்கு பெற்றுக்கொள்ளலாம்.
18, rue Demarquay, 75010 Paris
Gare du Nord (La Chapelle)
Horraires d'ouverture ② ④ ⑤ Ⓑ Ⓓ Ⓔ
Lundi au Samedi 10h à 19h30 TEL: 01.75.42.92.30

ஐரோப்பியப் பதிப்பு
ஈழமுரசு®
முரசு 03 23 ஜனவரி - 05 பெப்ரவரி 2018 முழக்கம் 065

ஹம்பாந்தோட்டை சீனாவின் கடற்படைத் தளம்

ஜப்பான் கூட்டுப்படைகளின் தளபதி எச்சரிக்கை

தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்..?

ஒப்ரேசன் டபிள் எட்ஜ்:
சிங்கத்தின் வாயில் சிக்கிய எலியின் கதையாக

தமிழர் தாயகப் பகுதியில் பௌத்தத்தின் உச்சக்கட்ட ஆக்கிரமிப்பு

கிடைக்க இருந்த வாய்ப்பு கை நழுவிப்போய்விட்டது. மகிழ்ச்சியடைவதா, வருத்தப்படுவதா என்றே தெரியவில்லை அரிச்சந்திரனே..?

மரணம் ஒன்றே மாறாதது!

பிரான்ஸ் வாழ் வர்த்தகர்களே
உங்கள் வர்த்தக விளம்பரங்களை
எமது தளத்தில் விளம்பரம் செய்து
அதிக பயன் பெறுங்கள்
பரிஸ்தமிழ்
www.ParisTamil.Com .கொம்
பரிஸ்தமிழ்.கொம்மில்
விளம்பரம் செய்ய தொடர்பு:
செல்பேசி: 06 64 96 80 79
தொலைபேசி: 09 70 40 50 71
www.paristamil.com

BHARATH
ॐ
51,67 Rue Louis Blanc
75010 Paris - France
01 42 09 35 84
01 58 20 06 20
Spécialitées Indienne et Srilankaise
www.restaurantbharath.com
www.cafe-bharath.com

V.T Cash & Carry
www.vtcashcarry.com
11 rue cail, 75010 Paris,
Tel: 01 40 05 07 18 , Fax: 01 40 05 06 92
E-mail: vtsuperstore@organge.fr

Gopal and co Supermarche
72 rue Louis Blanc, 75010 Paris
M°: La chapelle ou Gare du Nord
Tél.: 01 46 07 11 10 | Fax: 01 46 07 13 03

எங்கேயும்... எப்போதும்...
Kingstravels
A Better way to fly!
நியாயமான கட்டணம்....
நம்பிக்கையான பயணத்திற்கான உத்தரவாதம்...
30, rue Philippe de Girard - 75010 Paris
Tél: 01 42 09 19 09 - 01 40 38 18 27
M°: La Chapelle / Gare du Nord email: kingstravels@orange.fr

IMPORT EXPORT
லாச்சப்பல்
நிஷான்
சுப்பர் மார்சே
பல்பொருள்
வாணிபம்

64, rue louis blanc, 75010 Paris
Tél./Fax: 01 44 72 06 03
M°: La Chapelle Gare du nord

ஆருஜா உணவகம்
Spécialités Cuisines Indiennes & Srilnakaises

உங்கள் இல்ல விழாவிற்கு வேண்டிய
பலகாரங்கள், சைவ-அசைவ உணவுகள்,
பாத்திரங்கள், வாழை இலை, கோப்பை,
கத்தி, கரண்டி, கிளாஸ்,சூடாக்கும் பாத்திரம்,
மற்றும் உணவு பரிமாறும் சேவையுடன்
விழாக்களை சிறந்த முறையில்
நடாத்தித் தர நாடுங்கள்
Tél.:01 46 06 59 30
06 78 81 81 37
7/7 Taxis bar
14 Rue Labat - 75018 Paris
M°: Marcadet Poissonniers

பிரெஞ்சு அரசினால்
அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பாளர்!
எமது மொழிபெயர்ப்புக்கள் அனைத்து அரசு
நிறுவனங்களிலும் சட்டபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்படும்.
எம்மிடம் நேரடியாக வருபவர்களுக்கு சலுகையளிக்கப்படும்.
திரு.சகாதேவன்
SAGADEVAN PIERRE மொழிபெயர்ப்பு நிலையம்
தொடர்பு கொள்ள (Leader Price கடைக்கு அருகாமையில்)
26, rue Philippe de Girard,75010 Paris
Tél: 01 46 07 50 23 Mobile: 06 81 34 41 06
E.mail: saga_de_van@yahoo.fr

VS CO Cash & Carry
www.vsco.com
197, rue du Fbg St.Denis - 75010 Paris
Tél.: 01 40 34 71 65
Fax: 01 53 26 72 04

ASCES

27 ஆண்டுகளாக நடைபெறும்
பதிவு செய்யப்பட்ட பாடசாலை

BAC, BREVET பரீட்சைகளில் 100 வீத சித்தி எமது மாணவர்களுக்கு வாழ்த்துக்கள்

விபரங்கள் அறிய
எமது இணையத்தளம் **www.asces.fr** **Tél : 07 82 88 59 16** **E-mail : asces@free.fr**

Le Blanc Mesnil இல் எமது புதிய 5வது கிளை
10, Avenue du Capitaine Fonck, 93150 Le Blanc Mesnil (Le Bourget விமான நிலையத்திற்கு அருகில்)

Grande Section, CP, CE,CM, Collège, Lycée வகுப்புகள்
Maths, Français, Physique, Chimie, SVT, Histoire

பெரியவர்களுக்கான புதிய பிரஞ்சு வகுப்புகள்

13-01-2018 சனி ஞாயிறு மாலை 5.30 மணி
26-12--2017 செவ்வாய் வியாழன் மாலை 4 மணி 6 மணி
17-12-2017 ஞாயிறு காலை 9.30 மணி (1 நாள்வகுப்பு)
08-01-2018 திங்கள் செவ்வாய் காலை 9.30 மணி
07-01-2018 ஞாயிறு காலை 10 மணி (**Nationality** வகுப்பு)
12-12-2017 செவ்வாய் வெள்ளி பி.ப 2 மணி (Bobigny)
04-01-2018 வியாழன் காலை 9..30 – 12.30 மணி

LA COURNEUVE இல்
35, rue Maurice Lachâtre - 93120 La Courneuve

BOBIGNY
38, rue Gaston Crépin 93000 Bobigny

PARIS
3, place de Joinville 75019 Paris M° Crimée

Epinay sur seine 42, rue Félix Merlin 93800 Epinay sur Seine

திறமையான ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றன
BAC , BREVET பரீட்சைகளில் 100வீத சித்தி
Cambridge University ஆல் நடாத்தப்படும்
Starters, Movers, Flyers, Ket, Pet பரீட்சைக்கான வகுப்புகள்

எமது வெளியீடுகள்
நடைமுறை பிரஞ்சு – பிரஞ்சு இலக்கணம் பயில சிறந்தநூல்
பிரஞ்சு – தமிழ், தமிழ் – பிரஞ்சு அகராதி
பிரஞ்சு பேசுவோம் பகுதி 1 & 2 CD உடன்

Bridal makeup & cake icing
மணப்பெண் அலங்காரம்.
கேக் அலங்காரம் சனி காலை 9.30 மணி ஆரம்பம்
பதிவுகள் இப்போதே செய்யுங்கள்

புதன், சனி, ஞாயிறுகளில்
தமிழ், நடனம், சங்கீதம், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம்,
வயலின், ஓர்கன், கிட்டார் வகுப்புகள்
தையல் வகுப்புகள் ஆரம்பம்

கபறினா இறைச்சிக்கடை
தினமும் உடன் இறைச்சி
வகைகளையும்,
விசேடமாக
ஆட்டிறைச்சிப் பங்கையும்
பெற்றுக்கொள்ள...
BOUCHERIE GABARINA

62, Rue Louis Blanc
75010 Paris
Mo : La Chapelle Ou Gare du Nord
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, rue fbg st Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

Aubervilliers Quatre cheminsல் ஒரு தமிழ்க்கடை
Anna Marché
அனைத்து மளிகைப்பொருட்களுக்கும்...
மொத்தமாக
கொள்வனவு
செய்வோருக்கு
விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும்
V.I.P Sarl 4 rue Emest Prévost,
93300 Aubervillers. Tél. : 07 52 94 50 65

பாரீஸ் அறிவாலயம்
Paris Arivalayam
7, rue Perdonnet, 75010 Paris
Metro : La chapelle Tel: 01 44 72 03 34
இலங்கை இந்திய புலம் பெயர்ந்த தமிழ் எழுத்தாளர்களின் படைப்புக்கள்,
மேலும் நவீன தேடலுக்கான அனைத்து வெளியீடுகள் பாடசாலை
அலுவலகத் தேவைக்கான உபகரணங்கள், சுயமுன்னேற்ற நூல்கள்
அனைத்தும் ஒரே இடத்தில் வாங்கிட இன்றே செல்ல வேண்டிய இடம்.

S.P.Raju Jewellery
பழைய நகைகளுக்கு
புதிய நகைகள் வழங்குகிறோம்!!!!
199 rue du Fbg St Denis,
75010 Paris
Tél: 01 58 20 17 33
13 rue cail, 75010 Paris
Tél: 01 46 07 43 42

AACHI BOUCHERIE
பொண்டியில் ஆச்சி இறைச்சிக்கடை
உங்களிற்காக மிகவும் மலிவு விலையில்
தரமான இறைச்சி வகைகள்
ஆட்டிறைச்சி,
மாட்டிறைச்சி,
உயிர்க்கோழி,
கோழிக்கால்,
பாங்கிறைச்சிகள்
120 Rue Roger Salengro
93140 Bondy
HALAL
Tél : 07 51 08 14 83
07 51 27 72 38

Ragawa Tailor
அனைத்து விதமான ஆடைகளும்
உங்கள் வசதிக்கேற்ப
வடிவமைத்துக்
கொடுக்கப்படும்.
01 40 35 14 77
190 Rue Fbg St. Denis
75010 Paris
M°: Gare du Nord [illegible]

தரமான கடலுணவு வகைகளை மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
Ocean Indien
30 ஈரோவுக்கு மேல் பொருட்கள்
வாங்கினால் 5% சிறப்புக்கழிவு
195, Rue du fbg St,Denis, 75010 Paris - FRANCE
Tél - 01 42 09 31 50 Fax - 01 42 09 31 60

Neuilly sur marne, Meaux, Torcy, Lagny
வாழ் மக்களின் வசதிக்கேற்ப Chelles மாநகரிலே
EURO SAGEN
மளிகைப் பொருட்கள், மரக்கறி வகைகள்
மற்றும் கடலுணவு வகைகள்
Ria MoneyGram. money transfer WESTERN UNION MONEY TRANSFER
Import & Export
62 av du Maréchal Foch, 77500 Chelles
Tél: 0160202947 | Port: 0667204000

ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கான
சிகையலங்கார நிலையம்.
COIFFURE
VITHUSA
TÉL: 06 52 44 89 27
M° : Aubervilers 4 chemmins
Bus : 170,150,249,152
40, RUE HENRI BARBUSSE
93300 AUBERVILLERS

ஈழமுரசு®
mediacentre ஊடகமையம்
முரசு 03 23 ஜனவரி – 05 பெப்ரவரி 2018 முழக்கம் 065

"பழையன கழிந்து புதியன சேர்ந்து செழுமைப்படும் கலை, கலாசாரம், பண்பாடு எமது இனத்திற்குப் பெருமை சேர்க்கும், எமது மக்களின் மனவுலகில் ஒரு புரட்சிகரமான விழிப்புணர்வைத் தோற்றுவிக்கும்."

– தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்

ஹம்பாந்தோட்டை சீனாவின் கடற்படைத் தளம்

ஜப்பான் கூட்டுப்படைகளின் தளபதி எச்சரிக்கை

(23.01.2018, செவ்வாய்க்கிழமை)

ஹம்பாந்தோட்ட துறைமுக முதலீட்டின் இரண்டாவது கட்ட நிதியை சீனா கடந்த வாரம் சிறீலங்காவிற்கு வழங்கியுள்ளது. ஹம்பாந்தோட்ட துறைமுக முதலீட்டின் இரண்டாவது கட்ட நிதியான 97.3 மில்லியன் அமெரிக்க டொலரினையே சீனா வழங்கியுள்ளது. சீன மேர்ச்சன்ட் போர்ட் ஹோல்டிங்ஸ் வழங்கிய குறித்த நிதி தொகையானது துறைமுக அதிகார சபையிடம் கையளிப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியப் பெருங்கடலில் சீனாவின் கடற்படை நடவடிக்கைகள் விரிவடைந்து வருவதும், இலங்கையை மையமாகக் கொண்டு சீனா தனது திட்டத்தை வகுத்து வருவதும் ஆபத்தானது என ஜப்பானிய கூட்டுப்படைகளின் தளபதி அட்மிரல் கட்சுரோஷ் கவானோ (Admiral Katsutoshi Kawano) எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியத் தலைநகர் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் சீனாவின் கடற்பலப் பெருக்கம் குறித்தும் அதன் எதிர்கால ஆபத்துக்கள் குறித்தும் விரிவாகக் கூறினார். அப்போது அவர் கூறியதாவது,?சீனக் கடற்படை தனது நடவடிக்கைகளை உறுதியாக விரிவுபடுத்தி வருகிறது. இந்தியாவைச் சுற்றி கட்டமைப்புகளை உருவாக்குவதற்காக சீனா தனது நிதியை முதலீடு செய்து வருகிறது. பிராந்தியத்தில் தனது இராணுவத் தளங்களின் வலையமைப்பை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. சீனாவின் கடற்படை விரிவாக்க மூலோபாயத்துக்கு உதவும் கட்டமைப்புகளுக்கு உதாரணமாக, பாகிஸ்தானின் குவடார் துறைமுகம், சீனாவின் முதலீட்டுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஓகஸ்ட் மாதம் டிஜிபுட்டியில் சீனாவின் முதலாவது கடல் கடந்த கடற்படைத் தளம் திறக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவில் ஹம்பாந்தோட்டை துறைமுகம், 99 ஆண்டு குத்தகைக்காக சீனாவுக்கு கடந்த டிசெம்பரில் வழங்கப்பட்டுள்ளது. டிஜிபோட்டியில் உள்ள சீன கடற்படைத் தளம் இந்தியப் பெருங்கடலில், அந்த நாட்டின் கடல் நடவடிக்கைகளுக்கு வெளிப்படையாகவே உதவியாக இருக்கும்.



மத்திய தரைக் கடலைச் சுற்றிய பகுதிக்கு இலகுவாகச் சென்றடையும் வகையில், சீன கடற்படை தனது செயற்பாடுகளை உறுதியாக விரிவுபடுத்திக் கொண்டிருக்கிறது. ஹம்பாந்தோட்டை துறைமுகம் ஒரு வர்த்தக கட்டுமானமே என்று சிறீலங்காவும், சீனாவும் கூறுகின்றன.

ஆனால், 99 ஆண்டு குத்தகை என்பது சீனாவின் இராணுவ முன்னெடுப்புக்கான காத்திரமான நகர்வாகவே மாற்றியுள்ளது. சீனா தனது கடல் கடந்த இரண்டாவது தளத்தை தெற்காசியாவில் ஹம்பாந்தோட்டையில் கட்டியெழுப்பினால், சீன கடற்படையின்

தொடர்ச்சி 04ம் பக்கம்

ஒரே தடவையில் தீர்த்துக் கொள்ளுங்கள்!
உணவகங்கள் – கடைகள் – தொழிற்சாலைகள் போன்றவற்றில்
STOP !
- எலிகள் – சுண்டெலிகள்
- கரப்பான் பூச்சிகள்
- தொல்லைகொடுக்கும் பூச்சிகள்

அனைத்திற்கும் சிறந்தவல்லுனர்கள் மூலம்
ஒரே தடவையில்
பயன்பெற்றிட நாடுங்கள்
14 Rue Charles V,
75004 Paris.
DIAPHANECONCEPT
அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனம்
N° de certificat 10KX50000-4107
Tél.: 01 60 07 34 29
சுதா / விமல் : 06 34 18 80 04

வீடு வாங்குவதற்கும் அனைத்து விதமான கடன் தேவைகளிற்கும்
நம்பிக்கையுடன் நாடுங்கள்
Crédits - Solutions
திரு.சிவா
2-4 rue de l'Orillon - 75011 Paris
0973255923 - 0665660305
email: creditssolutions@gmail.com

மக்கள் கடை
NEW CASTEL
உங்கள் தேவைகளே
எங்கள் சேவை
61, rue Louis Blanc,75010 Paris.
Tel: 01 42 05 13 67 Fax: 01 42 05 99 02

ஈழமுரசு®

“உண்மையின் முன்னால்
நடுநிலைமை என்பது இல்லை”

“MEDIACENTRE”
JOURNAL TAMOUL
bimensuel **Gratuit**

MEDIACENTRE
BP 40
93141 BONDY PDC,
France
Port: 00 33 781 808 116

இணையத்தளம்
www.eelamurazu.com
ஆசிரியர்பீடத் தொடர்புகட்கு:
@: eelamurazu@gmail.com
விளம்பர விநியோகத் தொடர்புகட்கு:
@: eelamurazuadm@gmail.com

Le Président: S.Pulenthiran
தலைவர்: சு.புலேந்திரன்
Redacteur: K.Jeisanthar
பொறுப்பாசிரியர்: கி.ஜெய்சந்தர்

ஆசிரியர் பீடம்
எழுவான் (தென்தமிழீழம்)
வீரமணி (வடதமிழீழம்)
மதிமாறன் (தமிழகம்)
கந்தரதன் (பிரான்ஸ்)
சோழகரிகாலன் (பிரான்ஸ்)
விவேகன் (பிரான்ஸ்)
சுமந்திரன் (பிரான்ஸ்)
அருணன் (பிரான்ஸ்)
ச.ச.முத்து (பிரித்தானியா)
சேயோன் (பிரித்தானியா)
சேரமான் (ஐரோப்பா)
ஈசன் (கனடா)

விளம்பரம் / விநியோகம்
சுஜி (பிரான்ஸ்)
அருளப்பு (பிரான்ஸ்)
கஜி (பிரான்ஸ்)
கஜன் (பிரான்ஸ்)
மோகன் (பிரித்தானியா)

Impression:
IPS,
ZI de Iscles, 30 av. des Alpines,
13160 Châteaurenard

பிரித்தானியா
Mohan: 00 44 790 4631 883
@: eelamurazu.uk@gmail.com

சந்தா விபரம்
வருட சந்தா
பிரான்ஸ் 75€
ஐரோப்பா 85€
ஏனைய நாடுகள் 99€

குறிப்பு:

இவ்விதழில் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களுக்கு அந்தந்த விளம்பரதாரர்களே பொறுப்பு.

ஈழமுரசில் வெளிவரும் ஆக்கங்களை மறுபதிப்புச் செய்பவர்கள் முன்னனுமதி பெறவேண்டும்.

லாச்சப்பலில்
ஈழமுரசுடனான விளம்பரத் தொடர்புகளுக்கு
பாலன்:
29, rue Philippe de Girard,
75010 Paris
Port: 06 63 01 75 80

ஹம்பாந்தோட்டை சீனாவின் கடற்படைத்....

ஆற்றல்கள் புதிய மட்டங்களுக்கு அதிகரிக்கக் கூடும். இத்தகைய விநியோக வசதிகளை பயன்படுத்தினால், சீனக் கடற்படைக் கப்பல்கள் தமது நாட்டுக்குத் திரும்பாமல் நீண்ட காலத்துக்கு இந்தியப் பெருங்கடலில் தங்கியிருக்க முடியும்.

சீனா தனது அணுசக்தி நீர்மூழ்கிகள் மற்றும் கடற்படைக் கப்பல்களை அண்மைய ஆண்டுகளாக இந்தியப் பெருங்கடலில் தொடர்ச்சியாக நிறுத்தி வருகிறது. எமது முக்கியமான கப்பல் பாதைகள் இந்திய பெருங்கடல் மற்றும் தென் சீனக்கடல் வழியாகவே இருக்கின்றன. இந்தப் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படை விரிவாக்கத்தை எதிர்கொள்ளும் வகையில், அமெரிக்கா, அவுஸ்ரேலியா, இந்தியா ஆகிய நாடுகளுடன் ஜப்பான் இணைந்து பணியாற்றும். தற்போதுள்ளது போன்ற சீனாவின் இராணுவ செலவின விரிவாக்கம், தொடர்ந்தால், ஜப்பான் தீவிரமான பாதுகாப்பு அச்சுறுத்தலை எதிர்கொள்ளும். அந்தச் சூழலைக் கணிக்க முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, கடந்த முதலாம் திகதி 2018ம் ஆண்டின் தொடக்கநாளன்று ஹம்பாந்தோட்டை மாகம்புற துறைமுகத்தில் சீனா நாட்டின் தேசியக் கொடி ஏற்றப்பட்டது. குறித்த துறைமுகமானது டிசம்பர் மாதம் 9ம் திகதி சைனா மார்சன்ட் போட் ஹோல்டிங்ஸ் நிறுவனத்திடம் கையளிக்கப்பட்ட பின்னர் முதற் தடவையாக சீனாவின் தேசியக் கொடி ஏற்றப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் அங்கு சிறீலங்காவின் தேசியக்கொடி மற்றும் துறைமுக அதிகாரசபையின் கொடி என்பன ஏற்றப்பட்டிருந்ததுடன், சிறீலங்காவின் தேசியக்கொடி ஏனைய கொடிகளை விட ஒன்றரை அடி உயரத்தில் ஏற்றப்பட்டிருந்தது. எனினும், கடந்த முதலாம் திகதி சிறீலங்காவின் தேசியக்கொடியின் உயரம் குறைக்கப்பட்டு ஏனைய கொடிகளின் உயரத்துக்கு சமனாக கொண்டு வரப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, சீனாவுடனான ஒப்பந்தத்தின் ஊடாக தாம் தொழில் வாய்ப்பினை இழக்க நேரிட்டுள்ளதாகக் கோரி ஹம்பாந்தோட்டை துறைமுக ஊழியர்கள் 438 பேர் தொடர்ச்சியாக சத்தியாக் கிரகப் போராட்டத்தினை ஹம்பாந்தோட்டை துறைமுகவளாகத்திற்கு அருகில் இரண்டு மாதங்களுக்கு மேலாக முன்னெடுத்து வந்தனர். சீனாவுக்கு துறைமுகத்தை தாரைவார்த்துள்ளதனால் 438 குடும்பங்களின் நிலைமை பரிதாபகரமாக உள்ளது. இதுவரையில் எமது பிரச்சினைக்கு எந்தவிதமான தீர்வினையும் வழங்குவதற்கு அரசாங்கம் முன்வரவில்லை. நியாயமான தீர்வு கிடைக்கும் வரையில் எமது போராட்டம் தொடரும் என்று கூறிப் போராடி வந்தனர். கடந்த 9ம் திகதி முதல் சாகும் வரையிலான உண்ணாவிரத போராட்டத்தை இவர்கள் ஆரம்பித்திருந்தனர். ஆனால் கடந்த வாரம் இவர்கள் தங்களுக்கு சாதகமாக பதில்கிடைத்துள்ளதாகக்கூறி உண்ணாவிரதப் போராட்டத்தை கைவிட்டுள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, சீனாவின் கடன் வலைக்குள் சிக்கிக் கொண்ட இறுதி நாடு இலங்கை என்று, ‘ஆசியன் ரைம்ஸ்’ என்ற சர்வதேச ஊடகம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. அந்த இணையத்தளத்தின் கட்டுரை ஒன்றில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றனவும் சிறீலங்காவிற்கு கடன்களை வழங்கியுள்ளன. ஆனால் அந்த அமைப்புகளது கடன்களைப் போன்று சீனாவின் கடன்கள் இலகுவானவை இல்லை. சீனா தமது கடன்களைக் கொண்டு, அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் தேவைகளைப் பயன்படுத்தி, அந்த நாடுகளின் வளங்களை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்கிறது. இதனால் நீண்டகாலத்துக்கு குறிப்பிட்ட நாடுகள் கடன்சுமைக்குள் தள்ளப்படும் நிலை உள்ளது. இலங்கையும் அவ்வாறான நிலைமையையே எதிர்நோக்கி இருக்கிறது என்று அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இனப்படுகொலை இராணுவம் இப்போது மொழிப் படுகொலையில்

பூநகரியில் அமைந்துள்ள சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் முகாம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையில் எழுதப்பட்டுள்ள தமிழ்ப் படுகொலை இது. குறித்த பெயர்ப் பலகையில் உட்பிரவேசிப்பது தவைரயறுக்கப்பட பிரதேசம என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளே பிரவேசிப்பது வரையறுக்கப்பட்ட பிரதேசம் என்ற வாசகமே இவ்வாறு பிழையாக எழுதப்பட்டுள்ளது. இதில் தமிழ் எழுத்துப் பிழையும், சொற்பிழையும் உள்ளது. உட்புகுந்து என்ன சொற்றொடர் என்ன என்றே புரியவில்லை. தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் இவ்வாறு தமிழ் மொழியை மிகவும் தவறாக எழுதி இன்னொரு இனப்படுகொலையில் சிறீலங்காப் படையினர் இறங்கியுள்ளனர்.



காணாமல் போன மீனவர் சடலமாக மீட்பு!

மீன்பிடிக்க கடலுக்குச் சென்று காணாமல் போயிருந்த மன்னார் – வங்காலை கிராமத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் மூன்று நாட்களின் பின்னர் கடந்த 19ம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலமாக மீட்கப்பட்டவர் வங்காலை, 4ம் வட்டாரத்தைச் சேர்ந்த 50 வயதான சென்ஜோண் குணசீலன் குருஸ் என தெரிய வந்துள்ளது. குறித்த மீனவர் படகு ஒன்றில் மீன் பிடிக்க தனியாக கடலுக்குச் சென்றுள்ளார். பின்னர் குறித்த மீனவர் உரிய நேரத்திற்கு வீடு திரும்பவில்லை. இந் நிலையில் சக மீனவர்கள் கடலில் சென்று தேடிய போது படகு மாத்திரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக இரு தினங்கள் நூற்றுக்கணக்கான மீனவர்கள் இணைந்து தேடிய போதும் குறித்த மீனவர் உடலம் கடலில் மிதந்த நிலையில் சக மீனவர்களினால் மீட்கப்பட்டு கரைக்கு கொண்டு வரப்பட்டது.

தமிழ் மக்கள் யாருக்கு....

ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அதில் கலந்துகொண்டவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடுமையாக வசைபாடினர். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஒரு துரோகி எனக் கூறிய அந்த மக்கள் கூட்டமைப்பு எம்.பிக்களின் உருவப்படங்களுக்கு மண் அள்ளித் தூவியவாறு தலைகளில் அடித்துக் கதறினர்.

அதேபோன்று, ஈ.பி.டி.பிக்கும் வாக்களிக்க மக்கள் தயாராக இல்லை. கடந்த யுத்த காலத்தில் ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தா உலகின் பல நாடுகளுக்குச் சென்று வடக்கு ? கிழக்கில் நடைபெறுவது பயங்கரவாத யுத்தம் எனக் கூறினார். தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் ஒழிக்கப்பட வேண்டும் என உலகெங்கும் பிரச்சாரம் செய்தார். முன்னாள் ஜனாதிபதிகளான திருமதி சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச ஆகியோரின் செல்லப் பிள்ளையாக இருந்த டக்ளஸ் தேவானந்தா, தமிழின அழிவுக்குத் துணைபோனார். தமிழ் இளைஞர், யுவதிகளைக் கடத்திப் படுகொலை செய்ததில் இவர்களுக்கு அதிக பங்கு இருக்கின்றது.

ஈ.பி.டி.பி மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி, எக்காலத்திலும் பிரிக்கப்பட முடியாத வடக்கு - கிழக்கு இணைந்த ஆட்சி என்பதை தனது கொள்கையாகக் கொண்டிருந்தது. ஆனால், யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் வடக்கும் - கிழக்கும் தனித்தனியாகப் பிரிக்கப்பட்டபோது டக்ளஸ் தேவானந்தா வாய் மூடி மௌனியாக இருந்தார். அதேபோன்று, தென்னிலங்கைக் கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் மாறி மாறி தமிழ் மக்களுக்கு எதிரான போரை முன்னெடுத்தவர்கள். தமிழ் மக்களின் அழிவுகளுக்கும் தமிழ் மக்களின் ஆற்றொணாத் துன்பங்களுக்கும் இவர்களே காரணம்.

இலங்கைத் தீவில் மீண்டும் ஒற்றையாட்சி அமைவதை தமிழ் மக்களில் எவரும் விரும்பவில்லை. உரிமைகளை விட்டுக்கொடுத்து, சிங்கள அரசாங்கத்திற்கு கீழே நசிந்து வாழ்வதற்காகவா கூட்டமைப்பு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளப்போகின்றது என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

அபிவிருத்தி முக்கியம் என்பதற்காக கொள்கையை விட்டுக் கொடுக்க முடியாது. அபிவிருத்தி என்ற பெயரில், எமது ஊரில் பௌத்த விகாரை கட்டுவதை, எமது ஊர்களுக்கு சிங்களப் பெயர் சூட்டுவதை, எமது பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றத்தை நாம் அனுமதிக்க முடியுமா? எமது தாயகத்தில் தமிழ்மொழி புறக்கணிக்கப்படுவதை நாம் பார்த்துக்கொண்டிருக்கு முடியுமா? எனவும் மக்கள் அடுக்கடுக்காக கேள்விகளை எழுப்பி வருகின்றனர். தமிழர் தேசத்தில் கொள்கையுடன் கூடிய அபிவிருத்தியே தேவை என மக்கள் விரும்புகின்றனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கொள்கையில் எவர் நின்றாலும் அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிப்பார்கள் என்ற நிலையே இன்றுவரை தமிழர் தாயகத்தில் இருந்துவருகின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அந்தக் கொள்கையை நூறு வீதம் கடைப்பிடிப்பார்களாயின் அவர்களுக்கே தமிழ் மக்கள் வாக்களிக்கவேண்டிய நிலை ஏற்படும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தி வாக்குகள் தமிழ் தேசிய மக்கள் முன்னயின்பால் நிச்சமயம் திரும்பக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கின்றன.

தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாளிகள் ஆக முடியாது. விடிவின்றி, விடுதலை இன்றி சூனியமான அரசியல் இருளுக்குள் நாம் தொடர்ந்தும் வாழத் தயாராக இல்லை எனத் தமிழீழ தேசியத் தலைவர் கூறியதைப் போன்று தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளை விட்டு வாக்களிக்க மாட்டார்கள் என்பதும் திண்ணம்.

எனவே, புலம்பெயர் தமிழ் மக்கள் இந்த விடயத்தில் மிகுந்த அக்கறையாக இருக்கவேண்டும். தமிழ்த் தேசியத்தில் யார் பற்றுறதியாக இருக்கின்றனர் என்பதை உய்த்தறிந்து அவர்களுக்கே தாயகத்தில் உள்ள உறவுகள் வாக்களிக்கவேண்டும் என்பதை எடுத்துக்கூறவேண்டிய பெரும் பொறுப்பு புலம்பெயர் தேசத்தவர்களுக்கு உள்ளது என்பது இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஈழமுரசு®

சுமந்திரன் தமிழர்களின் பிரதிநிதியா?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு எதிராக தமிழ் மக்களின் மனோநிலை இன்று முழுமையாகத் திரும்பிவருவதை நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைக்கான தேர்தல்களின் மூலம் அறிய முடிகின்றது. ‘கூட்டமைப்பு’ என்ற சொல்லைக் கேட்டாலே கொதித்தெழும் நிலையில் தமிழ் மக்கள் இருக்கின்றார்கள். கூட்டமைப்பில் அங்கம் வகிப்பவர்களை துரோகிகள் என முத்திரை குத்தி பதாகைகள் அடித்துத் தொங்கவிடுகின்றார்கள். செருப்பால் அவர்களின் படங்களுக்கு அடிக்கின்றார்கள். செருப்பு மாலை கட்டி அவர்களின் உருவப்படங்களில் தொங்கவிடுகின்றார்கள்.

விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை, தமிழர்களின் பலம்மிக்க ஒரு அரசியல் சக்தியாக மாற்றியமைத்திருக்க வேண்டியவர்கள் ஏன் அதனை மக்கள் புறக்கணித்து ஒதுக்கும் அளவிற்கு இந்த அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றார்கள்?

யார் இதற்குக் காரணம்?

யாரைக் கேட்டாலும் எந்தவித சந்தேகமும் இன்றி சுட்டுவிரல் நீட்டும் ஒற்றை மனிதனாக இன்று சுமந்திரன் நிற்கின்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு விடுதலைப் புலிகள் வழங்கிய ஆதரவுதான் அவர்களை தமிழ் மக்களின் ஒரு பலம்மிக்க அரசியல் சக்தியாக மாற்றியமைத்தது. விடுதலைப் புலிகள் சுட்டுவிரல் நீட்டும் எந்தவொரு துரோகிக்கும்கூட ஏன், எதற்காக என்று கேட்காது வாக்களித்து தேர்ந்தெடுக்கும் மனோநிலை தமிழ் மக்களிடம் இருந்தது. அதனால்தான், தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு துரோகம் இழைத்தவர்கள்கூட தங்கள் மனநிலையை மாற்றிக்கொண்டு அந்தக் கூட்டமைப்பில் இணைந்துகொண்டு போட்டியிட்டபோது தமிழ் மக்கள் யார், எவர் என்று பார்க்காது வாக்களித்து அவர்களைத் தேர்ந்தெடுத்தார்கள். 2004ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற பெரும் வெற்றிக்கும் அதுதான் காரணம்.?

ஆனால், 2009ம் ஆண்டு ஏற்பட்ட பேரழிவின் பின்னர், கூட்டமைப்பின் திசை மாறத் தொடங்கியது. தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தை அங்கீகரித்து, அதற்காகக் குரல் கொடுத்துவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இன்று ஒற்றையாட்சிக்குள், பௌத்த மேலாத்திக்கத்திற்குள் வாழ்வதற்கு ஒத்துக்கொண்டுள்ளது மட்டுமல்ல, அதனை தமிழ் மக்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகின்ற நிலைக்கு, அல்லது தமிழ் மக்களை இழுத்து அதற்குள் தள்ளுகின்ற நிலைக்கு அது வந்துநிற்கின்றது. இந்த இழிநிலைக்கு தமிழ் மக்களை கொண்டுவர முயல்வது யார்?

கூட்டமைப்பின் சம்பந்தரும், சுமந்திரனும்தான் என்று கூறிக்கொண்டாலும், சம்பந்தரையே வழிநடத்துகின்ற சுமந்திரன்தான் காரணம் என்பது தமிழ் மக்களின் ஒரே குற்றச்சாட்டாக இருக்கின்றது.

யார் இந்தச் சுமந்திரன்? இவர் எங்கிருந்து வந்தார்?

தமிழினம் பேரழிவைச் சந்தித்து முடியும் வரை மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் என்ற இந்த நபர் யார் என்பது உலகில் ஒருவருக்கும் தெரிந்திருக்கவில்லை. யாழ்ப்பாணத்தில் பிறந்திருந்தபோதும், கொழும்பில் சுகபோகமாக வாழ்ந்த வழக்கறிஞரான இவர், 2010 ஏப்ரலில் நடந்த சிறீலங்காவின் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளராக அல்ல, தேசியப் பட்டியல் உறுப்பினராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் உள்நுழைக்கப்படுகின்றார். அதன் பின்னர்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தன் இலக்கைவிட்டு திசை மாறிப் பயணிக்கத் தொடங்கியது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் இருந்த தமிழ்த் தேசிய சக்திகள் அனைத்தும் திட்டமிட்டு வெளியேற்றப்படுகின்றன. வெளியேறாதவர்கள் வெளியேற நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இறுதியில் ஓரிருவரின் கட்டிற்குள் கூட்டமைப்பு கொண்டுவரப்படுகின்றது. ஆனாலும், விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு என்ற ஒரே காரணத்திற்காக, மக்கள் அதற்கான ஆதரவை தொடர்ந்து வழங்குகின்றார்கள். எனினும் அந்த நிலைமை இந்த உள்ளூராட்சி சபைக்கான தேர்தலில் முற்றாக மாற்றமடைந்துள்ளது. வெற்றி பெறுவதற்கான கடும் சவால்களை கூட்டமைப்பு எதிர்கொண்டுள்ளது.

ஆனாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகப்பெரிய வெற்றியைப் பெறும் என்று சுமந்திரனும் சம்பந்தரும் அடித்துக்கூறி வருகின்றனர். தமிழ் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்திருந்த போதும் 2015ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் யாழ். மாவட்டத்தில் கூட்டமைப்பின் வேட்பாளராகப் போட்டியிட்ட சுமந்திரன் வெற்றிபெற்றார். மக்களின் கடும் எதிர்ப்பைச் சம்பாதித்த சுமந்திரன் எவ்வாறு வெற்றி பெற்றார் என்பது தமிழ் மக்களுக்கு இன்னும் புரியாத மர்மமாகவே உள்ளது. இப்போது தமிழ் மக்களின் இத்தனை கடும் எதிர்ப்புக்கும் மத்தியில் தாங்கள் பெரும் வெற்றி பெறுவோம் என்று இவர்கள் கூறிவருகின்றனர்.

ஒரு காலத்தில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஸ்மன் கதிர்காமர் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை ஒரு பயங்கரவாதப் போராட்டமாக சித்தரிப்பதில் முன்னின்று உழைத்தவர். விடுதலைப் புலிகள் இருந்த அக்காலத்தில் தமிழர் என்ற முகத்துடன் சிங்களப் பேரினவாதிகளுடன் இணைந்திருந்த அவரை, இந்த உலகம் ஒரு தமிழர் பிரதிநிதியாகவே ஏற்கொண்டிருந்தது. தமிழர்களின் விவகாரங்களை அவர் ஊடாகவே கையாளவும் விரும்பியது. அதனால்தான் அவர் கொல்லப்பட்டபோது விடுதலைப் புலிகள் மீது உலகம் கடும் சீற்றமும்கொண்டது.

விடுதலைப் புலிகள் இல்லாத இப்போதைய நிலையில், சிங்களத்துடன் முழுமையாக இணைந்திருந்து பணியாற்றும் ஒருவரை தமிழர்களின் பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள இந்த உலகம் விரும்பவில்லை. தமிழர்களின் பிரதிநிதியாக இருந்து கொண்டு, சிங்களப் பேரினவாதத்துடன் இணைந்து பணியாற்றுபவர்களையே அது தமிழர்களின் பிரிதிநிதியாக அங்கீகரிக்க முன்வருகின்றது. அவ்வாறான ஒரு பிரதிநிதியாகவே சுமந்திரனை இந்த உலகம் பார்க்கின்றது. எனவே, தேர்தல்களின் இவர் போன்றவர்கள் வெற்றி பெறவேண்டியது கட்டாயமாகியுள்ளது. எனவே, இவர்களின் வெற்றிகள் தீர்மானிக்கப்பட்டவையாகவே இருக்கப்போகின்றன.

கதிர்காமருக்கு தமிழ் மக்களால் ஆபத்தென்று சிறீலங்கா கடுமையான பாதுகாப்பு வழங்கியது. இன்று சுமந்திரனுக்கும் தமிழ் மக்களால் ஆபத்தென்று கடுமையான பாதுகாப்பு வழங்குகின்றது. அதனால்தான் சுமந்திரனைத் தமிழர்கள் ‘சின்னக் கதிர்காமர்’ என்று அழைக்கின்றார்கள்.

தமிழர்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவர்கள்தான் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக இருக்கப்போகின்றார்கள். வெளிநாடுகளில் இருந்து வரும் அரசியல் தலைவர்களும், பிரமுகர்களும் தமிழர்களின் பிரதிநிதிகளாக இவர்களையேதான் சந்திக்கப்போகின்றார்கள். இவர்கள் கூறுவதைத்தான் செவிமடுக்கப்போகின்றார்கள். இந்த நிலையை தங்கள் அரசியல் வெற்றிகளின் மூலம் தமிழ் மக்கள் எவ்வாறு மாற்றியமைக்கப்போகின்றார்கள் என்பதுதான் இப்போதுள்ள ஒரேயொரு கேள்வி.

சுமந்திரன் ஒரு தேசத்துரோகி

மண் அள்ளித் தூற்றி கதறி அழுத தாய்மார்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். வவுனியா தபால் நிலையத்துக்கு அருகாமையில் கடந்த 13ம் திகதி நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், காணாமல் போனோர் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் எதுவித நடவடிக்கையையும் எடுக்க முன்வரவில்லை என்று குற்றஞ்சாட்டினர்.

324
சாகும்வரை உண்ணாவிரதம்
துரோகம் மூலம் ஸ்ரீ லங்கா
01

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளினால் வவுனியாவில் முன்னெடுக்கப்பட்டு வரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் 330 நாட்களை கடந்துள்ள நிலையில், 324வது நாளன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது, துரோகிகள் என வட்டமிடப்பட்டு இலக்கமிடப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்கள் பொறிக்கப்பட்ட பதாகைக்கு முன்பாக கதறியழுத காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களை காட்டி இவர்கள் துரோகிகள் எனவும் மண் அள்ளித் தூவியிருந்தனர்.

இதேவேளை பதாகையில் இருந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் படங்களுக்கு அடித்தும் அதற்கு முன்பாக இருந்து ஒப்பாரி வைத்த தாய்மார் இவர்களாலேயே தமது பிள்ளைகள் வெளிவராமல் உள்ளனர் எனவும் தெரிவித்ததுடன் ஜனாதிபதியின் சந்திப்பின்போது சுமந்திரன் குழப்பத்தை ஏற்படுத்தியதாகவும், சுமந்திரன் ஒரு துரோகி எனவும் தெரிவித்து கதறியழுததுடன் பல தாய்மார் மயக்கமுற்றும் வீழ்ந்தனர்.

இந் நிலையில் இன்றை தினம் பொங்கல் திருநாள் கொண்டாடப்படவுள்ள நிலையில்தமது பிள்ளைகள் வருவார்களா என்ற ஏக்கத்தினையும் வெளியிட்டிருந்தனர்.

ஊடகங்கள் மூலமாக கூட்டமைப்பை மக்களிடம் திணிக்க நினைக்கிறார்கள்

ஜனநாயகத்தின் பாதுகாவலர்களாக காண்பிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இன்று வன்முறை ஊடாகவும், அதிகாரம் ஊடாகவும், தாங்கள் நினைப்பதை ஊடகங்கள் ஊடாக மக்களிடம் திணிக்க நினைக்கிறார்கள். ஏக்கிய இராஜ்ய என்பது ஒற்றையாட்சியே என ஊடகங்கள் சொல்வது பொய் அல்ல என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரி வித்துள்ளார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

இதன் போது மேலும் அவர் கூறுகையில், அண்மையில் நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் பிரசார கூட்டத்தில் ஊடகங்கள் திருந்துங்கள் அல்லது திருத்தப்படுவீர்கள் என அக் கட்சியின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார்.

இது வன்முறை மற்றும் அதிகாரம் ஊடாக தாங்கள் விரும்பும் கருத்துக்களை மக்களிடம் திணிப்பதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எடுக்கும் நடவடிக்கையே ஆகும். பிரித்தானியா போன்ற நாடுகளை உதாரணம் காட்டி யுனிட்டரி ஸ்டேட் இந்த நாட்டுக்கு பொருத்தமற்றது என இடைக்கால அறிக்கையில் கூறப்பட்டதை ஒற்றையாட்சி இந்த நாட்டுக்கு பொருத்தமற்றது என கூறியுள்ளதாக சுமந்திரன் கூறும்போது, ஏக்கிய இராஜ்ய என்பது ஒருமித்த நாடு அல்ல. ஒற்றையாட்சியே என ஊடகங்கள் எழுதுவது பொய் அல்ல. அது தமிழ் இனத் திற்கு ஊடகங்கள் செய்ய வேண்டிய மிகப்பெரிய கடமையாகும். மேலும் இவர்கள் தங்களை ஜனநாயகத்தின் காவலாளிகளாக காட்டிக்கொண்டு மறு பக்கம் ஊடகங்களை அடக்கும் செயல் ஏற்றுக்கொள்ள கூடியதல்ல என அவர் மேலும் தெரிவித்தார்.

2020இல் மீன் ஏற்றுமதியில் சிறீலங்கா 3வது!

2020ம் ஆண்டளவில் மீன் ஏற்றுமதியில் சிறீலங்காவை மூன்றாவது இடத்திற்கு முன்னேற்றுவது எமது இலக்காகும் என்று அந்நாட்டின் கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். தற்போது மீன் ஏற்றுமதித் துறையில் சிறீலங்கா 11வது இடத்தில் உள்ளது என, அரசாங்க தகவல் திணைக்கள செய்திகள் குறிப்பிட்டுள்ளன. இதற்கமைய, கடற்றொழில் துறையின் வளர்ச்சியை தொடர்ந்தும் மேற்கொள்ள எதிர்பார்ப்பதாக சிறீலங்கா அமைச்சர் மகிந்த அமரவீர மேலும் கூறியுள்ளார்.

44வது ஆண்டு நினைவுதினம்

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையின் 44வது நினைவு தினம் கடந்த 10ம் திகதி யாழில் நடைபெற்றது. படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக யாழ் முற்றவெளியில் அமைந்துள்ள நினைவத்தூபியில் இந் நிகழ்வு நடைபெற்றது. 1974ம் ஆண்டு யாழில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் போது இனப்படுகொலை ஆட்சியாளர்களால் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக முற்றவெளியில் அமைக்கப்பட்டுள்ள இவ் நினைவத் தூபியில் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

சாட்சிக்கு சிறைத்தண்டனை

வித்தியா படுகொலை வழக்கின் சாட்சிகளில் ஒருவரான இலங்கேஸ்வரனுக்கு 3 மாத சிறைத் தண்டனை விதித்து ஊர்காவற்றுறை நீதிவான் தீர்ப்பளித்துள்ளார். குறித்த நபர் மது போதையில் வாகனம் செலுத்தியமை வாகன அனுமதிப்பத்திரம், வாகன காப்புறுதிப் பத்திரம், வாகன வரிப்பத்திரம் ஆகியன இல்லாது வாகனம் செலுத்தியமை மற்றும் விபத்து ஏற்படுவதை தடுக்காமை போன்ற 6 குற்றச்சாட்டுக்களின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டதையடுத்து இத் தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்நிலையில், குறித்த நபருக்கு 3 மாத சிறைத் தண்டனையும் 18 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்து ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கிளிநொச்சியில் உயிருடன் சிசு மீட்பு

கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மித்த பகுதியில் பிறந்து சில மணி நேரங்களே ஆன சிசு ஒன்று பெற்றோரால் கைவிடப்பட்ட நிலையில் கடந்த 10ம் திகதி உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. மீட்கப்பட்ட சிசு கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. மீட்கப்பட்ட சிசுவின் பெற்றோர் தொடர்பில் கிளிநொச்சியிலுள்ள சிறீலங்கா காவல்துறை தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.

முன்னாள் தூதர் ஜாலிய விக்ரமசூரியவிடம்

அமெரிக்கா போர்க் குற்ற விசாரணையா?

அமெரிக்காவில் சிறீலங்காத் தூதுவராக இருந்த ஜாலிய விக்ரமசூரியவிடம் அமெரிக்கா போர்க் குற்றங்கள் தொடர்பான விடயங்களை அறிந்துகொள்ள முனைந்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன. மகிந்த ராஜபக்சவின் உறவினரான ஜாலிய விக்ரமசூரிய, 2005ம் ஆண்டு முதல் 2008ம் ஆண்டு வரையில் அமெரிக்க துணைத்தூதராக இருந்ததுடன், பின்னர் அமெரிக்காவுக்கான தூதுவராக பதவி உயர்த்தப்பட்டிருந்தார். அமெரிக்காவில் சிறீலங்காத் தூதுவராக செயற்பட்டபோது, தூதுவராலயத்திற்கான கட்டடத்தை கொள்வனவு செய்வதற்காக சிறீலங்கா அரசினால் வழங்கப்பட்ட நிதியில் 3 இலட்சத்து 32 ஆயிரம் அமெரிக்க டொலர்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியதாக ஜாலிய விக்ரமசூரிய மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. கட்டடத்தைக் கொள்வனவு செய்வதற்கு வழங்கப்பட்ட 66 இலட்சம் அமெரிக்க டொலர்களில், மூன்று இலட்சத்து 32 ஆயிரம் அமெரிக்க டொலர்களை சொந்தத் தேவைக்கு ஜாலிய விக்ரமசூரிய பயன்படுத்தியுள்ளதாக நிதிக்குற்றப் பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டது.

தான் கைது செய்யப்படலாம் என்பதைத் தெரிந்துகொண்ட ஜாலிய விக்ரமசூரிய, தப்பித்து வெளிநாட்டிற்கு செல்லவிருந்த நிலையில் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து, சிறீலங்கா நிதிக் குற்றப் பிரிவினரால் 2016ம் ஆண்டு நவம்பர் மாதம் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

தனது கண் சிகிச்சைக்காக வெளிநாடு செல்ல நீதிமன்றத்தில் அனுமதி வேண்டியிருந்த ஜாலிய விக்ரமசூரியவுக்கு நிபந்தனையுடன் எட்டு வாரங்களுக்கு உலகில் எந்த நாட்டிற்கும் சிகிச்சைக்காக செல்ல நீதிமன்றத்தால் அனுமதி வழங்கப்பட்டு, அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 2017 யூலையில் பிணை வழங்கியது. நீதிமன்றத்தில் குறிப்பிட்ட காலத்தில் முன்னிலையாக வேண்டும் என்ற நிபந்தனையுடனேயே அவருக்கு பிணை வழங்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் ஜாலிய விக்ரமசூரிய மருத்துவ தேவைகளுக்காக அமெரிக்காவிற்கு சென்றார். ஆனால், குறிப்பிட்ட காலம் முடிந்தும் அவர் நீதிமன்றில் முன்னிலையாகவில்லை. நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படாமையால் நிதிக் குற்றப் பிரிவினரின் கோரிக்கைக்கு அமைய, பகிரங்க பிடியாணைக்கான உத்தரவை நீதிமன்று கடந்த 5ம் திகதி பிறப்பித்தது. இந்நிலையில், நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாமைக்கான காரணங்களை அவரது சட்டத்தரணி சஞ்சய வீரவிக்ரம நீதிமன்றத்திடம் தெளிவுபடுத்தியுள்ளார். அதில் அமெரிக்காவைவிட்டு வெளியேற ஜாலிய விக்ரமசூரியவிற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள தகவலில் குறிப்பிட்டுள்ளதாவது, அமெரிக்காவில் சிகிச்சை பெற்ற அவர், மேலதிக சிகிச்சைக்காக வேறு ஒரு நாட்டிற்கு பயணிக்க அமெரிக்கா விமான நிலையத்திற்கு வந்தபோது, அமெரிக்கா விமான நிலைய அதிகாரிகளால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதுடன், அமெரிக்காவில் இருந்து வெளியேற முடியாதெனவும் அவ்வாறு வெளியேற முற்பட்டால் கைது செய்ய நேரிடும் எனவும் அமெரிக்க விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தன்மீது விசாரணை நடைபெறுவதால் தன்னை அமெரிக்காவை விட்டு வெளியேற அனுதிக்க வேண்டாம் என சிறீலங்கா வெளிவிவகார அமைச்சு, அமெரிக்கா அரசிடம் முன்வைத்த கோரிக்கையே இதற்கு காரணம் என்று அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்ததாக ஜாலிய விக்ரமசூரிய கூறியுள்ளார்.

நீதிமன்றத்தில் முன்னிலையாகாவிட்டால் தன்னை கைது செய்ய உத்தரவிட்டுள்ள அதேவேளை அமெரிக்காவில் இருந்து வெளியேற முற்பட்டால் கைது செய்ய சிறீலங்கா அரசாங்கம் அனுமதித்துள்ள நிலையில் தான்னால் நீதிமன்றத்தில் முன்னிலையாக முடியாதுள்ளதென்று அவர் கூறியுள்ளார். எவ்வாறாயினும் இலங்கையில் நடந்ததாக கூறப்படும் போர்க் குற்றங்களைப் பற்றிய தகவல்களை தெரிவித்தால், தனக்கு ஒத்துழைப்பு வழங்குவதாக அமெரிக்க அதிகாரிகள் கூறியதாகவும், எனினும் தான் அதை கடுமையாக நிராகரித்ததாகவும் ஜாலிய விக்ரமசூரிய கூறியுள்ளதாக அவரது சட்டத்தரணி குறிப்பிட்டுள்ளார்.

இதுஇவ்வாறிருக்க, இராணுவ அதிகாரியிடம் போர்க் குற்றங்கள் தொடர்பாக பிரித்தானியா விசாரணை நடத்தியிருப்பதாக சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. பிரித்தானியாவிற்கு பயணம் மேற்கொண்ட இராணுவ அதிகாரியிடமே, போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்டதாக கூறப்பட்டுள்ளது. எப்போது இந்த விசாரணை நடத்தப்பட்டது, விசாரணைக்குள்ளாக்கப்பட்ட இராணுவ அதிகாரி யார் என்ற விவரங்கள் எதையும் அந்த சிங்கள ஊடகம் வெளியிடவில்லை. புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கைக்கு அமையவே பிரித்தானியா இந்த விசாரணையை நடத்தியிருப்பதாக அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

அவலச் சாவுகளும் அகால மரணங்களும்

கொக்காவிலில் விபத்தில் நால்வர் பலி!

கொக்காவில் பழைய முறிகண்டிப்பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வாகன சாரதி உட்பட நால்வர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி அதிவேகமாக பயணித்த ஹயஸ் ரக வாகனம் ஒன்று, பழுதடைந்த நிலையில் பழைய முறிகண்டிப்பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் யாழ் – அல்வாய் வடக்கு பகுதியைச் சேர்ந்த, 24 வயதான நவரத்தினம் அருண், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 36 வயதான சந்திரசேகரம் ஜெயசந்திரன், யாழ். மாலு சந்தி பகுதியை சேர்ந்த 19 வயதான சிவசுப்பிரமணியம் சிந்துஜன் மற்றும் யாழ். பருத்திதுறையை சேர்ந்த 19 வயதான சின்னத்துரை கிருஸ்ணரூபன் ஆகியோர் உயிரிழந்துள்ளனர். இதேவேளை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 19 வயதுடைய பி.துவாரகன் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

யானை தாக்கியதில் நால்வர் பலி

1. ஏறாவூர்ப்பற்று, வெள்ளைக்கல்மலைப் பகுதியில், காட்டு யானையொன்றின் தாக்குதலுக்கு உள்ளான விவசாயி ஒருவர், கடந்த 7ம் திகதி உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவத்தில், வந்தாறுமூலை பிரதான வீதியைச் சேர்ந்த முத்துலிங்கம் சுந்தரலிங்கம் (51 வயது) என்பவரே உயிரிழந்தவராவார். குறித்த நபர், மாடுகளைப் பராமரித்துக் கொண்டு அப்பகுதிலுள்ள வாடியில் இருந்தபோது, காட்டிலிருந்து வந்த யானைகளில் ஒன்று, அவரைத் தாக்கிக் கொன்றுள்ளது.

2. காட்டு யானையால் தாக்கப்பட்ட விவசாயி ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் கரடியனாறு கார்மலைப் பகுதியில் கடந்த 10ம் திகதி இடம்பெற்றது. ஏறாவூர் பெண் பாடசாலை வீதியைச் சேர்ந்த சின்னலெப்பை நூர்முஹம்மது (56) என்பவரே உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்பட்டது.

3. மட்டக்களப்பு ஆயித்தியமலை உன்னிச்சை கார்மேல் பகுதியில் காட்டு யானை தாக்கியதில் கடந்த 11ம் திகதி விவசாயி ஒருவர் உயிரிழந்தார். ஏறாவூர் ஐயங்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயதுடைய மலையார் சின்னத்தம்பி என்ற விவசாயியே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். குறித்த வயல் பகுதியில் சம்பவ தினமான அதிகாலை 5 மணிக்குச் சென்றபோது யானையின் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

4. மட்டு. கிரான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கற்கிளாச்சோலை பகுதியில் காட்டு யானை தாக்கி விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த 14ம் திகதி பொங்கல் தினத்தன்று காலை 7 மணியளவில் இடம்பெற்றுள்ள இச்சம்பவத்தில் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலுள்ள சித்தாண்டி பிரதான வீதியை அண்டி வாழும் தம்பிமுத்து கந்தசாமி (வயது 57) என்ற விவசாயியே உயிழந்துள்ளார். வயல் பகுதியூடாக வரும்போது குறிக்கிட்ட காட்டு யானை இவரைத் தாக்கியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

விபத்தில் காயமடைந்த முதியவர் பலி

யாழ்ப்பாணம், நீர்வேலிப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்றுவந்த முதியவர் கடந்த 9ம் திகதி உயிரிழந்தார். கடந்த 2ம் திகதி வானொன்றும் முச்சக்கரவண்டியொன்றும் மோதி விபத்திற்குள்ளாகின. இதில் பள்ளிக்குச் சென்ற முதல் நாளே 6 வயது சிறுமி உட்பட இருவர் உயிரிழந்தனர். இருவர் காயமடைந்த நிலையில், யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்நிலையில் காயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 65 வயதுடைய துரைசிங்கம் என்பவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இளம் தந்தை விபத்தில் சாவு

மட்டக்களப்பு, மண்டூர் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். மதுவரித் திணைக்களத்தில் கடமைபுரியும் ஒரு வயதுக் குழந்தையின் தந்தையான கிருஷ்ணப்பிள்ளை வாசன் (வயது–33) என்பவரே உயிரிழந்தவராவார். வவுணதீவு இலுப்படிச்சேனையிலிருந்து உந்துருளியில், அம்பாறைக்கு கடமைக்காக சென்றவேளையில் பேருந்தில் மோதுண்டதில் இவ் விபத்து இடம்பெற்றது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

சொகுசுப் பேருந்து சேவை / LOCATION D'AUTOCARS
LOURDES, ESPAGNE, PORTUGAL & PARTOUT EN EUROPE
எங்களிடம் 16 முதல் 77 இருக்கைகள் கொண்ட
சொகுசுப் பேருந்துகள் தமிழ் சாரதிகளுடன் வாடகைக்கு உண்டு
Tél: 0 651 651 729 - 06 95 95 63 73
www.cityexpress.fr / contact@cityexpress.fr / facebook: CityExpressParis
CITY EXPRESS We Move the Businessclass

தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும்..?

‘தாயகத்தில் இருந்து’ காந்தரூபன்

324
சாகும்வரை உண்ணாவிரதம்
துரோகம் மூலம் ஸ்ரீ லங்க
01
02
04

யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் தமிழர் தாயகத்தில் மீண்டும் ஒரு தேர்தல் நடைபெறவிருக்கின்றது. இந்தத் தேர்தல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் பலப் பரீட்சையாக அமையப்போகின்றது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலைப் போன்றே இந்தத் தேர்தலிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மீது தமிழ் மக்களின் ஆதரவு அலை வெளிப்பட்டிருக்கின்றது.

எனினும், கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட, தற்போது அரசியல் களச் சூழ்நிலை மாறியிருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்களின் மன உணர்வுகளை மதிக்காமல், தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைக் குழிதோண்டிப் புதைக்கும் நோக்கத்துடன் செயற்படுகின்றது.

இலங்கையில் ஒற்றையாட்சியே இருக்க வேண்டும் எனக் கூட்டமைப்புக் கூறுகின்றது. ஒற்றையாட்சிக்கும் பௌத்த மதத்திற்கும் முன்னுரிமை அளிக்கும் அரசியலமைப்புக்கு கூட்டமைப்பு பூரண ஆதரவை வழங்கியிருக்கின்றது.

கடந்த முப்பது வருட காலமாக நடைபெற்ற யுத்தத்தால் தமிழ் மக்கள் அதிக இழப்புக்களைச் சந்தித்தனர். சுமார் நாற்பதாயிரத்திற்கு மேற்பட்ட மாவீரர்கள் தங்கள் உயிர்களைத் தியாகம் செய்தனர். சுமார் இரண்டு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கில் சுமார் 90 ஆயிரம் வரையான விதவைகள் உருவாகியுள்ளனர். ஆயிரக்கணக்கான சிறுவர்கள் பெற்றோரை இழந்திருக்கின்றனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந்திருக்கின்றனர். ஏராள மானவர்களின் கை, கால்கள் இழந்து மாற்றுத்திறனாளிகளாகியுள்ளனர்.

காணாமற்போனோரின் உறவினர்கள் கடந்த கடந்த 13 ஆம் திகதி வவுனியாவில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். அதில் கலந்துகொண்டவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கடுமையாக வசைபாடினர்.

தங்கள் குடும்பத்தில் உள்ள உழைக்கும் பிள்ளைகளை, கணவர்களை யுத்தத்திற்குப் பலிகொடுத்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் இன்று ஒருநேர உணவுக்குக்கூட கஸ்டப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால், யுத்தத்தையும் தமிழ் மக்களின் சாவுகளையும் இழப்புக்களையும் வைத்து அரசியல் செய்யும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் தங்கியிருந்து அரசியல் செய்வதையே விரும்புகின்றனர்.

எதிர்க்கட்சித்த தலைவரும் கூட்டமைப்புத் தலைவருமான இரா.சம்பந்தனும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும் கொழும்பில் இருந்து எடுக்கும் முடிவுகளை ஏனையோர் செயற்படுத்துபவர்களாக உள்ளனர். அவர்களின் செயற்பாடுகளில் தமிழ் மக்கள் கடும் அதிருப்தி அடைந்திருக்கின்றனர்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, உட்பட வடக்கு கிழக்கின் பல மாவட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. வீட்டுச் சின்னத்துடன் அச்சிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களுடன் செல்லும் வேட்பாளர்களிடம் மக்கள் கேள்வி கேட்கத் தொடங்கியிருக்கின்றனர்.

காணாமற்போனோரின் உறவினர்கள் கடந்த கடந்த 13 ஆம் திகதி வவுனியாவில்

தொடர்ச்சி 26ம் பக்கம்

பிரதம விருந்தினராக இளவரசர் எட்வேர்ட்?

சிறீலங்காவின் 70வது சுதந்திர தின கொண்டாட்டங்களில் பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட் பிரதம விருந்தினராக பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கொழும்பு ஆங்கில ஊடகமொன்று இதனைத் தெரிவித்துள்ளது. சிறீலங்காவின் 70வது சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 4ம் திகதி காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பிரித்தானிய மகாராணி இரண்டாவது எலிசபெத் மற்றும் எடின்பரோ கோமகன் இளவரசர் பிலிப் ஆகியோரின் இளைய மகனான இளவரசர் எட்வேர்ட் பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுவதாக உள்நாட்டு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

400 ஆண்டுகள் அந்நியர் ஆதிக்கத்தில் இருந்த இலங்கைத் தீவு 150 ஆண்டுகள் பிரித்தானியரின் ஆதிக்கத்தில் இருந்து 1948ம் ஆண்டு விடுதலை பெற்றது. இதையடுத்து 1998ம் ஆண்டு இடம்பெற்ற சிறீலங்காவின் 50வது சுதந்திர தின கொண்டாட்டத்தின் போது பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக அவரது மூத்த மகன் இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக பங்கேற்றிருந்தார். இந்த நிலையில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள 70வது சுதந்திரதின நிகழ்வில் பிரித்தானியாவின் இளவரசர் எட்வேர்ட் பிரதம விருந்தினராக பங்கேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஜப்பானில் புகலிடம் கோரும் இலங்கையர்கள்

இலங்கையர்கள் சிலர் கடந்த ஆண்டு ஜப்பானில் புகலிடம் கோரியுள்ளனர். இந்த நிலையில் ஜப்பானிய நுழைவிசைவு நடைமுறைகள் கடுமையாக்கப்படும் என்று அந்த நாட்டு அரசு அறிவித்துள்ளது. பெரும் எண்ணிக்கையிலானவர்கள் பாதுகாப்பை விடவும் தொழில் வாய்ப்புக்களை முதனிலையாகக் கொண்டே புகலிடம் கோரி வருவதாகத் தெரிவித்துள்ளது. உரிய காரணங்கள் இன்றிப் புகலிடம் கோரும் நபர்களை நாடு கடத்தக்கூடிய வகையில் சட்டங்கள் இயற்றப்படும் என்று ஜப்பான் அரசு அறிவித்துள்ளது.

பளை விபத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி பளை பகுதியில் இடம்பெற்ற வெடி விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். பளை பகுதியை சேர்ந்த சிவமூர்த்தி சுரேந்திரன் (வயது 38) என்பவரே படுகாயமடைந்துள்ளார். குறித்த நபர் மிதிவெடி அகற்றும் நிறுவனம் ஒன்றில் வேலை செய்பவர் எனவும், அவர் வெடிபொருள் ஒன்றினை பிரித்து வெடி மருந்தினை அகற்ற முற்பட்டபோது குறித்த வெடிபொருள் வெடித்ததால் அவர் படுகாயமடைந்துள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பரிஸ்தமிழ் www.ParisTamil.Com .கொம்
● பிரான்ஸ் செய்திகள்
● பிரான்ஸ் நிர்வாக தகவல்கள் — தமிழில்
WWW.PARISTAMIL.COM

இலங்கைத் தீவின் புதிய வரைபடம்

சுமார் 18 வருடங்களின் பின்னர் இலங்கைத் தீவின் புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிறீலங்காவின் நில அளவைத் திணைக்களத்தினால் இதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த காலப்பகுதியில் இலங்கைத் தீவின் நிலப்பரப்பில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதுடன், புதிய வரைப்படத்தில் இலங்கையின் துறைமுக நகரமும் உள்ளடக்கப்படவுள்ளது.



இதேவேளை இலங்கையின் தெற்கு மற்றும் கிழக்கு கடற்கரைப் பரப்புக்கள் அதிகரித்துள்ளதுடன், சிலாபம் கடற்கரை குறைவடைந்துள்ளதாக புதிய வரைபடம் மூலம் விளங்குவதாக சிறீலங்கா நில அளவையாளர் அதிகாரி உதயகாந்த தெரிவித்துள்ளார். இலங்கையின் புதிய வரைபடமானது செய்மதி உதவியுடன் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இதன் பணிகள் நிறைவடைந்ததும் புதிய வரைபடமானது உத்தியோகப்பூர்வமாக நில அளவைத் திணைக்களத்தின் இணையத்தளத்தில் வெளியிடப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் 5 கோடி பெறுமதியான தங்கம் மீட்பு

காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து சுமார் 5 கோடி ரூபா பெறுமதியான 70 தங்க பிஸ்கட்டுகள் சிறீலங்கா இனப்படுகொலைக் கடற்படையினரால் கடந்த 17ம் திகதி கைப்பற்றப்பட்டுள்ளது.

கரை ஒதுங்கிய நிலையில் காணப்பட்ட வெற்று உரப்பைகளில் இருந்து இவ்வாறான தங்க பிஸ்கட்டுக்களை கண்டெடுத்ததாக யாழ் பிராந்திய கடற்படையின் உதவிப் பணிப்பாளர் ஆர். ஜெயந்த டி சில்வா தெரிவித்துள்ளர். ஒவ்வொன்றும் 100 கிராம் நிறையுடைய தங்க கட்டிகளாக 70 தங்க கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும், இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் இருந்து இந்தியாவுக்கு தங்கப் பவுன்கள் சட்டவிரோதமான முறையில் கடல் மார்க்கமாக கடத்தி செல்லப்படுதாகக் கூறப்படுகின்றது. இந்நிலையில், சிறீலங்காக் கடற்படையினர் நடத்திய சோதனையின் போதே இந்த தங்க பிஸ்கட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

155 தமிழ் அகதிகளை மீட்ட கனடா மீனவர் மரணம்!

1986ம் ஆண்டு நடக்கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 155 தமிழ் அகதிகளை மீட்ட கனடா நாட்டின் மீனவர் கஸ் டல்டன் (Gus Dalton) உடல்நலக்குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார். தெற்கு நியூஃபவுண்ட்லேண்ட் பகுதியில் 1986ம் வருடம் ஓகஸ்ட் மாதம் இவர் மீன்பிடிக்கச் சொன்ற போது, அவர் கண்ட காட்சி டல்டனை பதற்றம் அடையச் செய்தது. சுமார் 150 பேர் அட்லாண்டிக் நடுக்கடலில் உயிருக்காக போராடிக் கொண்டிருந்தனர். சற்றும் தாமதிக்காத டல்டன் தன்னுடைய திறந்தவெளி படகில் அனைவரையும் மீட்டார். சுமார் 30 ஆண்டுகளாக மீன்பிடி தொழிலில் இருந்த டல்டனுக்கு கடலில் தத்தளித்த தமிழ் அகதிகளை பார்த்ததும் பதற்றம் தான் முதலில் ஏற்பட்டதாம். எனினும் தன்னுடைன் வந்தவர்களின் உதவியுடன் படகில் மீட்க முடிந்தவர்கள் வரை மீட்டுவிட்டு, கனடா கடற்படைக்கு தகவல் கொடுத்து எஞ்சியவர்களையும் மீட்டுள்ளார் டல்டன். உயிருக்குப் போராடிய தங்களை காப்பாற்றியதற்காக டல்டனுடன் தமிழர்கள் பலரும் நட்பு பாராட்டத் தொடங்கினர். சுமார் 30 ஆண்டுகளுக்குப் பிறகு தங்களை கஸ் டல்டன் மீட்ட தினத்தை நினைவுகூரும் வகையில் அவரை சந்தித்து சிறப்பு பரிசுகளையும் தமிழ் அகதிகள் வழங்கினர். இந்நிலையில் 87 வயதான கஸ் டல்டன் கடந்த 16ம் திகதி உடல்நலக் குறைவு காரணமாக உயிரிழந்துள்ளார். அவரது இறுதிச் சடங்குகள் டல்டனின் சொந்த ஊரான அட்மிரல்ஸ் கடற்கரையில் நடைபெற்றபோது அதில் தமிழர்களும் கலந்துகொண்டனர்.

முன்னதாக, 2012ம் ஆண்டு நடைபெற்ற கனடியத் தமிழர் பேரவையின் விழாவில் கஸ் டல்டன் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

The National

அரிச்சந்திரன்
பதில்கள்

எனக்கு கிடைக்க இருந்த
ஒரு வாய்ப்பு கை
நழுவிப்போய்விட்டது.
இதற்காக மகிழ்ச்சியடைவதா,
வருத்தப்படுவதா என்றே
தெரியவில்லை
அரிச்சந்திரனே..?

கேள்வி:– வாய்ப்புக்கள் தானாக அமையுமா? அல்லது தேடித் தேடித்தான் அமைத்துக்கொள்ள வேண்டுமா..?

தர்மலிங்கம் புஸ்பராணி பிரான்ஸ்

பதில்:– வாய்ப்புக்களைத் தேடி அலைபவர்கள்தான் இந்த உலகில் ஏராளம். ஆனாலும் சிலருக்கு வாய்ப்புக்கள் தானாக அமைந்துவிடுவதுமுண்டு. கிடைத்த அந்த வாய்ப்புக்களைப் பயன்படுத்தி உலகப் புகழ் பெற்றவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர் தான். அவ்வாறு கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி வெற்றி பெற்றவர்களில் ஒருவர்தான் உயிரியலின் தோற்றத்தை விளக்கி, 'பரிணாமவியலின் தந்தை' என்று போற்றப்படுபவரும், மூடநம்பிக்கையில் இருந்து இந்த உலகத்தை மீட்டெடுத்த பெருமைக்குரியவருமான சார்ள்ஸ் டார்வின்.



எல்லாத் தந்தைகளையும் போலவே, தனது மகன் ஒரு மருத்துவராக வர வேண்டும் என்பது டார்வினின் தந்தை விருப்பம். அதனால் தனது ஆசைகளை மூட்டைகட்டி வைத்துவிட்டு அவரின் விருப்பிற்காக முதலில் மருத்துவம் படித்தார் டார்வின். ஆனால், அவருக்கு அதில் ஈடுபாடு இல்லாமையால் அந்தப் பணியில் அவரால் நீண்டநாட்கள் நிலைக்கமுடியவில்லை. பிறகு கிறிஸ்தவம் படித்தார். இறையியலில் பட்டம் பெற்ற டார்வின் ஏனோ கிறித்துவத் திருச்சபையில் உறுப்பினராகச் சேரவும் கூட மறுத்துவிட்டார். அதன் பின்னர்தான் HMS Beagle என்ற பிரித்தானியாவின் ஆராய்ச்சிக் கப்பலில் கப்டனுக்கு துணையாக உயிரியல் நிபுணராக பணிபுரியும் வாய்ப்பு அவருக்கு தேடிவந்தது. சரியாக ஐந்து ஆண்டுகள் (1831-1836) வரை அந்தக் கப்பலில் டார்வின் பணிபுரிந்தார். இந்த 5 ஆண்டுகளில் அவர் பணியாற்றிய கப்பல் பல்வேறு கண்டங்களுக்கும் பயணம் மேற்கொண்டது. இந்தப் பயணங்களினால் அவர் எதிர்பார்த்த வாய்ப்பு அவருக்கு தானாக வந்தமைந்தது. உலகெங்கிலுமுள்ள உயிரினங்களின் தோற்றங்களை ஒப்பிட்டு ஆராயும் வாய்ப்பு அவருக்கு இந்தக் கப்பல் பயணம் வழங்கியது. இந்தப் பயணத்தினால்தான் ஒவ்வொரு உயிரினங்களுக்கு இடையே இருந்த ஒற்றுமையையும், நெருக்கத்தையும் அவருக்கு தெளிவாக புரியவைத்தது. இந்த ஆராய்ச்சியின் அடிப்படையில் 1838ல் டார்வின் தன்னுடைய பயண அனுபவங்களைத் தொகுத்து The Voyage of the Beagle என்ற நூலை எழுதினார். அதன் பின்னர் தான் 'இயற்கைத் தேர்வு' என்ற கொள்கையை அவர் உருவாக்கினார். 1856ல் தன்னுடைய கொள்கையை விரிவாக எடுத்துரைக்கும் வகையில் கடும் எதிர்ப்பிற்கும், அச்சுறுத்தல்களுக்கும் மத்தியில் 'உயிரினங்களின் தோற்றம்' என்ற நூலை எழுதி வெளியிட்டார். மருத்துவராகவோ அல்லது கிறித்துவப் பாதிரியாராகவோ அவர் இருந்திருந்தால் 200 ஆண்டுகள் கழிந்து இன்று அவரைப் பற்றி யாருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பு இருந்திருக்காது. ஆனால், இன்று உலகம் போற்றும் ஒரு அறிவியலின் தந்தையாக அவர் இருப்பதற்கு காரணம் தனக்கு கிடைத்த அந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தியதுதான்.

எனவே, வாய்ப்புக்கள் தானாக அமைந்தாலும், தேடித்தேடி அமைத்தாலும் கிடைத்த வாய்ப்பை எவ்வாறு பயன்படுத்திக்கொள்கின்றோம் என்பதில் தான் திறமை அடங்கியிருக்கின்றது.

கேள்வி:– எனக்கு கிடைக்க இருந்த ஒரு வாய்ப்பு கை நழுவிப்போய்விட்டது. இதற்காக மகிழ்ச்சியடைவதா, வருத்தப்படுவதா என்றே தெரியவில்லை அரிச்சந்திரனே..?

மருதநாயகம் வசந்தன் இலண்டன் பிரித்தானியா

பதில்:– கைநழுவிப்போனபின் வருத்தப்படுவதில் எந்தவித ஆதாயமும் இருக்கப்போவதில்லை. சில வேளைகளில் பின்நாட்களில் அதற்காக நீங்கள் மகிழ்வடைகின்ற நிலைகூட ஏற்படலாம். அண்மையில் முகநூல் நண்பர் ஒருவர் பதிவிட்டிருந்த குட்டிக்கதை உங்களின் வருத்தத்தைப் போக்கக்கூடியதாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

'ஒரு கணினி நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத்தான். அடுத்து சின்னதாய் ஒரு விசாரணை. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக மின்னஞ்சல் முகவரியைக் கேட்டார்கள்.

மின்னஞ்சலா? தனக்கு அதுபற்றியெல்லாம் தெரியாது என்றான். கணினி நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்புகிறவனுக்கு மின்னஞ்சல் இல்லை, இணையத்தளங்கள் பற்றித் தெரியவில்லை என்று அவனுக்கு வேலை வழங்க மறுத்துவிட்டார்கள்.

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்ல. கையில் 10 ஈரோக்கள் இருந்தன. அதைக் கொண்டு சந்தையில் பழங்கள் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான். 10 ஈரோக்கள் இலாபம் கிடைத்தது. மீண்டும் பழங்கள் வாங்கி, மீண்டும் விற்பனை. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங்களில் பெரிய பழ வியாபாரி ஆகிவிட்டான்.

இந்தச் சூழ்நிலயில் ஒரு வங்கியில் கணக்கு திறப்பதற்காக அந்த வியாபாரி வங்கிக்குச் சென்றிருந்தார். அவரது விபரங்களைப் பதிவு செய்த வங்கி அதிகாரி, அவரிடம் மின்னஞ்சல் முகவரியைக் கேட்டார். வியாபாரி, 'மின்னஞ்சல் முகவரி இல்லை' என்று பதிலளிக்க, 'மின்னஞ்சல் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா..? உங்களுக்கு மட்டும் மின்னஞ்சல், இயைணத்தள வசதிகள் எல்லாம் இருந்திருந்தால்...?' என்று ஆச்சர்யமாய்க் கேட்டார் வங்கி அதிகாரி. 'அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கணினி நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்' என்றார் வியாபாரி.'

கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி

இலத்திரனியல் முகவரி : eelamurazu@gmail.com
தபால் முகவரி : Media Centre, BP 40, 93141 Bondy pdc
குறுந்தகவலாக (கைபேசி SMS) : 00 33 7 81 80 81 16

‘கிழக்கில் இருந்து’

எழுவான்

தமிழர் தாயகப் பகுதியில் பௌத்தத்தின் உச்சக்கட்ட ஆக்கிரமிப்பு

கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களின் இனப்பரம்பலைக் கட்டுப்படுத்த தென்னிலக்கை பேரினவாத சக்திகள் கடும் பிரேயத்தனம் கடந்த காலங்களில் எடுத்திருந்த நிலையில், 2007ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிருந்து கிழக்கு மாகாணம் பறிக்கப்பட்டதன் பின்னர், தமிழ் அரசியல் கட்சிகளின் அசமந்தப் போக்கினால் சிங்கள மயமாக்கும் தென்னிலக்கையின் கனவு கொஞ்சம் கொஞ்சமாக நிறைவேறுகிறது என்றே கூறவேண்டும்.

> தென்னிலங்கை அரசாங்கம் சிங்கள மக்களை குடியேற்றுவதற்காவும், தமிழர்களின் இனப்பரம்பலைக் கட்டுபடுத்துவதற்குமான முறையைக் கையாண்டுவருகிறது.

தென்தமிழீழம் எனக் கூறப்படும் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில், அம்பாறை மாவட்டத்திலுள்ள 20க்கும் மேற்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் 5 பிரிவு மாத்திரமே தனித் தமிழர்க்கு சொந்தமாகும். அதிலும், சிங்களப் பிரதேசத்தை அண்டிய எல்லைப் பகுதிகளில் சிங்கள பௌத்தத்தின் ஆக்கிரமிப்பு நாளாந்தம் முன்னெடுக்கப்படுகிறது. நாவிதன்வெளி பிரதேச செயலாளர் பிரிவின் எல்லைப் பகுதியான லவூக்கண சிங்கள பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சிங்களவர்கள் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் விவசாய, கால்நடை உற்பத்தியில் ஈடுபட்டுவருகின்றனர்.

> அம்பாறை மாவட்டத்தை சிங்கள மாவட்டமாக மாற்றிவிட்டார்கள், மட்டக்களப்பு மாவட்டத்தை மாற்றிக்கொண்டு வருவதை யாரும் கண்டுகொள்ளவில்லை.

அவ்வாறு, வளத்தாப்பிட்டி, மல்லிகைத்தீவு, வீரமுனை போன்ற பகுதிகளில் சிங்களவர்கள் மாத்திரமல்ல முஸ்லீம்களும் தமிழர்களின் நிலங்களை ஆக்கிரப்புச் செய்கின்றனர். இப்பகுதிகள் கடந்த 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களப் படைகளினாலும், முஸ்லிம் ஊர்காவல் படைகளினாலும் மேற்கொள்ளப்பட்ட வெறியாட்டத்தினால் நூற்றுக் கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அவர்களின் உடமைகள் சூறையாடப்பட்ட நிலையில், அவர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேற வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. ஆனால், அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றுவதற்கு தமிழ் தலைமைகள் உட்பட யாரும் முன்வரவில்லை. இதனை சாதகமாகப் பயன்படுத்தி சிங்களவர்களும், முஸ்லீம்கள் இப்பகுதியில் அத்துமீறிய குடியேற்றங்கள் மற்றும் விகாரை அமைக்கும் நடவடிக்கை இடம்பெறுகிறது.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கடந்த காலத்தில் இடம்பெற்ற போர் நடவடிக்கையைப் பயன்படுத்தி தமிழர்களின் பூர்விகக்காணிகளை சிங்களமும், முஸ்லீமும் ஆக்கிரமிப்பு செய்தது மாத்திரமின்றி முதலாவது இடத்திலிருந்த தமிழர்கள் இன்று மூன்றாவது நிலைக்கு தள்ளப்பபட்டுள்ளனர். இதனை எமது அரசியல் தலைமைகள் தட்டிக்கேட்கவில்லை. அத்துடன், அவர்களின் சொந்த இடத்தில் மீள்குடியேற்றம் மேற்கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை என்பது தமிழர்களின் குற்றச்சாட்டாகும்.


தொல்பொருள் எனும் பெயரில் விரைவில் தமிழர்களிடம் இருந்து பறிபோகவிருக்கும் மத்தளமலை முருகன் ஆலயப் பிரதேசம்.

மட்டக்ளப்பு மாவட்டத்தில் முன்னெப்போதும் இல்லாதவாறு பௌத்த மதத்தின் ஆதிக்கம் மேலோங்கியுள்ளது. கோறளைப்பற்று வடக்கு வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள புனாணை கிழக்கு கிராம சேவகர் பகுதியில், கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியில் புனாணை புகையிரத நிலையத்திற்கு முன்பாக அமைந்துள்ள படைமுகாமைக்கு அருகில் விகாரையை அமைத்து அதனைச் சூழ இன்று 150க்கும் மேற்பட்ட சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன. அதேபோன்று இதே பிரதேச செயலாளர் பிரிவில் இவ்வீதியில் நிலைகொண்டிருந்த ஆக்கிரமிப்புப் படைகள் வெளியேறிய பின்னர் அவர்களினால் அமைக்கப்பட்ட விகாரை விட்டுச் சென்றிருந்தனர். இன்று அந்த இடத்தில் பெரியளவில் விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. இவ்விடம் காட்டுப்பகுதியாகும். இங்கு யாரும் குடியிருக்க முடியாது. எனினும் தென்னிலங்கை அரசாங்கம் சிங்கள மக்களை குடியேற்றுவதற்காவும், தமிழர்களின் இனப்பரம்பலைக் கட்டுபடுத்துவதற்குமான முறையைக் கையாண்டுவருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் கோறளைப்பற்று தெற்கு கிரான், பள்ளிபளை, கோறளைப்பற்று போன்ற பிரதேச செயலாளர் பிரிவில் சிங்களவர்கள் ஒரு காலத்திலும் வசிக்காத நிலையில், அங்கு சிங்களவர்கள் வாழ்ந்தாக கூறி நூற்றுக்கணக்கான சிங்களவர்களை குடியேற்றியுள்ளனர்.

மட்டக்களப்பில் சிங்களக் குடியேற்றம் இன்று புதிய வடிவத்திலும் அரங்கேற்றப்பட்டுவருகிறது. அதாவது, மத்திய அரசாங்கத்தின் கீழ் வரும் திணைக்களகங்களில் காணப்படும் பதவி வெற்றிடங்களைப் பயன்படுத்தி அவர்களுக்கான நியமனங்கள் வழங்கப்படுகிறது.

தொடர்ச்சி 16ம் பக்கம்

ஜேர்மன் வாசி யாழில் மரணம்!

ஜேர்மனியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சுற்றுலாவுக்காக சென்ற பிரசை ஒருவர் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உயிரிழந்துள்ளார். ஜேர்மனியைச் சேர்ந்த 63 வயதுடைய எகேன் செபினே (Ecken Sebienne) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். உயிரிழந்த நபர் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையைச் சேர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துள்ளார். கடந்த 7ம் திகதி அவர் தனது மனைவியுடன் யாழ்ப்பாணத்திற்கு சென்று பல்வெறு இடங்களை சுற்றிப் பார்க்க சென்றுள்ளதுடன், திடீரென ஏற்பட்ட சுகயீனம் காரணமாக அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். திடீரென ஏற்பட்ட மாரடைப்பே அவரின் உயிரிழப்புக்கு காரணம் என மரண விசாரணை அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

சண்டையைத் தடுக்க முற்பட்டவர் தாக்கப்பட்டார்!

மதிலுக்கு வெளியேயும் உள்ளேயும் நின்ற இரு பெண்கள் வாக்குவாதப்பட்டதைத் தடுக்க மதிலால் எட்டிப் பார்த்தவர் கொட்டனால் தாக்கப்பட்டார். இந்தச் சம்பவம் யாழ். மிருசுவில் பாலாவியில் இடம்பெற்றது. அக்கா தங்கை இருவர் மதிலுக்கு உட்புறம் ஒருவரும் மதிலுக்கு வெளியே ஒருவரும் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். அதை அவதானித்த அக்காவின் கணவர் வாக்குவாதத்தை நிறுத்துமாறு மதிலால் எட்டிக் கூறியபோது கொட்டனால் தாக்கியதில் தலையில் காயமேற்பட்டு, சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இனப்படுகொலை இராணுவத்தினர் மாலி பயணம்!

மாலியில் இயல்பு நிலையை ஏற்படுத்தும் பணியில் ஈடுபட்டிருக்கும் ஐ.நா.வின் பாதுகாப்புப் படையில் இணைந்துகொள்ளும் முகமாக, சிறீலங்கா இனப்படுகொலை இராணுவத்தின் பெண்கள் பதினெட்டுப் பேர் கடந்த 10ம் திகதி மாலிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். ஏற்கனவே கடந்த 24ம் திகதி இனப்படுகொலை இராணுவத்தினர் 150 பேர் அடங்கிய குழுவொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. மாலியில் உள்ள ஐ.நா. படையில் இணைந்து பணியாற்ற மொத்தம் 200 இனப்படுகொலை இராணுவத்தினரை அனுப்பிவைக்க சிறீலங்கா முடிவுசெய்துள்ளது. இவர்கள், ஒரு வருட காலம் மாலியில் இருந்து பணியாற்றவுள்ளனர். அதன்படி, இதுவரை மொத்தமாக 168 பேர் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ளவர்கள் விரைவில் மாலிக்கு அனுப்பப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

செய்திகளும் எழும் கேள்விகளும்

தெய்வமகள்

செய்தி:- தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான மக்கள் ஆதரவு சரிந்துவிட்டது என்ற செய்தி பெப்ரவரி 11ம் திகதி வருமாக இருந்தால், புதிய அரசமைப்பை நிறைவேற்ற முடியாது போகும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

எழும் கேள்வி:- இது தமிழ் மக்களுக்கு நல்ல செய்திதானே..?

★★★★ ★★★★

செய்தி:- ஆயுதப் போராட்டத்துக்கு தந்தை செல்வாவே பிள்ளையார் சுழி போட்டார் என, வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

எழும் கேள்வி:- ஏன், அவர் என்ன ஆயுதம் தூக்கியா போராடினார்..?

★★★★ ★★★★

செய்தி:- யாழ்.நாக விகாரையின் முன்னாள் விகாராதிபதியின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் விகாரை அல்லது நினைவிடம் அமைக்கும் எண்ணம் எமக்கு இல்லை என நாக விகாரையின் தற்போதைய விகாராதிபதி சிறீ விமல தேரர் தெரிவித்தார்.

எழும் கேள்வி:- உங்களுக்கு இல்லை, பௌத்தத்தை விதைப்பவர்களுக்கு இல்லாமலா இருக்கும்..?

★★★★ ★★★★

செய்தி:- போராளிகளாக இருந்து தங்களுடன் இணைந்தவர்களை ஆட்சியாளர்களாக நியமித்துள்ளோம் என சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவே மகிந்த ராஜபக்ச ஆட்சியில் பிள்ளையானுக்கு முதலமைச்சர் பதவி வழங்கப்பட்டது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- இப்ப யாரை ஏமாற்ற மைத்திரி அவரை தொடர்ந்து தடுப்புக் காவலில் வைத்திருக்கின்றாராம்..?

★★★★ ★★★★

செய்தி:- ஏக்கிய ராச்சிய, ஒருமித்த நாடு என்பது தொடர்பில் எவரும் குழம்ப வேண்டிய தேவையில்லை. அதற்குரிய வரைவிலக்கணம் இடைக்கால அறிக்கையில் தெளிவாக கொடுக்கப்படுள்ளது என வடமாகாண எதிர்கட்சி தலைவர் சி.தவராசா தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- ஏக்கிய ராச்சிய (ஒரே இராச்சியம்) என்பதற்கு இடைக்கால அறிக்கையில் இரட்டை ஆட்சி என்று அர்த்தம் கொடுத்திருக்கின்றார்களோ..?

★★★★ ★★★★

செய்தி:- யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒழுக்கம் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இங்கு வாழ்பவர்களில் அதிகமானோர் சட்ட ஒழுங்குகளை மதிப்பதில்லை. இவ்வாறு சிறீலங்காவிற்கான யாழ். காவல் அத்தியட்சகர் விஜிர குணரத்ன தெரிவித்தார்.

எழும் கேள்வி:- சிறீலங்காச் சட்டங்களை அவர்கள் மதிப்பதில்லைப் போலும்..?

★★★★ ★★★★

செய்தி:- உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஒருவர் கிளிநொச்சி தொண்டமான் நகர் பிரதேசத்தில் உள்ள தனது வீட்டிற்கு முன்னால், பாடசாலை மாணவர்கள் 50 பேரை இணைத்துக் கொண்டு தேர்தல் பிரச்சார நிகழ்வொன்றை நடத்தியுள்ளார்.

எழும் கேள்வி:- தனியாக நின்று கூட்டம் வைத்தால் நல்லாகவா இருக்கும்..?

★★★★ ★★★★

செய்தி:- மைத்திரிபால சிறிசேனவும், ரணில் விக்கிரமசிங்கவும் களவு செய்ய மாட்டார்கள் என்று சிறீலங்காவின் முன்னாள் இனப்படுகொலைத் தலைவர் சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

எழும் கேள்வி:- எல்லாம் உங்களிடம் சொல்லிவிட்டா செய்கின்றார்கள்..?

★★★★ ★★★★

செய்தி:- சுமார் 18 வருடங்களின் பின்னர் இலங்கையின் புதிய வரைபடம் தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எழும் கேள்வி:- இலங்கைத் தீவு முழுவதும் புத்தர் சிலைகள் வைத்த வரைபடமா..?

★★★★ ★★★★

மரணம் ஒன்றே மாறாதது!

2018 புத்தாண்டு மலர்ந்து 3 வாரங்களை அண்மிக்கும் நிலையில், தமிழர் தாயகத்தில் மட்டும் அகாலமரணங்களின் எண்ணிக்கை 30 ஐத் தாண்டியுள்ளதாகத் தெரியவருகின்றது. இதில் குறிப்பாக வாகன விபத்துக்கள், படுகொலைகள், சிறு விபத்துக்கள் மற்றும் தற்கொலை மரணங்களும் உள்ளடங்கியுள்ளன.

புத்தாண்டு முதல்நாளே யாழ். கொழும்புத்துறையில் உந்துருளி விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்தனர். அதுவும் வேகமாக வந்த உந்துருளி வேகக்கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. உந்துருளியில் பயணம் செய்த இரண்டு இளைஞர்களும் உயிரிழந்துள்ளனர். இந்த ஆண்டில் இவர்கள் ஆரம்பித்துவைத்த அகால மரண பயணம் யாழ். வண்ணார் பண்ணைப் பகுதியில் பெரியதந்தையின் கோடரித்தாக்குதலுக்கு குழந்தை பலியானதுடன் கொலையாளியும் தற்கொலை செய்துகொண்ட சம்பவம் வரை தொடர்கின்றது.

யுத்தகாலத்தில் பத்திரிகையை புரட்டினால், குண்டுவீச்சு, செல்தாக்குதல், துப்பாக்கிச்சூடு என சாவிற்கு காரணம் தேடாமலே சாவின் பயணத்திற்கு காரணம் தயாராக இருக்கும். ஆனால், இன்று அவற்றை எல்லாம் தாண்டி, எமது மக்கள் பயணித்துக்கொண்டிருக்கின்றனர். அதனையும் மீறி அவலச்சாவுகள் காரணம் தேடமுன்னரே வழி மறித்து நிற்கின்றன. இவ்வாறான அகாலமரணங்களே பத்திரிகைகளை நிரப்பி நிற்கின்றன.

இவற்றுக்குக் காரணம் என்ன என்று நோக்கினால், போட்டிபோட்டு முண்டியடிக்கும் சமூகத்தின் தவறான எதிர்பார்ப்புகளே, இன்றைய அகால மரணங்களுக்கு காரணமாய் அமைந்து விடுகின்றன. வீட்டில் இருந்து உந்துருளியில் புறப்படும் போது, 'அம்மா நான் போறேன்' என்றுதான் சொல்லிவிட்டு போகிறார்கள். போய்வருகிறேன் என்ற காலம் எல்லாம் மலையேறிவிட்டது. 'உதிலைதான் போறனென்று சொன்னவன், திரும்பி வரவேயில்லை.' இது உறவொன்றின் குரல். இன்று வீட்டில் இருந்து புறப்படும் பிள்ளை ஒழுங்காகத் திரும்பி வருவதென்பது ஆச்சரியமான விடயமாகத்தான் அங்கு பார்க்கப்படுகின்றது. ஏன், உண்மையும் அதுவாகத்தான் இருக்கின்றது. வீதியில் உந்துருளியிலும் சரி, மிதிவண்டியிலும் சரி வீட்டில் இருந்து புறப்படும் பிள்ளை, சரியாகப் பயணம் செய்தாலும் எதிரில் வரும் பயணி சரியாகப் பயணம் செய்யவேண்டுமே. அதுவும் விபத்துக்களுக்கு ஏதுவாகிவிடுகின்றது.

யுத்தகாலத்தில் பத்திரிகையை புரட்டினால், குண்டுவீச்சு, செல்தாக்குதல், துப்பாக்கிச்சூடு என சாவிற்கு காரணம் தேடாமலே சாவின் பயணத்திற்கு காரணம் தயாராக இருக்கும். ஆனால், இன்று அவற்றை எல்லாம் தாண்டி, எமது மக்கள் பயணித்துக்கொண்டிருக்கின்றனர். அதனையும் மீறி அவலச்சாவுகள் காரணம் தேடமுன்னரே வழி மறித்து நிற்கின்றன.

இந்த ஆண்டு பிறந்து இரண்டாம் நாள், நீர்வேலி சந்திக்கு அண்மையில் மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த பாடசாலை மாணவி உள்ளிட்ட மூவர் பலியான கோரமும் இடம்பெற்றது.

தாயகத்திலும் புலம்பெயர் மண்ணிலும்
கொள்ளை
கொள்ளை
நிலஆக்கிரமிப்பு
நிலஆக்கிரமிப்பு

060

தமிழர் சொத்துக்களை சூறையாடும் சிங்களம்

– கந்தரதன்

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற ஹயஸ் வாகனமானது முன்னால் சென்ற வாகனமொன்றை முந்திச் செல்ல முற்பட்டபோதே பருத்தித்துறையில் இருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த முச்சக்கரவண்டியை மோதித்தள்ளியுள்ளது.

இதில் சம்பவ இடத்திலேயே முச்சக்கரவண்டி சாரதி பலியானதுடன் அதில் பயணித்த மூன்று பேரில் அன்றைய தினமே முதன் முதலாக பாடசாலை சென்று திரும்பிய 6 வயது சிறுமியும் அவருடைய பாட்டனாரும் வைத்தியசாலை கொண்டு செல்லும் வழியில் பலியாகியுள்ளனர். அத்துடன் பாட்டி கடும் காயங்களுடன் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தனது முதல்நாள் பாடசாலை அனுபவங்களை, பகிர்ந்து கொள்ள ஆசையோடு பயணித்துக்கொண்டிருந்த பிஞ்சு, தனது வாழ்க்கைப் பயணத்தையே முடித்துக்கொண்டது.

'ஆறிலும் சாவு , நூறிலும் சாவு' என்று ஒரு பழமொழி சொல்வார்கள். இதற்கு, சாவு ஆறிலும் வரும், நூறிலும் வரும் என்றே நாம் எல்லோரும் பொருள்கொள்கிறோம். வாழ்க்கை நிலையற்றது என்பதைத் தான் இப்படிச் சொன்னார்கள் என்று நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும் என்றாலும், அதன் உண்மையான பொருள் இதுவல்ல.

குருசேத்திர போரில், போருக்கு முன்னதாக தனது மூத்த பிள்ளை கர்ணன் என்பதை அறிந்த குந்திதேவி, அவனிடம் சென்று, பாண்டவர் ஐவருடன் சேர்ந்து கௌரவர்களை எதிர்த்து போரிட அழைக்கிறாள்.

அப்போது கர்ணன் கூறுகிறான்: 'தாயே! நான் பாண்டவர் ஐவருடன் சேர்ந்து ஆறாவது ஆளாகப் போரிட்டாலும் சரி, கௌரவர்கள் நூறு பேருடன் சேர்ந்து நூறாவது ஆளாக போரிட்டாலும் சரி, இறப்பது உறுதி என்பது எனக்குத் தெரியும். ஆகவே, ஆறிலும் சாவு அல்லது நூறிலும் சாவு.

தொடர்ச்சி 16ம் பக்கம்

ஒப்பரேசன் டமிள் எட்ஜ்: 1

மடையுடைக்கும் இரகசியங்கள்

கலாநிதி
சேரமான்

சிங்கத்தின் வாயில் சிக்கிய எலியின் கதையாக

2009 வைகாசி மாதத்தின் மூன்றாவது வாரம் அது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையை அழித்து விட்டதாக சிங்களம் மார்தட்டிப் பத்து நாட்கள் கூடக் கடந்திருக்கவில்லை. வன்னியில் இருந்து இடம்பெயர்ந்த மூன்று இலட்சம் மக்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த வதைமுகாம் ஒன்றின் கூடாரத் தொகுதி திடீரெனச் சுற்றி வளைக்கப்படுகின்றது.

இரட்டை அடுக்கு முட்கம்பி வேலிகள், ஒவ்வொரு கூடாரத் தொகுதியையும் இருபத்து நான்கு மணிநேரமும் கண்காணிப்பதற்கென்று சுழற்சி முறையில் ஆயுதம் தாங்கிய சிப்பாய்கள், மக்களோடு மக்களாக ஊடுருவி நின்ற கருணா, ஈ.பி.டி.பி, புளொட் கும்பல்களின் கைக்கூலிகள் என்று தொடர் கண்காணிப்பிற்கு உட்பட்டிருந்த அந்த வதைமுகாமில் இன்னமும் முழுமையாக இருள் நீங்கியிருக்கவில்லை. சிங்களச் சிப்பாய்களின் கண்களில் படும் முன்னர் எப்படியாவது வைகறை இருளில் காலைக் கடன்களைக் கழித்து விட்டுக் கூடாரத்திற்குத் திரும்பி விட வேண்டும் என்று அங்கிருந்த பெண்கள் அங்கலாய்த்துக் கொண்டிருக்க, அதிக வெளிச்சத்தைப் பாய்ச்சியபடி வேகமாக வந்த மூன்று இராணுவ வாகனங்கள் அந்தக் கூடாரத் தொகுதியை முற்றுகையிட்டு நிற்கின்றன.

அவற்றில் முதலாவது வாகனத்திலிருந்து ஆயுதம் தாங்கிய படையினர் புடைசூழ அஜானபாகு தோற்றத்தில் இராணுவச் சீருடை தரித்த நிராயுதபாணியான ஒருவர் நொண்டியவாறு நடந்து வருகின்றார். இன்னொரு வாகனத்தில் இருந்து இராணுவத் தளபதி போன்ற தோரணையில் இன்னுமொருவர் இறங்கி வருகின்றார். வந்த இருவரும் தனது இரண்டு பிள்ளைகளுடன் நாற்பது வயது மதிக்கத்தக்க தாய் ஒருவர் தங்கியிருந்த கூடாரத்திற்குள் தமது மெய்ப்பாதுகாவலர்கள் புடைசூழ நுழைகின்றார்கள்.

★★★★ ★★★★

“அண்ணை உங்களை சந்திக்க விரும்புகின்றார்...”

அதுதான் அவருக்கு ஒஸ்லோவில் இருந்து வந்த தொலைபேசி அழைப்பின் சாராம்சம். அவ்வளவு தான் அவருக்குத் தொலைபேசியில் கூறப்பட்டது.

பொட்டம்மானுடன் அம்புலன்ஸ் வண்டியொன்றில் தப்ப முயற்சித்த பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் கொல்லப்பட்டார் என்று 18.05.2009 அன்று அறிவித்த சிறீலங்கா அரசாங்கம், மறுநாள் 19.05.2009 அன்று இல்லையில்லை, நந்திக் கடலை அண்டியுள்ள கண்டல் காட்டுக்குள் நடந்த சண்டையில் அவர் கொல்லப்பட்டார் என்று அறிவித்ததோடு, தமிழீழ தேசியத் தலைவரின் உடல் என்று கூறி வரிப்புலிச் சீருடை தரித்த உடல் ஒன்றையும் தொலைக்காட்சிகள் ஊடாகக் காண்பித்து மார்தட்டியது.

மறுபுறத்தில் தமிழீழ தேசியத் தலைவர் நலமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கின்றார் என்று 18.05.2009 அன்று தமிழ்நெற் இணையத்திற்கு செவ்வி வழங்கிய கே.பி என்றழைக்கப்படும் செல்வராசா பத்மநாதன், ஆறு நாட்கள் கழித்து 24.05.2009 அன்று அந்தர் பல்டி அடித்துத் தலைவர் பிரபாகரன் அவர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டு விட்டார் என்று அறிவித்தார்.

இந்த ஆறு நாட்களுக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் 22.05.2009 அன்று, அதாவது தமிழீழ தேசியத் தலைவரின் இருப்பை மறுதலித்து கே.பி அறிக்கை வெளியிடுவதற்கு சரியாக இரண்டு நாட்களுக்கு முன்னர், தமிழீழ விடுதலைப் புலிகளின் புலனாய்வுத்துறையின் வெளியகப் பணிப்பிரிவுப் பொறுப்பாளர் என்ற கோதாவில், கதிர்காமத்தம்பி அறிவழகன் என்ற பெயரில், ‘தமிழ்நெற்’ இணையத்திற்கு செவ்வி வழங்கிய ஒருவர், தமிழீழ தேசியத் தலைவர் உயிருடன் இருக்கின்றார் என்றும், சரியான நேரத்தில் உலகத் தமிழர்களை அவர் தொடர்பு கொள்வார் என்றும் கூறியிருந்தார்.

இவ்வாறு பெரும் குழப்பங்கள் நிறைந்த அந்தப் பத்து நாட்களில் ““அண்ணை உங்களைச் சந்திக்க விரும்புகின்றார்” என்று ஒஸ்லோவில் இருந்து தொலைபேசியில் தெரிவிக்கப்பட்ட செய்தி அவரைப் பெரும் குதூகலத்தில் ஆழ்த்தியிருந்தது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் இருந்த காலப் பகுதியில் அவர் பல தடவை வன்னி சென்று திரும்பியிருந்தார்.

அவ்வாறான சந்தர்ப்பங்களில் சில தடவைகள் தமிழீழ தேசியத் தலைவர் அவர்களையும் அவர் சந்தித்திருந்தார். அவருடன் தனியாக உரையாடியும் இருந்தார். எனவே மூன்று ஆண்டுகள் கழித்து மீண்டும் தலைவரை சந்திக்கப் போகும் பரவசத்தில் ஆழ்ந்திருந்த அவருக்கு அன்று எல்லாமே புதுமையாக இருந்தது. ‘அண்ணை என்னைச் சந்திக்க விரும்புகின்றார்’. எல்லோரும் அண்ணை உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்று தடுமாறிக் கொண்டிருக்க, என்னை அண்ணை அழைத்திருக்கின்றார்’ என்று தனக்குத் தானே கூறி அவர் அகமகிழ்ந்து கொண்டார். அவ்வளவு பரவசம்.

மௌனத்தைக் கலைத்து அவர்களிடம் அவர் நேரடியாகவே கேட்டார்:
“அண்ணை சுகமாக இருக்கிறாரா? ஒரு பிரச்சினையும் இல்லை தானே?” –
“இல்லை” என்றை ஒற்றை வார்த்தை தான் பதிலாக வந்தது.
அதிகம் பேசுவது புலிவீரர்களின் வழக்கம் அல்ல. அதனை அவரும் நன்கு அறிந்திருந்தார். எனவே அவரும் மேற்கொண்டு எதையும் பேசவில்லை.

தொடர்ச்சி 14ம் பக்கம்

விடுதலைப் புலிக்களுக்கு உதவி தாய்க்கு சிறை

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பெண் தற்கொலையாளி ஒருவருக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த தாயொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம், ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை விதித்தது. அந்த சிறைத் தண்டனைக்கு மேலதிகமாக, தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது.

இனப்படுகொலை இராணுவத்துடன் படுகொலைகளில் ஈடுபட்ட கூலிக்குழுவான ஈ.பி.டி.பி தலைவர் டக்ளஸ் தேவானந்தாவை படுகொலை செய்வதற்கு முனைந்த தற்கொலை குண்டுதாரிக்கு உதவியளித்தாரென குற்றஞ்சாட்டப்பட்டிருந்த பெண்ணுக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாய்க்கே, இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 25 ஆயிரம் ரூபாய் தண்டமும் விதிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள செல்வகுமார் சத்தியவேல் என்பவர், தண்டனை அனுபவிக்கவேண்டிய காலத்தை விடவும் கூடுதலான நாட்கள் சிறையில் இருந்துள்ளார் எனச் சுட்டிக்காட்டிய நீதிபதி, 15 வருடங்கள் ஒத்திவைக்கப்பட்ட 24 மாதகால சிறைத்தண்டனையும், 25 ஆயிரம் ரூபாய் தண்டத்தையும் விதித்தார்.

கிளிநொச்சியில் ஜல்லிக்கட்டு!

ஜல்லிக்கட்டு போன்று மஞ்சு விரட்டு பாரம்பாரிய விளையாட்டு நிகழ்வொன்று கிளிநொச்சியில் இடம்பெற்றது. கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த காலங்களில் மஞ்சு விரட்டு விளையாட்டு இடம்பெற்று வந்தது. உழவர் திருநாளான பொங்கல் தினத்தை முன்னிட்டு இடம்பெறுகின்ற மஞ்சு விரட்டு இவ்வருடம் மீண்டும் கிளிநொச்சி பெரியபரந்தன் பிரதேச இளைஞர்களால் நடத்தப்பட்டது. தாங்கள் வளர்க்கும் மாடுகளில் தெரிவு செய்யப்பட்ட ஒன்றின் கழுத்தில் துணி ஒன்றில் பணம் அல்லது பிடிக்கப்படும் மாட்டின் உரிமையாளரால் தனது மாட்டை பிடித்து கழுத்தில் கட்டப்பட்ட துணியை கழற்றினால் இவ்வளவு தொகை பரிசு என அறிவிக்கப்பட்டு மாடுகள் வெடிகொளுத்தி விரட்டப்படும். விரட்டப்படும் மாடுகளை இளைஞர்கள் மடக்கி பிடிக்க வேண்டும் இதுவே மஞ்சு விரட்டு விளையாட்டாக இருந்து வருகிறது. இதில் பல இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டிருந்தனர்.



பிரான்சில் சிறப்புற இடம் பெற்ற பொங்கல் விழா!

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு, தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு நடாத்திய பொங்கல் விழா வெகு சிறப்பாக பரிசின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான Ivryயில் இடம் பெற்றது. 14.01.2018 அன்று காலை 11 மணிக்கு பொங்கலிடலுடன் பொங்கல் விழா ஆரம்பமாகியது. பொங்கலிடலின்போது Ivry நகரசபை முதல்வர் தமிழர் பண்பாட்டு உடையுடன் பொங்கலிடலில் பங்குபற்றிச் சிறப்பித்தார். பொங்கலிடலின் பின்னர் Ivry sur seine நகரபிதா திரு Bouyssou Philippe அவர்களும் வல்துமான் பிராந்திய துணை தலைவர் திருமதி Kirouani Lamya அவர்களும் மங்கல இசையுடன் மண்டபத்திற்குள் அழைத்துவரப் பட்டார்கள். வரவேற்பு விளக்கினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளரும், மகளிர் அணிப் பொறுப்பாளரும் ஏற்றி வைத்தனர். மங்களவிளக்கினை Ivry sur seine நகரபிதா திரு Bouyssou Philippe அவர்களும் வல்துமான் பிராந்திய துணை தலைவர் திருமதி Kirouani Lamya மற்றும் தமிழர் பிரதிநிதிகள் ஏற்றிவைக்க மண்டப நிகழ்வுகள் ஆரம்பமாகின.

சிறப்புரையினை தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவைச் சேர்ந்த திரு பொ. பாலசுந்தரம் ஆற்றியிருந்தார். அவர் தனதுரையில், தமிழர்கள் இயற்கையோடு வாழ்ந்தவர்கள். எந்த சமயத்தையும் முன்நிறுத்தி வாழ்ந்தவர்கள் அல்ல. தமிழர்கள் இயற்கையோடு வாழ்ந்தபடியால் தான் அவர்களின் கலைகளும் வந்திருக்கின்றன. எமது கலைகளையோ, பண்பாடுகளையோ மாற்றம் ஏற்படாமல் பாது காக்கப்படல் வேண்டும். பிள்ளைகளின் கலைவெளிப்பாடுகளை உற்சாகப்படுத்தி வளர்கவேண்டியது எமது கடமையாகும். தை திருநாளை அமெரிக்காவின் வெர்ஜினியா மாநிலம் தமிழரின் திருநாளை அங்கீகரித்து , அதைத் தொடர்ந்து அமெரிகா ஜோர்ஜியா மாநிலம் ஜனவரி 8 ம் திகதியிலிருந்து 12 ம் திகதிவரை தமிழரின் பண்பாட்டு கலாச்சார வாரமாகப் பிரகடனப்படுத்தி இருக்கின்றது. அதே வேளை கனடா பிரதமர் தமிழரின் தைப் பொங்கலைப் பெருமைப்படுத்தியுள்ளதுடன், இரண்டாவது மொழியாக தமிழ் மொழியை கற்கின்ற வாய்ப்புக்களை ஏற்படுத்தி இருக்கின்றார்கள். இவைகள் சர்வதேச ரீதியில் எங்களால் முன்னெடுக்கப்படும் முயற்சிகள். இந்த நாடுகளில் அவர்களின் செயற்பாடுகளில் எம்மை இணைத்தக் கொள்வதுதான் எங்களுக்கான அங்கீகாரத்தை தந்து நிற்கின்றது. எதிர்வரும் காலங்களில் இவ்விடயங்களை உள்ளடக்கி இளையோர்கள் ஒவ்வொரு பகுதிகளிலும் தமிழர்களுக்கு அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்டு எமது விடுதலையை முன்னெடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடு நாங்கள் அனைவரும் பணிசெய்ய வேண்டியவர்களாக இருக்கின்றோம். இப்படியான நிகழ்வுகளின் மூலம் தான் இவர்களுடன் உறவை பேணமுடிகிறது. இன்றை நிகழ்விலும் மாநகர முதல்வர் எங்கள் உடையை அணிந்து நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை உள்வாங்கி செயற்பட்டார். இப்படி ஒவ்வொரு பகுதியிலும் செயற்படுத்த இருக்கின்றோம். அவைகள் தான் எமது விடுதலையை முன்நகர்த்தும் என்பது வெளிப்படை. இதேவேளை தாயகத்தின் மீது பார்வை செலுத்த வேண்டியவர்களாக இருக்கின்றோம். பொங்கல் நிகழ்ச்சி என்பது பொங்கிவிட்டுப் போவதல்ல. பொங்கல் நிகழ்வு என்பது எமது வாழ்வுடன் இணைந்து விட்ட நிகழ்வாகவே பார்க்கப்படுகின்றது என்றார்.

தமிழர் புத்தாண்டுத் தைத்திருநாள்
2018

தமிழர் புத்தாண்டுத் தைத்திருநாள்
2018

ஸ்ராஸ்பூர்க் மாநகரில்...

பொங்கல் விழா!

திருவள்ளுவர் ஆண்டு 2049 தைத்திருநாள் ஸ்ரார்ஸ்பூர்க் மாநகரில் 20.01.2018 அன்று சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பொங்கல் பொங்கி கதிரவனுக்கு நன்றி செலுத்தி நடைபெற்ற விழாவில் பிரதம விருந்தினர்களாக ஸ்ராஸ்பூர்க் நகரின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அர்னோல்ட் யுங் அவர்கள், பாராளுமன்ற உறுப்பினர் திரு.மோறர் அவர்கள் ஸ்ரார்ஸ்பூர்க் மாநகர உதவி நகரபிதா, ஸ்ரார்ஸ்பூர்க் ஐரோப்பிய அபிவிருத்திக் குழு உப தலைவி, ஐரோப்பிய பெண்கள் அமைப்புத் தலைவி, மற்றும் அருட் தந்தை ஜெரார்ட் அவர்களுடன் வேற்றின மக்களின் அமைப்பு பிரதிநிதிகள், தமிழ்ச் சோலை மாணவர்கள் மற்றும் ஆசிரியரும் மங்கள விளக்கேற்றிச் சிறப்பித்திருந்தனர். தமிழீழ மண்மீட்புப் போரில் வீரச்சாவ டைந்த மாவீரர் மற்றும் பொதுமக்களுக்காக அக வணக்கம் செலுத்தி கலைநிகழ்வுகள் தொடக்கப்பட்டன. அதேவேளை பரிஸ் நகரம் சென்று திருக்குறள் போட்டிகளில் பங்கு கொண்டு, முதலாம் இடத்தில் வெற்றி பெற்ற நான்கு மாணவர்களுக்கு கேடயமும், மற்றும் சான்றிதழ்களும், பதக்கங்களும் கொடுக்கப்பட்டன.

இந்நிகழ்வில் குறிப்பாக 20ம் நூற்றாண்டில் இனப்படுகொலைக்குள்ளாக்கப்பட்ட ஆர்மேனியரும் கலந்துகொண்டிருந்தனர். நூறு ஆண்டுகளைக் கடந்தபின்னும், ஆர்மேனியில் நடாத்தப்பட்ட இனவழிப்பை உலக நாடுகள் ஏற்றுக்கொள்ளவைக்கவும் அதற்கான நீதியையும் நட்டஈட்டையும் பெற்றுக்கொள்ளவும் இன்றுவரை அயராது போராடிவருகின்றவர்கள் என்ற வகையில் எமது புத்தாண்டுநிகழ்வில் கலந்து கொண் டதுடன் எமது விடுதலைப் போராட்டத்திற்கான ஆதரவையும் தெரிவித்திருந்தனர். இப்புத்தாண்டு நிகழ்வில் தமிழினப்படுகொலையை உலக நாடுகள் கண்டுகொள்ள வைப்பதுடன் தமிழினப் படுகொலைக்கான அனைத்துலக சுயாதீன விசாரணைக்கான அறைகூவலும் விடப்பட்டது. இந்நிகழ்விற்கு பிரெஞ்சு ஊட கங்களும் முதன்மைத்துவம் கொடுத்திருந்தன என்பதும் இங்கே குறிப்பிடதக்கது.

விழா 2018 NOUVEL AN
PONGAL

விழா 2018 NOUVEL AN
PONGAL

விழா 2018 NOUVEL AN

பிரான்சில் நடைபெற்ற மாவீரர் நினைவு சுமந்த உள்ளரங்கச் சுற்றுப்போட்டி 2018!

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு, தமிழர் விளையாட்டுத்துறை நடாத்தும் மாவீரர் நினைவு சுமந்த விளையாட்டுப் போட்டிகள் 2018 இன் முதற் போட்டியாக கடந்த 07.01.2018 ஞாயிற்றுக்கிழமை உள்ளரங்கச் சுற்றுப் போட்டிகள் பரிசின் புறநகர்ப் பகுதியில் ஒன்றான நந்தயாரில் வெகு சிறப்பாக இடம்பெற்றன. ஆரம்பான நிகழ்வாக பொதுச்சுடரினை தமிழர் விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் திரு. கிருபாகரன் ஏற்றிவைத்தார். 26.06.1989 அன்று இந்திய இராணுவத்தினுடனான மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட கப்டன் ருபனின் சகோதரி ஈகைச்சுடரினை ஏற்றி மலர் வணக்கத்தைத் தெரிவித்தார். அகவணக்கத்தைத் தொடர்ந்து போட்டி முகாமையாளரினால் சதுரங்கம், கரம் போட்டிகளின் விதிமுறைகள் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. ஏழு கழகங்களைச் சேர்ந்த 200 ற்கு மேற்பட்ட போட்டியாளர்கள் போட்டிகளில் பங்குபற்றிச் சிறப்பித்தனர். கரம் போட்டி ஒரு மண்டபத்திலும், சதுரங்கப் போட்டி பிறிதொரு மண்டபத்திலுமாக இரு பிரிவுகளாக போட்டியாளர்கள் நடுவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கி வெகு சிறப்பாக இடம்பெற்றன.

போட்டிகளில் வெற்றி பெற்றோர் விபரம் வருமாறு:

கரம்

15 வயதின் கீழ் ஆண்கள்.
1 ம் இடம் : ஜெ. அவிக்னா - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ம.மயூரன் - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : து.மதுமிதன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ஞ.டனுசன் - 95 விளையாட்டுக் கழகம்

15 வயதின் கீழ் பெண்கள்
1 ம் இடம் : ஜெ.தாரணி - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஜெ.ஆதனா - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : கு.இவன்சி - 93 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : பா.திரேசிக்கா -அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் ஆண்கள்
1 ம் இடம் : கு.சாம் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ந.அசேன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : ம.அஜித்குமார் - அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ந.நிறக்சன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் பெண்கள்
1 ம் இடம் : சே.திரேசிகா - 93 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஜெ.ஆரணி - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : ர.சபிற்சிக்கா - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : சி.யவிசா - அரியாலை ஐக்கிய வியைாட்டுக் கழகம்

19 வயதின் மேல் ஆண்கள்
1 ம் இடம் : இ.அல்பிரட் - 95 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : த.நிசாந்தன் - 93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : பா.தினேஷ - 95 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ஜெ.கார்த்திக் - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்

19 வயதின் மேல் பெண்கள்
1 ம் இடம் : உ.அனுசா - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : சே.வரலட்சுமி - 93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : தி.திவ்வியா - 93 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ஜெ.யோகேஸ்வரி - யாழ்டன் விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் ஆண்கள் இரட்டையர்
1 ம் இடம் : கௌதம் - நிரஞ்சன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஷாம் - அசேன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : ஜினுசன் - மதுமிதன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : அவைக்னா - எழிலன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் பெண்கள் இரட்டையர்
1 ம் இடம் : பவிஷா - திரிஷிகா - அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஆரணி - மிற்சிகா - யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : அட்சயா - திரேசிகா - 93 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : மயூரி - அட்சரா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்

19 வயதின் மேல் ஆண்கள் இரட்டையர்
1 ம் இடம் : அல்பிரட் - சத்திரபதி - 95 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : வேணுமுரளி - கார்த்திக் - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : குகதாஸ்- தவராஜசிங்கம் - 93 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ஜீவரட்ணம் - ரவிமோகன் - யாழ்டன் விளையாட்டுக் கழகம்

19 வயதின் மேல் பெண்கள் இரட்டையர்
1 ம் இடம் : சோதியா - கஸ்தூரி - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : திராணிகா - வரலட்சுமி - 93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : சகந்தி - கெங்கா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : தானுகா - மதி - 93 விளையாட்டுக் கழகம்

சதுரங்கம்

15 வயதின் கீழ் ஆண்கள்
1 ம் இடம் : பாக்கியராஜா ஆதவன் - 95 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : சிவராஜா ஆரூரன் - 95 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : சிவாராஜா அருண் - 95 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ஜெயரூபன் சத்தியரூபன் - 93 விளையாட்டுக் கழகம்

15 வயதின் கீழ் பெண்கள்
1 ம் இடம் : க.பிரீத்தி - 93 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : க.அரணியா - 93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : கி.டொ.ஜெனிசா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : வி.அபிசனா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் ஆண்கள்
1 ம் இடம் : வ.கிதுர்சன் - 94 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : சீ.மிதுன் - 93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : லோ.கரிகாலன் - 95 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : கோ.பிரதீபன் - 93 விளையாட்டுக் கழகம்

19 வயதின் கீழ் பெண்கள்
1 ம் இடம் : ஜெ.அக்சரா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஜெ.அகஸ்சரபி -93 விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : ச.நந்துசா - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : ம.லக்சியா - 95 விளையாட்டுக் கழகம்

19 வயதின் மேல் ஆண்கள்
1 ம் இடம் : வி.தருசன் - 94 விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ஈ.யோகேஸ்வரன் -யாழ்டன் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : த.சரன் - 94 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : பா.தினேஸ் - 94 விளையாட்டுக் கழகம்

19 வயதின் மேல் பெண்கள்
1 ம் இடம் : க.நிலானி - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
2 ம் இடம் : ர.பிரீத்தி - நல்லூர் ஸ்தான் விளையாட்டுக் கழகம்
3 ம் இடம் : சே.வரலட்சுமி - 93 விளையாட்டுக் கழகம்
4 ம் இடம் : தி.தானுகா - 93 விளையாட்டுக் கழகம்

நீதிக்காக ஜெனீவா நோக்கி அணிதிரள்வோம்!

அன்பான பிரான்சு வாழ் தமிழீழ மக்களே! தமிழர் ஒருங்கிணைப்புக்குழுவும், அதன் உப கட்டமைப்புக்களினதும், தமிழர் புத்தாண்டு பொங்கல் வாழ்த்தினை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஓயாத புயலாக ஒடுக்கு முறையின் கோரத்தாண்டவம் விடுதலைப்பாதையில் எம்மைத்தள்ளி விட்டது. இன அழிப்பின் தாங்க முடியாத நெருக்குவாரங்களின் விளைவாக, எமது தலைவிதியை நாமே நிர்ணயிக்கத் தீர்மானித்தோம். விடுதலை பெற்ற மனிதர்களாக வாழ்வதற்கு முடிவு செய்து கொண்டோம். விடுதலை என்ற இலட்சியத்தை நாம் இலகுவாகத் தேர்ந்தெடுக்கவில்லை, வரலாறு தான் அதை எம்மிடம் கட்டாயமாகக் கையளித்தது. சுதந்திரம் வேண்டுவதைத் தவிர வேறு வழி எதையும் வரலாறு எமக்கு விட்டுவைக்கவில்லை. தமிழீழ தேசியத் தலைவரின் சிந்தனைக்குத் தொடர்ந்து வலுச்சேர்ப்போம்.

ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைப் பேரவையின் 37 வது கூட்டத்தொடரில் மார்ச் மாதம் 21ம் நாள் சிறீலங்கா தொடர்பான விவாதம் நடைபெறவுள்ள நிலையில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமைகள் ஆணையாளர் செயிட் அல்சைன் சிறீலங்கா தொடர்பான தனது அதிருப்தியைத் தெரிவிப்பார் என்று அனைத்துத்தரப்பினாலும் எதிர்பார்க்கப்படுகின்றது. இதனை மறுதலிக்கும் வகையில் பெப்ரவரி 26ம் திகதி முதல் மார்ச் 23ம் திகதி வரை நடைபெறவுள்ள மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் தலைமையில் உயர் மட்டக்குழுவினரும், சட்டமா அதிபரின் உயர்மட்ட அதிகாரிகளும் கலந்து கொள்வதுடன் நல்லாட்சி அரசானது தமிழ் மக்களுக்கு பல்வேறு விடயங்களைச் செய்துள்ளது என்றும், சட்டமாதிபர் திணைக்களத்தின் மூலம் நாட்டில் நீதி நிர்வாகம் சரியாகவே செய்யப்படுகின்றது என்பதை நிறுவிப்பதோடு சிறீலங்கா அரசானது மேலும் கால அவகாசத்தை பெற்றுக் கொள்ளும் நிலைப்பாட்டை எடுக்கவுள்ளதையே அரசியல் அவதானிகளின் தெரிவித்துள்ளனர்.

சர்வதேசத்தின் துணையுடனும், சிறீலங்காவுக்கு துணைபோகும் நாடுகளின் துணையுடன் தமிழீழ மக்களின் ஆயுதப்போராட்டம் அமைதியாக்கப்பட்டு ஒன்பது வருடங்களாகியும், சர்வதேசம் எதிர் பார்த்த எதையும் சிறீலங்காவில் இருந்த அரசோ, அல்லது நல்லாட்சி தருவோம் என்று கூறிப் பதவிக்கு வந்த மைத்திரி அரசோ சர்வதேசம் கொடுத்த காலஅவகாசத்தில் பொறுப்புக்கூறல் பொறிமுறை விடயத்தில் எந்தவித முன்னேற்றத்தையும் அடையவில்லை என்பதையும், மாறாக தமிழர் வாழ்விடங்களில் புத்த கோவில்களை புதிது புதிதாக அமைப்பதையும், தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி, தமிழ் மக்களின் உணர்வை மதியாது செவிசாய்க்காது இன, மத நல்லிணக்கத்திற்கு பங்கத்தையும், வெறுப்புணர்வையும் ஏற்படுத்தி வருவதும், தமிழர் பூர்வீக வாழ்விடமான வடக்கு கிழக்கை பிரிப்பதிலும் முனைப்பு காட்டுவதிலும், வவுனியா பிரதேசத்தையும் தம்வசமாக்கும் கைங்கரியத்தையும் செய்யத் தொடங்கி விட்டதையும் இதற்கு பல தமிழ் தலைமைகள் கண்மூடியிருப்பதும் காலம் கடந்து ஞானம் பெற்றவர்களாக கருத்துக்கள் தெரிவிப்பதும் நாம் நிகழ்கால விடயமாகப் பார்க்கின்றோம்.

அன்பார்ந்த தமிழீழ மக்களே!

எதிர்வரும் மார்ச் மாதம் 12ம் திகதி ஜெனீவா மனிதவுரிமைகள் செயலகத்திற்கு முன்பாக முருகதாசன் திடலில் நடைபெறவுள்ள மாபொரும் நீதிக்கான பேரணியில் அனைத்துத் தமிழீழ மக்களும் கலந்து கொண்டு பின் வரும் விடயங்களையும் முன்வைத்து பலம்சேர்ப்போம் வாருங்கள்.

- ஐக்கிய நாடுகள் சிறீலங்காவுக்கு எதிராக எடுத்த பிரேரணைகளுக்கு தமிழர்கள் நாம் தொடர்ந்து வலுச்சேர்ப்போம்.
- புலம்பெயர்ந்த தமிழர்களின் அனைத்து நாடுகளிலுள்ள அரசியல் ரீதியான செல்வாக்கினை உரிய முறையில் எமது நியாயத்தின் பக்கம் பயன்படுத்துவோம்.
- தமிழர்கள் எங்கள் புராதனம், வரலாறு, அதன் கண்டுபிடிப்புகளை எங்கள் பலமாக்குவோம்.
- தமிழர்களுக்கெதிராக சிங்கள அரசும் , அதன் கூலிப்படை செய்யும் அட்டூழியம், அநியாயத்தையும் எமது நியாயத்தின் காரணமாக்குவோம்.
- சிங்கள அரசின் ஆபத்தான பொருளாதார நிலையும், அதனால் வெறுப்படையும் உலக வல்லரசுகளின் மனோ நிலையும், சிங்கள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன மாற்றமும் விரக்தி நிலையையும் எமக்கு சாதகமாக்கிக் கொள்வோம்.
- சொந்த வாழ்விட மண்ணை இழந்து, காணமல் ஆக்கப்பட்ட சொந்த உறவுகளைத்தேடி 300 நாட்களையும் தாண்டி சனநாயக அரசியல் வளியில் பேராடும் எமது மக்களின் அபிலாசைகளை ஏறெடுத்தும் பார்க்காத சிங்களப் பேரினவாதிகளினதும், அரசினதும் உண்மைத்தோற்றத்தை உலகிற்கு எடுத்துச்சொல்வோம்.
- 70 வருடங்களாக எமது உரிமைகளை இழந்து நாம் வாழ்ந்து விட்டோம். எமக்கான சுயநிர்ணய உரிமையைக் கிடைக்கத் தொடர்ந்தும் ஓங்கிக் ஒன்றாய்க் குரல் கொடுப்போம்.

ஜெனீவா மனிதவுரிமைகள் செயலகம் முன்பாக முருகதாசு திடலில் 12.03.2018 திங்கட்கிழமை 14.00 மணிக்கு நடைபெறும் மாபெரும் நீதிக்கான பேரணியில் பாரிசிலிருந்து TGV தொடரூந்து காலை 9.00 மணிக்கு புறப்பட்டு 12.30 மணிக்கு ஜெனீவா சென்றடைந்து, பேரணி முடிவடைந்த பின் மாலை 18.00 புறப்பட்டு 21.30 மணிக்கு பாரிசை வந்தடையும். காலத்தின் தேவையுணர்ந்து இளையவர்கள், பெரியவர்கள் என அனைவரும் கலந்து கொள்ளுவோம் வாருங்கள்.

'தமிழரின் தாகம் தமிழீழத்தாயகம்'

மேலதிக தொடர்புகளுக்கு :
தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - பிரான்சு : 01 43 15 04 21
தமிழ் மக்கள் பேரவை : 06 52 72 58 67
தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு : 06 62 84 66 06

Choisy le Roi தமிழ்ச்சோலையின் 8 வது ஆண்டுவிழா

பிரான்சு புறநகர் பகுதியில் ஒன்றான Choisy le Roi தமிழ்ச்சோலையின் 8 வது ஆண்டுவிழா கடந்த சனி 20.01.2018 மாநகரசரப மண்டபத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

Blanc Mesnil தமிழ்ச்சோலையின் 14வது ஆண்டுவிழாவும் பொங்கல் விழாவும்

பிரான்சு புறநகர் பகுதியில் ஒன்றான புலோமினல் தமிழ்ச்சோலையின் 14 வது ஆண்டுவிழாவும் தமிழப் பொங்கல் விழாவும் மிகவும் சிறப்பாக கடந்த 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

ஒப்ரேசன் டமிள் எட்ஜ்...

ஒஸ்லோவில் இருந்து அவருடன் உரையாடியவர் கூறியிருந்தார்: ‘கோலாலம்பூருக்கு நேரடியாகப் போக வேண்டாம். மெல்பேர்ணில் (அவுஸ்திரேலியா) இருந்து சிங்கப்பூர் வழியாக சியம் றியப் (கம்போடியா) போய், அங்கு இரண்டு நாள் தங்கியிருந்து, தனியார் போக்குவரத்து நிறுவனம் ஒன்றின் ஊடாகப் பயணச் சீட்டைப் பதிவு செய்து கோலாலம்பூருக்கு செல்லுங்கள். அப்பொழுதுதான் சந்தேகம் வராது.’

வன்னியில் தலைவர் அவர்கள் தங்கியிருந்த பொழுதே எத்தனையோ அடுக்குப் பாதுகாப்புக்களைக் கடந்து தான் அவரைச் சந்திக்க முடியும் என்பதை நன்கு அறிந்திருந்தவர் என்ற வகையில், நேரடியாக மூக்கைத் தொடாது, தலையைச் சுற்றி மூக்கைத் தொடும் பாணியில் கோலாலம்பூர் செல்வதற்கு ஒஸ்லோவில் இருந்து தொடர்பு கொண்டவர் கூறிய பயண அறிவுறுத்தல் அவருக்கு துளியளவு கூடச் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை.

★★★★ ★★★★

‘அவாவின்ரை புருசன் இயக்கத்திலை பெரிய தளபதி போல இருக்கு...’

எவருக்குமே எதுவுமே புரியவில்லை. கடந்த ஒரு வாரமாகத் தங்களோடு தங்க வைக்கப்பட்டிருந்த இரண்டு பிள்ளைகளின் தயாரான அந்த நாற்பது வயதுப் பெண்மணி பற்றி எவருக்குமே பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை.

‘அவவின்ரை சொந்த ஊர் இடைக்குறிச்சி என்று தான் சொன்னவா. இரண்டு நாளைக்கு முதல் அவா ஆரிட்டையோ போனிலை கதைக்கேக்க கேட்டவா, இஞ்சையிருந்து நாங்கள் எப்ப இந்தியாவுக்கு வந்து சேர்வது என்று’

முற்றுகைக்குள் உட்பட்டிருந்த அந்தக் கூடாரத் தொகுதிக்குள், அந்த நாற்பது வயதுப் பெண் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்த கூடாரத்திற்கு வெளியே நீள்வரிசையில் அனைவரும் காக்க வைக்கப்பட்டிருந்தனர்.

நேரம் முற்பகல் 11:00 மணியை எட்டிக் கொண்டிருந்தது. உச்சி வெயில் தலையில் சுட அனைவரும் தமது வாய் போன போக்கில் பேசிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கூடாரத் தொகுதிக்கு வந்த மூன்று நாட்களில் அந்தப் பெண்ணின் கைக்கு செல்பேசி ஒன்று கிட்டியிருந்தது. அந்தப் பெண்ணிடம் கையூட்டுப் பெற்று அவரிடம் செல்பேசியை வழங்கிய இராணுவச் சிப்பாய், இப்பொழுது கூடாரத்தை விட்டு வெளியில் வருவதும், கால்கடுக்க வெயிலில் காத்திருந்தவர்களைப் பார்த்து ஒரு நமட்டுச் சிரிப்புச் சிரிப்புச் சிரிப்பதும், பின்னர் உள்ளே செல்வதுமாக இருந்தான். ஒன்று மட்டும் எல்லோருக்கும் தெளிவாகப் புரிந்தது, கையூட்டுப் பெறுவது போல் பாசாங்கு செய்து, அந்தப் பெண்ணிடம் செல்பேசியை விற்றுப் பின்னர் அதே செல்பேசியூடாக அவர் தொடர்பு கொண்டவரை அடையாளம் கண்டு, அப்பெண்ணை சிங்களப் படையினர் கைது செய்திருந்தார்கள்.

அங்கிருந்த ஒரு பெண் கூறினார்: ‘இவவேதான். சந்தேகமே இல்லை. இவாதான் பிள்ளையானின் மனுசி என்று அந்த சொத்தி ஆமிக்காரன் சொன்னவன்’. உடனே குறுக்கிட்ட இன்னொரு பெண், ‘அவன் பிள்ளையான் என்று சொல்லவில்லை. ‘பிள்ளையார்’ என்று சொன்னவன்...’

★★★★ ★★★★

இரண்டு நாட்கள் கம்போடியாவில் ஒருவாறு பொழுதைப் போக்கி, கோலாலம்பூர் விமான நிலையத்தை அவர் வந்தடைந்த பொழுது, அவருக்காக, அவரது பெயர் தாங்கிய பாதாகையுடன் இரண்டு பேர் காத்திருந்தார்கள். இரண்டு பேருமே நாற்பது வயதுக்கு உட்பட்டவர்கள்.

வழமையான கைலாகு கொடுப்புக்கள், அறிமுகங்களைத் தொடர்ந்து அவரை ஏற்றிச் செல்ல வந்திருந்த மகிழுந்து வண்டி புறப்பட்டது. வந்திருந்த இருவருமே அவரிடம் வேறு எதுவுமே பேசவில்லை. மௌனத்தைக் கலைத்து அவர்களிடம் அவர் நேரடியாகவே கேட்டார்: ‘அண்ணை சுகமாக இருக்கிறாரா? ஒரு பிரச்சினையும் இல்லை தானே?’

‘இல்லை’ என்றை ஒற்றை வார்த்தை தான் பதிலாக வந்தது.

அதிகம் பேசுவது புலிவீரர்களின் வழக்கம் அல்ல. அதனை அவரும் நன்கு அறிந்திருந்தார். எனவே அவரும் மேற்கொண்டு எதையும் பேசவில்லை.

★★★★ ★★★★

‘பாவம் அந்தப் பிள்ளை. இரண்டு பிள்ளையளோடை இருந்தது. இப்ப ஆளை டொக் யார்ட் நேவிக் காம்பிற்கு கொண்டு போய்விட்டாங்களாம்.’

அப்பொழுது ஒருவர் கூறினார். ‘அவாவின்ரை புருசன்காரன் இயக்கத்தின்ரை புலனாய்வுத்துறையில் முக்கிய பொறுப்பாளராம். தலைவர் உயிரோடு இருக்கிறார் என்று போன கிழமை இலண்டன் உறவுப் பாலம் செய்தியிலை அறிவிச்ச அறிவழகன் என்கிறவர் தான் அவாவின்ரை புருசனாம்.’

‘கெதியிலை வெளியாலை போய், இந்தியாவுக்குப் போய் சேர்ந்து விட்டால் இராமேஸ்வரத்தில் தனது மாமனாரின் காரியங்களை செய்யலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தவா. அவாவின்ரை மாமன்காரன் செல் பட்டு இறந்து போனாராம்’ இவ்வாறு தனது பங்கிற்கு இன்னொரு பெண் கூறினார்.

எவருக்குமே அந்தப் பெண்ணைப் பற்றிப் பெரிதாகத் தெரிந்திருக்கவில்லை. தாம் அறிந்தவற்றை, தமது காதில் கேட்டவற்றை, தமது வசதிக்கு ஏற்றவாறு ஒவ்வொருவரும் பேசிக் கொண்டார்கள். ஆனால் எல்லோருக்கும் ஒரு விடயம் தெளிவாகப் புரிந்திருந்தது: திருகோணமலை ‘டொக் யார்ட்’ கடற்படைத் தளத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கும் அந்தப் பெண் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவரின் மனைவி என்பது.

அதை விட எல்லோருமே ஆச்சரியத்துடன் இன்னொரு விடயத்தைப் பேசிக் கொண்டார்கள். அங்கு இராணுவச் சீருடையில், ஆனால் நிராயுதபாணியாக நொண்டியவாறு வந்திருந்த அஜானபாகு தோற்றத்தைக் கொண்ட சிப்பாய் சரளமாகத் தமிழ்ப் பேசியதைப் பற்றித் தான் எல்லோரும் பேசிக் கொண்டார்கள். அவரது மொழிநடை திருகோணமலையைச் சேர்ந்ததாக இருந்தது. ஆனால் அதேநேரத்தில் அவர் சரளமாக சிங்களமும் பேசினார்.

★★★★ ★★★★

கோலாலம்பூர் நகரின் புறநகர் பகுதியில் அமைந்திருந்த அந்த வீட்டிற்குள் வாகனம் நுழைந்த பொழுது, எல்லாமே நூதனமாக காணப்பட்டன. வீட்டு வாயிலில் ஒரு காவலாளி மட்டும் நின்றிருந்தார். தலைவர் தங்கியிருக்கும் இடம் என்பதால் உள்ளே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் இருக்கும் என்று எதிர்பார்த்தவருக்கு அப்படி எதுவும் இருக்காதது ஆச்சிரியமாக இருந்தது.

வரவேற்பறைக்குள் அவர் நுழைந்த பொழுது சற்று உயரமான, அதேநேரத்தில் பருமனான உருவமுடைய ஒருவர் சிரித்தவாறு வந்து அவருக்குக் கைலாகு கொடுத்தார். 1970களின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்று முடித்த பட்டதாரிகளின் பாணியில் அவரது ஆடை அணியும் முறை இருந்தது.

அவருக்கு அருகில் மிதமான பருமனும், உயரமும் உடைய ஒருவர் நின்றிருந்தார். சாறமும், ரீ-சேர்ட்டும், கறுத்தக் கண்ணாடியுமாக நின்றிருந்த அவரைப் பார்த்து வந்தவர் சிரித்தார். தென்னிந்தியத் திரைப்படங்களில் வரும் சமையல்காரர்கள் போன்று அவரது உடை நடை இருந்தது. ஆனால் சாறமும், கறுத்தக் கண்ணாடியுமாக அவர் நின்றிருந்த விதம், வந்திருந்தவருக்குச் சிரிப்பை ஏற்படுத்தும் வகையிலேயே இருந்தது. அப்பொழுது அவரது அருகில் நின்ற மற்றைய நபர் பேசினார்:

‘வணக்கம் என்ரை பெயர் இன்பம். ஜப்னா யூனிவேசிற்றியில் நீங்கள் டிகிரீ படிக்கும் பொழுது நான் பொலிற்றிக்கல் சயன்சில் மாஸ்ரேர்ஸ் செய்து கொண்டிருந்தனான். அதற்குப் பிறகு நீங்கள் ஒஸ்ரேலியா போய்விட்டியள்...’

உடனே அவரது அருகில் நின்ற சாறமும், கறுத்தக் கண்ணாடியும் அணிந்த நபர் கூறினார்: ‘இவர் கனடாவுக்கு பொறுப்பாக இருந்தவர்.’

அப்படியே மூவரும் அமர்ந்து கொள்ள, வந்திருந்தவர் ஏனைய இருவரிடமும் கேட்டார்: ‘அண்ணை என்னை சந்திக்க விரும்புகிறார் என்று செய்தி வந்தது. அதுதான் வந்தனான். தலைவர் எப்படி இருக்கிறார்?’

அப்பொழுது ஏனைய இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். பின்னர் வந்திருந்தவருக்கு தேனீர் ஊற்றிக் கொடுத்தவாறே சாறமும், கறுப்புக் கண்ணாடியும் அணிந்தவர் கூறினார்: ‘தடியன் என்னை அண்ணை என்று தான் கூப்பிடுகிறவன். நான் தான் கே.பி. செல்வராஜா பத்மநாதன் என்று கொஞ்ச நாளாக செய்திகளில் கேள்விப்பட்டிருப்பியள்.’

வந்தவருக்குத் தூக்கி வாரிப் போட்டது. தமிழீழ தேசியத் தலைவரை சந்திப்பதற்காக ஜேம்ஸ் பாண்ட் பாணியில் அவுஸ்திரேலியாவில் இருந்து சிங்கப்பூர் போய், அங்கிருந்து கம்போடியா சென்று, இரண்டு நாட்கள் அங்கு தங்கி, பின்னர் மலேசியா வந்தவருக்கு, தலைவர் பிரபாகரனுக்குப் பதிலாக அங்கு கே.பி அமர்ந்திருந்தது அதிர்ச்சியாகவே இருந்தது.

அப்பொழுது கே.பியின் அருகில் அமர்ந்திருந்த இன்பம் என்பவர் கூறினார்: ‘இப்ப இயக்கத்தின்ரை மிஞ்சியிருக்கின்ற மூத்த உறுப்பினர் கே.பி அண்ணை தான். ஒரு விதத்திலை அவர் தான் இப்ப இயக்கத்தின்ரை தலைவர். அப்படிப் பார்த்தால் இதுதான் இயக்கத்தின்ரை தலைமைச் செயலகம். நீங்கள் சரியான இடத்துக்குத் தான் வந்திருக்கிறியள்.’

வந்திருந்தவருக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை.

சிங்கத்தின் வாயில் சிக்கிய எலியின் கதையாகத் தனது நிலை இருக்கும் பொழுது உருத்திரகுமாரனைப் பற்றி கே.பி கூறியது அவருக்கு நகைச்சுவையாகத் தெரியவில்லை

சிறிது நேர நிசப்தத்திற்குப் பின்னர் கே.பி பேசினார்: “அண்ணை காண விரும்புகிறார் என்று சொன்னதும், என்ன ஏது என்று கேட்காமல் நீங்கள் இங்கு வந்து விட்டீங்கள். இப்படித்தான் போன பெப்ரவரி மாதமும். யுத்த நிறுத்தம் பற்றி நோர்வே தூதுவர் ரொறே ஹற்ரெம் அவர்களோடு பேசுவதற்காக என்னை வந்து சந்திக்கச் சொல்லி ருத்ராவுக்கு செய்தி அனுப்பியிருந்தேன். அவரும் எங்கே வர வேண்டும் என்று கேட்க, எனது தொடர்பாளர் தலைநகருக்குப் போங்கோ என்று சொன்னார். இரண்டு நாள் கழித்து நாங்கள் இங்கே கோலாலம்பூரில் அவருக்காகப் பார்த்துக் கொண்டிருக்க, அவர் பாங்கொக்கில் இருந்து என்ரை தொடர்பாளரிடம் அடிச்சுக் கேட்கிறார், ‘நான் தலைநகரில் நிற்கிறன். ஆனால் எயார் போட்டில் என்னை ஏற்றிச் செல்வதற்கு தமிழர்கள் எவரும் வரவில்லை’ என்று.”

உடனே அருகில் இருந்த இன்பம் என்பவர் வாய் விட்டுச் சிரித்தார்.

ஆனால் இதனைக் கேட்ட பொழுது வந்திருந்தவருக்கு சிரிப்பு வரவில்லை. சிங்கத்தின் வாயில் சிக்கிய எலியின் கதையாகத் தனது நிலை இருக்கும் பொழுது உருத்திரகுமாரனைப் பற்றி கே.பி கூறியது அவருக்கு நகைச்சுவையாகத் தெரியவில்லை. மீண்டும் கே.பி பேசத் தொடங்கினார்:

“இன்னும் நாலைஞ்சு நாட்களில் ருத்ரா இங்கே வந்து விடுவார். கனடாவில் இருந்து புறொபெசர் (பேராசிரியர்) சேரன் வருகிறார். உங்கடை நாட்டில் இருந்து (அவுஸ்திரேலியாவில்) டொக்டர் முருகர் குணசிங்கம் வருகிறார். ஆள் இப்ப நோர்வேயில் நிற்கிறார். இலண்டனில் இருந்து தாசீசியஸ் மாஸ்ரரும் வருகிறார். நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் என்று புதுமையாக ஒரு வேலைத் திட்டம் தொடங்கப் போகிறோம். அது பற்றி ஆலோசனை செய்யிறதுக்கு எல்லோரும் வருகினம். இதில் நீங்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும். உங்களைப் போன்ற புத்திஜீவிகளின் பங்கு மிக முக்கியமானது.”

வந்திருந்தவருக்குக் கே.பி கூறியதை மறுக்காமல் கிளிப்பிள்ளை போல் ஆமோதிப்பதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை.

எப்படியாவது கே.பியின் பிடியில் இருந்து தப்பி, மீண்டும் நாடு திரும்பி விட வேண்டும் என்ற எண்ணமே அவரது மனத்திரையில் ஓடிக் கொண்டிருந்தது.

(மடையுடைப்புத் தொடரும்)

மலரும் சுதந்திர பூமியில்

9

கலாநிதி சிறீஸ்கந்தராஜா

தலைவரின் சிந்தனையும், குர்திஸ்தானின் புலம்பெயர்ந்தோரும்

ஒரு சட்டத்தரணியும், விரியுரையாளரும் என்ற வகையில் பன்னாட்டு சட்ட நுணுக்கங்களை நன்கு அறிந்த ஒருவராகவே அவாரா உசேன் காணப்பட்டார். ஈராக்கில் குர்தி மக்களுக்கு சதாம் உசேன் இழைத்தது இனவழிப்பு என்பதை 2005ஆம் ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பொன்றில் ஈராக்கின் உச்ச நீதிமன்றம் உறுதி செய்திருந்தது. அதே போன்று குர்தி மக்களின் இனவழிப்புப் பற்றிய தீர்மானம் ஒன்றையும் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் பிரித்தானிய நாடாளுமன்றம் நிறைவேற்றியிருந்தது.

அப்படியிருந்த பொழுதும் இனவழிப்பைக் காரணம் காட்டி அதற்கான பரிகார நீதியாகக் குர்தி மக்கள் முன்வைத்த தனியரசுக் கோரிக்கையை அங்கீகரிப்பதில் அனைத்துலக சமூகம் தயக்கம் காட்டியே வந்தது. இவை பற்றியும் என்னுடன் அவாரா உசேன் அவர்கள் அளவளாவிக் கொண்டார்.

அப்பொழுது எனது பின்புறமாக நின்ற யாரோ ஒருவர் எனது பெயரைக் கூறி அழைப்பதைக் கேட்கக் கூடியதாக இருந்தது. மெல்லத் திரும்பிப் பார்த்தேன். சற்று உயரமான, அதேநேரம் பருமனான ஒருவர் நின்றிருந்தார்.

“எனது பெயர் டில்சான் முஸ்தாபா. உங்களை அழைத்து வருமாறு சுலைமானி பல்கலைக் கழக வேந்தர் கலாநிதி ராசா உசேன் என்னை அனுப்பி வைத்துள்ளார். நீங்கள் உணவருந்தும் இடம் இதுவல்ல. உங்களுக்காகப் பிரத்தியேகமான விருந்தினர் விடுதியை கலாநிதி ராசா உசேன் ஒழுங்குபடுத்தியிருக்கின்றார்.”

அவ்வாறு டில்சான் முஸ்தாபா அவர்கள் கூறியதும் எனக்குத் தர்மசங்கடமாக இருந்தது. அவர் அழைத்தது என்னை மட்டும்தான். நூற்று ஐம்பது மைல் தூரத்தில் உள்ள கலாப்ஜாவில் இருந்து என்னை சந்திப்பதற்காக வந்திருந்த அவாரா உசேனை அவர் அழைக்கவில்லை. அவரை அவ்விடத்தில் விட்டுச் செல்வதும் கடினமாக இருந்தது. அதேநேரத்தில் ஆளை அனுப்பி என்னை விருந்தினர் விடுதிக்கு அழைத்த சுலைமானி பல்கலைக் கழக வேந்தரின் அழைப்பையும் என்னால் தட்ட முடியவில்லை. அப்பொழுது அவாரா உசேன் கூறினார்: “சென்று வாருங்கள். மண்டபத்தில் சந்திப்போம்...”

விருந்தினர் விடுதியை நோக்கி நாம் சென்று கொண்டிருந்த பொழுது டில்சான் முஸ்தாபா எனது பூர்வீகம் பற்றிப் பேச்சுக் கொடுத்தார். நான் ஒரு தமிழன் என்பதையும், இலண்டனில் நீண்ட காலமாக வசிக்கின்றேன் என்பதையும் குறிப்பிட்ட பொழுது அவர் கூறினார்: “எனது துணைவியாரும், பிள்ளைகளும் இலண்டனில் தான் வசிக்கின்றார்கள். நானும் அங்குதான் வசித்து வந்தேன். எனது தாயகத்தின் இளைய தலைமுறைக்குக் கல்வி கற்பிக்க வேண்டும் என்பதற்காக இப்பொழுது நிரந்தரமாக இங்கு வாழ்கின்றேன். இங்கு சுலைமானி பல்கலைக் கழக நுண்கலைப் பீடத்தின் திரைப்படப் பிரிவின் அதிபராகப் பணிபுரிகின்றேன். எனது குடும்பத்தைப் பார்ப்பதற்காக அடிக்கடி நான் இலண்டனுக்கு வந்து செல்வதுண்டு.”

அவர் அவ்வாறு கூறியது எனக்கு வியப்பாகவும், தமிழீழத்தின் நினைவுகளை மனதில் அலைமோத வைக்கும் வகையிலும் அமைந்தது.

முதல் நாள் மதியம் சுலைமானி பல்கலைக்கழக வேந்தருடன் நான் உணவருந்தி விட்டுக் கை கழுவச் சென்ற பொழுது, அங்கு நின்ற அவரது உதவியாளர் ஒருவர் என்னிடம் கேட்டார், “நீங்கள் ஐரோப்பாவில் எந்த நாட்டில் வசிக்கின்றீர்கள்?” என்று. பிரித்தானியா என்று நான் பதிலளித்த பொழுது அவர் கூறினார், தான் நீண்ட காலமாக யேர்மனியில் வசித்து வந்ததாகவும், தனக்கு யேர்மனிய குடியுரிமை உண்டு என்றும், எனினும் தற்பொழுது தாயகம் திரும்பிப் பணி புரிவதாகவும் தெரிவித்திருந்தார்.

இப்பொழுது அவரைப் போன்ற இன்னொருவரை நான் சந்தித்திருந்தேன். தமது தாயகத்தின் மீது எந்த அளவிற்குப் புலம்பெயர்ந்த குர்தி மக்கள் காதல் கொண்டுள்ளார்கள் என்பதை இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் இந்த இருவருடன் நான் நிகழ்த்திய சந்திப்புக்கள் புலப்படுத்தியிருந்தன.

தொடர்ச்சி 18ம் பக்கம்

தமது தாயகத்தின் மீது எந்த அளவிற்குப் புலம்பெயர்ந்த குர்தி மக்கள் காதல் கொண்டுள்ளார்கள் என்பதை இருபத்து நான்கு மணிநேரத்திற்குள் இந்த இருவருடன் நான் நிகழ்த்திய சந்திப்புக்கள் புலப்படுத்தியிருந்தன.

மரணம் ஒன்றே மாறா...

எப்படி செத்தால் என்ன? செஞ்சோற்றுக் கடன் கழிக்க என்னை வளர்த்து ஆளாக்கிய துரியோதனனிடமே இருந்து உயிரை விடுகிறேன்' என்கிறான். இங்கே கர்ணன் கூறியது தான், மேற்படி பழமொழிக்கு உண்மையான பொருள்.

ஆனால், தாயகத்தில் ஆரம்பக் கூற்றுப்படி 'ஆறிலும் சாவு, நூறிலும் சாவு' என்ற பழமொழிக்கு அமைவாக சாவானது இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. நாம் செய்திகளைப் புரட்டும்போது, கூடுதலான விபத்து மரணங்களின் போதும் ஆறு, நூறு என்ற விதிவிலக்கே இல்லாமல் மரணங்கள் மலிந்துகிடக்கின்றன என்பதே உண்மையாகிவிடுகின்றது.

இதனை நிரூபிப்பதாக கடந்தவாரம் கிளிநொச்சி கொக்காவில் பகுதியில் இரவு இடம்பெற்ற கோர விபத்தில் நால்வர் பலியாகியுள்ளனர். அதிவேகமாக வந்த கயேஸ் வாகனம் வீதியில் தரித்திருந்த பாரஊர்தியுடன் மோதி விபத்திற்குள்ளானது. இச்சம்பவத்தில் நான்கு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஆடை வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்த நால்வரே விபத்தில் உயிரிழந்தனர். அவர்களில் ஒருவரான நவரத்தினம் அருண் கல்வியை நிறைவு செய்துவிட்டு, குடும்பச்சுமையை ஏற்று, சொந்தக்காலில் நிற்க விரும்பி வர்த்தகத்தில் ஈடுபட்டவர். அன்னையின் அரவணைப்பினை இழந்து, தந்தையின் வழிநடத்தலில் வாழ்ந்து வந்த சிந்துஜனால் வாழ்வில் வெகுதூரம் பயணிக்க முடியவில்லை. ஏனைய இருவரான சந்திரசேகரம் ஜெயச்சந்திரனும் சின்னத்துரை கிருஸ்ணரூபனும் இரத்த உறவுகளாவர்.

குறித்த சோகம் ஆறமுன்னர், யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை காலை இடம்பெற்ற கைக் கோடரித் தாக்குதலில் 3 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ள செய்தி அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சிறுமியை இவ்வாறு கோரமாக வெட்டிப் படுகொலை செய்த பெரியப்பா தானும் விசமருந்தி தற்கொலை செய்து கொண்டார். அத்துடன் குறித்த நபரின் தாயார் கோடரித்தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவருகின்றார்.

தனிப்பட்ட தகராறே கோடரித் தாக்குதலுக்கு காரணம் என தெரியவந்துள்ளது. உயிரிழந்த சிறுமியின் இளவயதுப் பெற்றோர், மருத்துவமனையில் குழந்தை நல பரிசோதனைக்கு சென்றிருந்த நிலையில், வீடுதிரும்பியபோது, வீட்டின் முன்பாக ஆட்கள் குழுமியிருந்ததைப் பார்த்து என்ன ஏது என அறியாமல், கேள்வி எழுப்பியுள்ளனர். அச்சத்தில் யாரும் எதுவும் சொல்லாத நிலையில், உள்ளே சென்ற அவர்கள் கண்முன்னே இரத்த வெள்ளத்தில் சிறுமியின் உடல். இதனை எதிர்பார்க்காத தாயார், வயிற்றில் குழந்தையுடன் கதறிய காட்சி சொல்ல வார்த்தைகள் இல்லை.

கொலை வெறி, கொலைவெறி எங்கு பார்த்தாலும் கொலை வெறி. சிங்களப் படைகளும் சிங்கள ஆட்சிகளும் எமது தமிழ் மக்களுக்குக் காட்டியதெல்லாம் கொலைவெறி தான். இதனைப் பின்பற்றியே மைத்திரி ஆட்சியிலும் எமது மக்கள் கோடரிகள் போன்ற ஆயுதங்களுடன் புறப்பட்டு விட்டனர். எங்கே...?

இதுதான் இன்றைய தாயகத்தின் நிலை. இது சிந்திக்கும் நேரமல்ல சிந்தித்து செயற்படும் நேரம்!!

(சூறையாடல்கள் தொடரும்)

தமிழர் தாயகப் பகுதியில்...

இதனுடாக மாவட்டத்திலுள்ள படித்த இளைஞர் யுவதிகள் வேலையில்லாமல் திண்டாடும் அதேசமயத்தில், தென்னிலங்கை சிங்களவர்களுக்கு நியமனங்களை கொடுத்து மாவட்டத்தில் தங்கக் கூடியவாறு பல வசதிகள் வழங்கப்படுகின்றன.

மட்டக்ளப்பு மாவட்டத்தில் வைத்தியாசலை, நீர்ப்பாசனத் திணைக்களகம், நீதிமன்றம், தேசிய பாடசாலைகள், அரச வங்கி, இதனைத் தவிர தென்னை அபிவிருத்தி அதிகார சபை, மின்சார சபை, போன்றவற்றில் உள்ள சிற்றூழியர்கள் தொடக்கம் உயர்பதவி வரைக்கும் சிங்களவர்கள் நியமிக்கப்படுகிறனர். இதனூடா அவர்களுக்கான வதிவிடங்கள் வழங்கப்பட்டு அவர்களை வாக்காளர்களாக பதிவு செய்யும் நடவடிக்கையும் இடம்பெற்றவருகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பிரசித்திவாய்ந்த சுற்றுலாத்துறைக்கு பெயர்போன பாசிகுடா இன்று முழுமையாக சிங்கள மயமாக மாறியுள்ளது. படையினரின் சுற்றுலா விடுதி, தென்பகுதி அரசியல் வாதிகளின் விடுதி, தென் பகுதி சிங்களவர்களின் விடுதி என அனைத்தும் சிங்களவர்கள். அங்கு வேலை செய்பவர்கள் கூட சிங்களவர்கள். முன்னாள் ஆட்சியாளர்களின் பிரபலமான சுற்றுலாவிடுதி 'மாழுமாழு' இங்கு நூறு விகிதம் சிங்களவர்கள் பணிபுரிகின்றார்கள். அவர்களின் குடும்பங்கள் அப்பகுதியில் தங்கியுள்ளனர். அவ்வாறான நிலையில், அவர்களின் எதிர்கால மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அமைந்துவிடும். அம்பாறை மாவட்டத்தை சிங்கள மாவட்டமாக மாற்றிவிட்டார்கள், மட்டக்களப்பு மாவட்டத்தை மாற்றிக்கொண்டுவருவதை யாரும் கண்டுகொள்ளவில்லை.

மாவட்டத்திலுள்ள தமிழ் அரசியல்வாதிகள் எல்லாம் எவ்வாறு தங்கள் பைகளை நிரப்பலாம், அடுத்த முறை எவ்வாறு தங்கள் நாற்காலியைத் தக்கவைத்துக் கொள்ளலாம், எந்த ஒப்பந்தக்காரனுடன் பேரம் பேசினால் அதிக வருமானம் பெறலாம் என்பதைப் பற்றியே இரவு பகலாக சிந்திக்கின்றார்கள் தவிர மக்களைப் பற்றியோ அல்லது மண்ணைப் பற்றியோ சிந்திப்பதற்கு யாருமில்லை. இந்நிலை தொடருமாக இருந்தால் தமிழர்களின் தாயகப்பகுதி நூறுவீதம் சிங்கள மயமாகிவிடும் என்பது நிதர்சனம்.

திருகோணமலை மாவட்டத்தில் சம்பூர் பகுதியில் சூடைக்குடா கிராமம் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்தாக அங்குள்ள முன்னோர்கள் சான்றுடன் உறுதிப்படுத்துகின்றனர். ஆனால், அண்மையில் இப்பகுதி சிங்களவர்கள் வாழ்ந்த பகுதியாகவும், அங்கு பௌத்த மதத்தின் சின்னங்கள் அழிக்கப்படுவதாக சிங்கள ஊடகங்கள் பிரச்சாரத்தில் ஈடுபடுகிறது. அதுமாத்திரமல்ல அங்குள்ள முருகன் ஆலய பரிபாலன சபையினரை கைது செய்து ஒரு வாரகாலம் தடுப்பில் வைத்து விட்டு பௌத்த சின்னங்களை அழித்ததாக ஒப்புக்கொண்டால் விடுதலை செய்யப்படுவதாக கூறியுள்ளனர்.

தற்போது சம்பூர் பகுதியில் சூடைக்குடா மாத்திரமல்ல சம்பூர் பகுதியில் கடற்கரையை அண்டிய பகுதிகள் மற்றம் மலை பகுதிகளை தொல்பொருள் திணைக்களகம் இங்கு பௌத்தத்தின் சின்னங்கள் இருப்பதாக கூறி ஆய்வு செய்ய ஏற்பாடுகள் இடம் பெற்றுவருகிறது. அவ்வாறான நடவடிக்கை இடம்பெறுமாயின் தமிழர்களின் ஆண்டாண்டு காலமாக வாழ்ந்த பூமி பறிபோகப் போகிறது.

அவ்வாறான நடவடிக்கை ஒன்றை ஏன் அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய தேவை என்ன? என்பது பற்றி உற்று நோக்கினால், சம்பூர் பகுதியில் அமைந்துள்ள 'விதுரா' கடற்படை முகாம் சிறீலங்காவின் முதல்தர கடற்படை பயிற்சி கல்லூரியாகும். அதுமாத்திரமல்ல ஆசிய பசுவிக் பிராந்தியத்தில் குறிப்பாக அமெரிக்காவின் முழுமையான கட்டுப்பாட்டிலுள்ள ஒரு தளமாகா திருகோணமலையை மாற்றி சீனா உட்பட வட கொரியை கண்காணிக்கும் கேந்திரநிலையமாக மாற்றியமைக்கும் அமெரிக்காவின் திட்டதிற்கு சிங்கள அரசாங்கம் துணைபோவதனுடாக, அதன் பக்கவிளைவாக அங்கு சிங்களவர்களை குடியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதுதான் உண்மையாகும்.

மொத்தத்தில் தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தை நசுக்கியதுமாத்திரமின்றி, தமிழர்களின் நில ஆக்கிரமிப்பிலும் வல்லரசுள் ஈடுபட்டுள்ளதை அவதானிக்கலாம். இவ்வாறான நடவடிக்கையை தடுக்க தமிழ் அரசியல் தலைமைகள் முன்வரமாட்டார்கள். காரணம் இவர்களின் சிலர் அமெரிக்கா மற்றம் சிறீலங்கா அரசின் கைபொம்மையாக செயற்படுகின்றனர். எனவே, மக்கள் தமது உரிமைகளை பெற்றுக் கொள்ள தாமாக முன்வந்து உரிமைப் போராட்டங்களை நடாத்துவதன் மூலமே தமது இறைமையைப் பெற்றக் கொள்ள முடியும்.

வர்த்தகம் மூலதனம்

ஜெகன்

இந்திய வாகன விற்பனையில் சாதனை!

உலகில் அதிக வாகனங்கள் விற்பனையாகும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முன்னணியில் இருக்கின்றது. கடந்த ஆண்டு (2017) முதல் முறையாக இந்திய சந்தைகளில் பயணிகள் வாகன விற்பனை 30 இலட்சம் என்ற மைல்கல்லைத் தாண்டி சாதனை படைத்துள்ளதாக இந்திய மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து அந்த சங்கத்தின் துணை தலைமை இயக்குநர் சுகதோஸன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: 2017ம் ஆண்டில் 3,229,109 பயணிகள் வாகனம் விற்பனையாகியுள்ளது. 2016ல் விற்பனையான 2,966,603 வாகனங்களுடன் ஒப்பிடும்போது இது 8.85 சதவீத வளர்ச்சியாகும். பயணிகள் வாகன பிரிவில், கார் விற்பனை வழக்கமாக முதலிடத்தில் உள்ளது. கடந்த ஆண்டில் கார் விற்பனை 2,062,357 என்ற எண்ணிக்கையிலிருந்து 5.13 சதவீதம் அதிகரித்து 2,168,151 ஆனது.

இவைதவிர, இருசக்கர வாகனங்களின் விற்பனையும் சாதனை அளவாக 17,686,685 என்ற எண்ணிக்கையிலிருந்து 8.43 சதவீதம் வளர்ச்சிகண்டு 19,176,905 ஆனது. உள்நாட்டு சந்தையில் 2017ல்தான் முதல் முறையாக பயணிகள் வாகன விற்பனை 32 இலட்சத்தை தாண்டி சாதனை படைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், இருசக்கர வாகனங்களின் விற்பனையும் கடந்த ஆண்டில்தான் வரலாற்றில் இதுவரையில் இல்லாத அளவில் 1.91 கோடியாக உயர்ந்துள்ளது.

இதேவேளை, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியைப் பொருத்தவரையில் 2017ல் 738,894 பயணிகள் வாகனங்கள் ஏற்றுமதியாகியுள்ளன. 2016 ஏற்றுமதியான 738,137 வாகனங்களுடன் ஒப்பிடுகையில் இது 0.1 சதவீதம் மட்டுமே அதிகம் என்று இந்திய மோட்டார் வாகன தயாரிப்பாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தனியார் மயமாகும் பாகிஸ்தான் அரசு விமானங்கள்!

பாகிஸ்தான் அரசுக்கு சொந்தமான பொதுத்துறை விமான நிறுவனமான பாகிஸ்தான் ஏர்லைன்சை தனியார் மயமாக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. பாகிஸ்தானில் வரும் யூலை அல்லது ஓகஸ்ட் மாதத்தில் பொது தேர்தல் நடைபெற உள்ளது. அதற்கு முன்னதாகவே தனியார் மயமாக்க அந்நாட்டு அரசு முடிவு செய்துள்ளது. பாகிஸ்தான் ஏர்லைன்ஸ் பெரும் நட்டத்தை சந்தித்து வருகிறது. இதனால் பாகிஸ்தான் அரசு இந்த முடிவை எடுத்துள்ளது. இதுகுறித்து அந்நாட்டு அமைச்சர் டானியல் அலிஸ் தெரிவித்துள்ளதாவது: பாகிஸ்தான் சர்வதேச விமான நிறுவனம் பெரும் நட்டத்தை சந்தித்து வருகிறது.

இதனால் விமான நிறுவனத்தை தனியார் மயமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. நவாஸ் ஷெரீப் பிரதமராக இருந்த போதே இந்த நடவடிக்கை துவங்கியது. இருப்பினும் பல்வேறு கட்டங்களில் தனியார் மயமாக்குவது ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில் 2016ம் ஆண்டில் மாதம் ஒன்றிற்கு 30 மில்லியன் டொலர் வீதம் 186 பில்லியன் அளவிற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனால் மீண்டும் தனியார் மயமாக்கல் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கான வரையறை பிரதமர் 'ாஹித் காகன் அபாஸி தலைமையிலான அமைச்சரவை குழுவின் ஒப்புதலுக்கு விரைவில் அனுப்பிவைக்கப்படும். அமைச்சரவையின் ஒப்புதலுக்கு பின்னர் தனியார் மயமாக்கப்படும் என அவர் தெரிவித்தார். எமிரேட்ஸ் உள்ளிட்ட சில நிறுவனங்கள் பாகிஸ்தான் ஏர்லைன்சை (பிஐஏ) பங்குகளை வாங்குவதில் இப்போதே ஆர்வம் காட்டி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரு கதை

தத்துவ கதைகள்

ஒரு குரு நிறைந்த சீடர்களுடன் மிக உயர்ந்த நிலையில் இருந்து வந்தார். ஒரு முறை அவர் தனது மறுபிறப்பின் தன்மையை காண முடிவு செய்து ஒரு நதிக்கரையில் அமர்ந்து தவமேற்கொண்டார். தவத்தின் பயனாக மறுபிறப்பில் தான் ஒரு பன்றியாக பிறப்பெடுப்பதை அறிந்தார், மிக உயர்ந்த நிலையில் உள்ள நாம் முன்வினை காரணமாக இப்படி ஒரு பிறப்பை எடுத்து சில காலம் வாழும் நிலை வந்ததை அறிந்து மிகவும் மனவேதனை அடைந்தார்.

தனது சீடர்களில் பிரியமானவனை அழைத்து தன் நிலையை சொல்லி அவன் கையில் ஒரு வாளைக் கொடுத்து இப்போதே புறப்படு, இன்னும் ஐந்து வருடங்களில் இந்த ஊரில் நான் பன்றியாக பிறந்திருப்பேன், என்னை கண்டவுடன் அந்த பன்றியுருவத்தின் நெற்றியில் என் உருவம் உனக்கு மட்டும் தெரியும். கண்டவுடன் என்னை வெட்டிவிடு என்று மிக உருக்கமாக அவனிடம் கேட்டுக்கொண்டார். அதனை கேட்ட சீடனும் சரி என்று சொல்லி புறப்பட்டு போனான்.

கால் நடையாகத்தானே போகவேண்டும், சுற்றி அலைந்து குருநாதர் சொன்ன ஊரை வந்து சேர்ந்தான் சீடன். அந்த ஊரில் உள்ள பன்றிகளை ஒவ்வொன்றாக நெற்றியை பார்த்தவாறே அலைந்தான். ஆனால் அந்த பன்றியை காணவில்லை.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு விதை

ஜோனியை பேச அனுப்பிவிட்டு சுட்டுக்கொன்ற இந்தியப்படை

கேணல் கிட்டுவையும் லெப். கேணல் ஜோனியையும் அக்கால நிகழ்ச்சிகளிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. கேணல் கிட்டு பல்துறை ஆற்றலாளராக திகழ்ந்ததில் பக்கத்துணையாக விளங்கியவர்களில் ஜோனி குறிப்பிடத்தக்கவர். பருத்தித்துறை புலோலியில் சாரையடி என்ற ஊரில் 21.05.1962 இல் பிறந்தார். அவரது இயற்பெயர் விக்கினேஸ்வரன் விஜயகுமார். பல்கலைக்கழகத்தின் விவசாயப்பீட மாணவராக இருந்தபோது 1983ம் ஆண்டு போராட்டத்தில் இணைந்து கொண்டார். சிறுவனாக இருந்தபோதே போராட்டத்திலே இணைய முற்பட்டபோது அவரது பெற்றோர் விரும்பாததால் கொழும்பில் படிக்க வைக்கப்பட்டார். ஆனால் 1983ம் ஆண்டில் சிங்களவர்களால் தமிழர்கள் மீது நடத்தப்பட்ட இனப்படுகொலையைத் தொடர்ந்து போராட்டத்தில் இணைந்து கொண்டார். அக்கால கட்டத்தில் இந்தியா அதன் நலன்சார்ந்து தமிழீழ விடுதலைக்காகப் போராடிய அமைப்புகளுக்கு பயிற்சியைத் தர முன்வந்தது. விடுதலைப் புலிகளின் 200 பேருக்கு 2 பிரிவுகளாகப் பயிற்சி அளித்தது. இந்தப் பயிற்சிக்காக ஜோனி இந்தியா சென்றபோது அவர் பயிற்சியில் பங்கேற்கவில்லை. தொலைத் தொடர்புத்துறையில் பயிற்சி பெற்று நாடு திரும்பினார்.

பல்வேறு தாக்குதல்களில் முன்னின்று செயற்பட்டார். 3 முறை விழுப்புண் பெற்றவர் ஜோனி. கட்டுவன் தாக்குதலின் போது நெற்றியின் உள்சென்ற ரவை காதின் வழியே வெளிவந்தது. அதனால் நெற்றியில் அவருக்கு மென்மையான தோலாக இருந்தது. 1987ல் தேசியத் தலைவர் அவர்கள் தமிழீழம் திரும்பியபோது ஜோனியின் ஆற்றலைக் கண்டு அவருக்கு 90 பேர் கொண்ட அணியைத் வழங்கி, ஒரு தாக்குதல் அணியாகப் பயிற்சி தந்து தாக்குதலில் ஈடுபடும்படி பணித்திருந்தார். முதன் முதலில் ஒழுங்கமைக்கப்பட்ட ஒரு தாக்குதல் அணியாகக்கூட அது இருக்கலாம். கேணல் கிட்டு ஜோனியை ஒரு சமாதானத் தூதுவனாக இந்தியா அனுப்பி வைத்தார்.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு குறள்

அறத்துப்பால் – அடக்கமுடைமை

ஒருமையுள் ஆமைபோல்
ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

உறுப்புகளை ஓர் ஓட்டுக்குள் அடக்கிக் கொள்ளும் ஆமையைப் போல் ஐம்பொறிகளையும் அடக்கியாளும் உறுதி, காலமெல்லாம் வாழ்க்கைக்குக் காவல் அரணாக அமையும்.

ஒரு மருத்துவம்

பேரிச்சம் பழத்தின் நன்மைகள்!

இயற்கையின் கொடையான பழங்களில் மக்களுக்கு வரப்பிரசாதமாக உள்ள பழங்களில் பேரீச்சம்பழம் முதலிடம் வகிக்கிறது. வைட்டமின் A குறைவினால்தான் கண்பார்வை மங்கலாகும். இதைக் குணப்படுத்த பேரீச்சம் பழமே சிறந்த மருந்தாகும். மாலைக் கண் நோயால் பாதிக்கப்பட்டவர்கள், பேரீச்சம் பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்து சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான எல்லா சத்துக்களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும்.

சில குழந்தைகள் எதைச் சாப்பிட்டாலும் உடல் பெருக்காமல் மெலிந்தே காணப்படுவார்கள். குழந்தைகளுக்கு பேரீச்சம் பழத்தை தேனுடன் ஊறவைத்து காலை, மாலை என இருவேளையும் கொடுத்து வந்தால் குழந்தையின் உடல் தேறி, வலுவுடனும், புத்துணர்ச்சியுடன் சுறுசுறுப்பாகவும் இருப்பார்கள்.

பொதுவாக பெண்களுக்கு அதிக கல்சியம் சத்தும், இரும்புச் சத்தும் தேவை. மாதவிலக்கு காலங்களில் ஏற்படும் உதிரப் போக்கால் இத்தகைய சத்துக்கள் குறைகின்றன. இதை நிவர்த்தி செய்யவும், ஒழுங்கற்ற மாத விலக்கை ஒழுங்கு படுத்தவும் பேரீச்சம் பழம் மருந்தாகிறது. 45 வயது முதல் 52 வயது வரை உள்ள காலகட்டத்தில் மாதவிலக்கு முழுமையடையும். அப்போது பெண்களின் எலும்புகள் பலவீனமாக இருக்கும். மேலும் கை, கால் மூட்டுகளில் வலி உண்டாகும். இதனை சரிசெய்ய, பேரீச்சம் பழத்தை பாலில் கலந்து கொதிக்க வைத்து பாலையும், பழத்தையும் சேர்த்து சாப்பிட்டு வந்தால் உடல் என்றும் ஆரோக்கியமாக இருக்கும்.

பேரீச்சம் பழத்தின் கொட்டைகளை நீக்கி பாலில் போட்டு காய்ச்சி ஆறியபின் பழத்தை சாப்பிட்டு பாலையும் பருகி வந்தால் சளி, இருமல் குணமாகும். நீரீழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எலும்புகள் பலம் இழந்து காணப்படும். இவர்களுக்கு கல்சியம் இரும்பு சத்து தேவை. இவர்கள் தினமும் ஒன்று அல்லது இரண்டு பழம் வீதம் சாப்பிட்டு வந்தால் உடலுக்குத் தேவையான சத்துக்கள் கிடைக்கும்.

ஒரு தகவல்

மிக வெப்பமான கோள் எது?

இந்த சூரிய மண்டலத்தில் சூரியனுக்கு அருகில் புதன் கோளும் அதற்கு அடுத்த இடத்தில் வெள்ளி கோளும் 3வது இடத்தில் இந்தப் பூமியும் இருக்கின்றன. இதில் சூரியனுக்கு அருகில் இருக்கும் புதன் கோளிலா அல்லது அதற்கு அடுத்த இடத்தில் இருக்கும் வெள்ளி கோளிலா வெப்பம் அதிகமாக இருக்கும் என்று கேட்டால் யாரும் உடன் சொல்வது புதன் கோளில்தான் என்று.



ஆனால் உண்மை அதுவல்ல. சூரியனுக்கு அருகில் புதன் இருந்தாலும், அதற்கு அடுத்த இடத்தில் இருக்கும் வெள்ளிக் கோளில்தான் வெப்பம் அதிகம் என்கின்றனர் விஞ்ஞானிகள். புதன் சூரியனுக்குப் பக்கத்துல இருந்தாலும், அது மிகச் சிறிய கோள்தான். அதன் அளவு பூமியின் துணைக்கோளான சந்திரனை விட, ஒன்றரை மடங்கு அதிகம். இதுதவிர, அதுல வாயு மண்டலம் எதுவும் கிடையாது. மிகவும் மெல்லிய மண்டலம் உள்ளது.

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பொன்மொழி

துணிந்து நில், துணிந்து நில்!
மனிதன் இறப்பது ஒருமுறைதான்.
- விவேகானந்தர்

ஒருபழமொழி

தனித்த ஓநாய்
சிங்கத்துக்குச் சமம்

ஒரு வரலாறு

கவிதைக்காக பல்கலைக்கழகம் போனவர்

ரொபர்ட் ஓபன்ஹைமர் (Robert Oppenheimer 1904 - 1967) என்று ஒரு அறிவியல் அறிஞர் இருந்தார். இவர் அணுக்கருப் பிளப்பு, அணு உலை சார்ந்த அறிவியலில் சிறந்து விளங்கினார்.

இரண்டாம் உலகப்போரில் மன்ஹாட்டன் செயல்திட்டத்தில் இவர் ஆற்றிய பங்களிப்பின் காரணமாக இவர் 'அணுகுண்டுகளின் தந்தை' என்றும் அறியப்படுகிறார். இவர் தனது 21ம் வயதில் ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திற்குச் சென்று படித்தார். படிப்பதில் ஆர்வம் அதிகம் உடையவர். அதனால், நூலகத்திற்குச் சென்று பல நூல்களையும், ஆய்வுக்கட்டுரைகளையும் தேடித் தேடிப் படிப்பார்.

இதனால், பல நேரங்களில் அவரது தந்தை தன் மகனைக் காணவில்லையே எங்கு சென்றிருப்பான் என்று நூலகத்திற்கு வந்து தேடிச் செல்வார். ஒரு கட்டத்தில் அவரது தந்தை, தனது மகன் எப்போதும் படித்துக் கொண்டே இருக்கிறானே? என்று பயந்தே போய் விட்டார். அதனால், மகனின் மனநிலையை மாற்ற எண்ணினார். தனது மகன் உல்லாசமாக பொழுதைக் கழிக்க வேண்டும் என்று நினைத்து ஒரு படகை வாங்கிக் கொடுத்தார். ஆனால், ஹைமரோ இங்கிலாந்தில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தை பார்க்க வேண்டும் என்று விரும்பினார். அதனால்,

தொடர்ச்சி 22ம் பக்கம்

ஒரு பழமொழியும் விளக்கமும்

பட்டாதான் தெரியும் பல்லிக்கு சுட்டாதான் தெரியும் நண்டுக்கு.

பல்லி நம் மேல் வந்து விழுவது, சாப்பாட்டில் விழுவது போன்ற பல அழிச்சாட்டியங்களைச் செய்யும். அது தவறு என்று அதனால் உணர முடியாது. நாம் அதனை அடிக்கும்போதுதான் உணரும்.

நண்டை நாம் சுட்டுத் திங்கும்போதுதான் அது புரிந்துகொள்ளும் வலையை விட்டு வெளியே வருவதால் வரும் ஆபத்தை.

அதுபோல, ஒருசிலருக்கு அவர்களது தவறை உணர முடியாத அளவுக்கு மூளை மழுங்கியிருக்கும். அவர்கள் தவற்றின் விளைவுகளை அனுபவித்தால்தான் திருந்துவார்கள்.

தலைவரின் சிந்தனை...

> தமிழீழம் என்ற சுதந்திர தேசத்தைக் கட்டியெழுப்புவதில் புலம்பெயர் மக்களின் பங்கு பற்றிய தலைவரின் சிந்தனை. எத்தனையோ ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ள குர்திஸ்தானில் செயல்வடிவம் பெற்ற வண்ணம் இருப்பது எனக்கு ஒருவிதத்தில் பெருமிதமாகவே இருந்தது.

இவர்கள் இருவரும் மட்டுமல்ல. எனது நண்பரும், நான் குர்திஸ்தானுக்கு வருகை தருவதற்குக் காரணமாக அமைந்தவருமான கலாநிதி இப்ராகிம் மாலசாடா அவர்களும் இவர்களைப் போலத்தான். அவர் நெதர்லாந்துக் குடிமகன். அவரது துணைவியாரும் பிள்ளைகளும் பிரித்தானியாவில் வசிக்கின்றார்கள். ஆனால் அவரோ குர்திஸ்தானின் இளைய தலைமுறைக்குக் கல்வி கற்பிப்பதற்காக மாதக் கணக்கில் குடும்பத்தைப் பிரிந்து தாயகம் திரும்பி சொரான் பல்கலைக்கழகத்தில் பணிபுரிவார். அந்த அளவிற்குத் தேசப்பற்று மிக்கவர் கலாநிதி இப்ராகிம் மாலாசாடா.

டில்சான் முஸ்தாபா அவர்களுடன் உரையாடியவாறு விருந்தினர் விடுதியை நோக்கி நான் நடந்து சென்று கொண்டிருந்த பொழுது என் மனதில் இந்த மூவரின் தேசப்பற்றே அலைமோதிக் கொண்டிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் 2003 ஆம் ஆண்டின் இறுதியில் நான் தமிழீழ தாயகம் சென்றிருந்த பொழுது என்னிடம் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்கள் கூறிய வார்த்தைகளும் மனதில் அலைமோதிக் கொண்டிருந்தன.

அந்தச் சந்திப்பு 29.12.2003 அன்று நடைபெற்றது. அப்பொழுது தலைவர் அவர்கள் என்னிடம் கூறினார்: “நான் புலம்பெயர்ந்த மக்களிடம் எதிர்பார்ப்பது இதைத்தான். அவர்கள் அங்கிருந்தவாறு எமது தாயகத்தின் விடுதலைக்காகவும், வளர்ச்சிக்காகவும் தங்களால் முடிந்த வழிகளில் உதவி புரியலாம். விரும்பியவர்கள் இங்கு வந்து முழுமையாகத் தேசியப் பணிகளில் ஈடுபடலாம். இங்கு நாங்கள் ஒரு அரசை வைத்திருக்கிறோம். எனவே அவர்கள் இங்கு வருவதற்கு எந்தத் தடையும் இல்லை. ஆனால் முழுமையாக இங்கு வர முடியாதவர்கள் தமது விடுமுறைக் காலங்களில் இங்கு வந்து தமது திறமைகளை எமது தேசத்திற்காகத் தந்துதவலாம்.”

தமிழீழம் என்ற சுதந்திர தேசத்தைக் கட்டியெழுப்புவதில் புலம்பெயர் மக்களின் பங்கு பற்றிய தலைவரின் சிந்தனை, எத்தனையோ ஆயிரம் மைல்கள் தொலைவில் உள்ள குர்திஸ்தானில் செயல்வடிவம் பெற்ற வண்ணம் இருப்பது எனக்கு ஒருவிதத்தில் பெருமிதமாகவே இருந்தது.

விருந்தினர் விடுதியில் சுலைமானி பல்கலைக்கழக வேந்தர் வழங்கிய விருந்தை முடித்துக் கொண்டு மண்டபத்திற்குத் திரும்பிய பொழுது, தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், குர்திஸ்தான் சுதந்திரப் போராட்டத்தையும் ஒப்பிட்டு நான் உரையாற்றுவதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

பலஸ்தீன விடுதலைப் போராட்டம் பற்றி திரு சேவியர் குய்னார்ட் அவர்களும், அவரைத் தொடர்ந்து குர்திஸ்தானின் ஆட்சியமைப்புப் பற்றிக் கலாநிதி நிக்கொலா சாலி அஸ்ரப் அவர்களும் உரை நிகழ்த்தியதைத் தொடர்ந்து நான் உரையாற்றுவதற்கான முறை வந்தது. என்னை அறிமுகம் செய்து வைத்த கலாநிதி ஜோன் லுஸ்-ரசீன் அவர்கள், என்னைத் தமிழீழத்தைச் சேர்ந்த அரசறிவியலாளர் என்றே அறிமுகம் செய்து வைத்தார். கரும்புலிகளை ஜப்பானின் கமிக்காஸ் தற்கொடையாளர்களுடன் ஒப்பிட முடியாது என்று முதல் நாள் கூறிய அதே ஜோன் லுஸ்-ரசீன் அவர்கள் தான், இப்பொழுது தமிழீழம் என்ற சொல்லை உச்சரித்தார். மனமாற்றமா? அல்லது வேறு ஏதும் காரணமா? என்பது புரியவில்லை.

எனது உரை முடிந்ததும் குர்திஸ்தானைச் சேர்ந்த ஈராக்கிய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் முன்வரிசையில் இருந்து எழுந்து வந்து எனக்குக் கைலாகு கொடுத்து விட்டு, எனது உரையின் எழுத்து வடிவத்தை தான் எடுத்துச் செல்லலாமா? என்று கேட்டார். அதனை அவரிடம் கொடுத்தேன்.

ஏனையவர்களின் உரையைத் தொடர்ந்து கேள்வி நேரம் ஆரம்பமாகியது. குறித்த நாடாளுமன்ற உறுப்பினர், குர்திஸ்தான் தனியரசுக்கான வாக்கெடுப்புப் பற்றி என்னுடைய அபிப்பிராயத்தைக் கேட்டார்.

அவரைத் தொடர்ந்து குர்திஸ்தானின் மூன்றாவது பெரிய அரசியல் கட்சியான கொறான் (மாற்றம் என்று பொருள்படும்) கட்சியை சேர்ந்த காசி காரீப் சொராப் அவர்கள், “தமிழீழத்திற்கென்று அரசியல் தத்துவஞானிகள் எவராவது இருக்கின்றார்களா?” என்று வினவினார். தேசத்தின் குரல் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் பெயரைக் குறிப்பிட்டேன்.

கேள்வி நேரம் முடிவடைந்ததும், வந்திருந்த பன்னாட்டு அரசறிவியலாளர்களை மதிப்பளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. என்னுடன் உரையாடிய நண்பர்கள் அனைவரும் என்னுடன் நிழற்படம் எடுத்தார்கள்.

நேரம் மாலை 6:00 மணியை எட்டியிருந்தது: சூரியன் தனது ஒளிக்கீற்றுக்களை உள்ளிழுத்து மறைந்து கொண்டிருந்தான். சுலைமானி பல்கலைக்கழகத்தை விட்டுப் புறப்பட்டு மீண்டும் ரமாடா ஐந்து நட்சத்திர விடுதிக்கு நாம் செல்வதற்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. இலண்டன் செல்வதற்காக இன்னும் சரியாக ஆறு மணிநேரத்தில் நாம் ராமாடா விடுதியிலிருந்து விமான நிலையத்திற்குப் புறப்பட்டாக வேண்டும்.

விடுதி நோக்கி எமது வாகனம் புறப்பட்ட பொழுது என்னிடம் கலாநிதி நிக்கொலா சாலி அஸ்ரப் கூறினார்: “ராமாடா விடுதிக்கு மறுபுறத்தில் ஒரு மலைப் பகுதி இருக்கின்றது. கடந்த காலத்தில் யுத்தம் நடைபெற்ற பகுதி அது. இப்பொழுது அங்கு சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கிறார்கள். அங்கு உங்களை அழைத்துச் செல்லலாம் என்று எண்ணுகின்றேன்.”

குர்திஸ்தானில் கால் பதித்த கடந்த நாற்பது மணிநேரத்தில் எனது மனதில் ஒரேயொரு குறை இருந்தது. சதாம் உசேனின் இனவழிப்புப் படைகளுக்கு எதிராகக் குர்தி சுதந்திரப் போராளிகள் களமாடிய வீரம் விளைந்த நிலம் எதனையும் அதுவரை நான் தரிசிக்கவில்லை என்பதுதான் அது. இப்பொழுது அவ்வாறான ஒரு இடத்திற்கு என்னை அழைத்துச் செல்வதாக நிக்கொலா கூறியது மகிழ்ச்சியாக இருந்தது.

குர்திஸ்தான் பயணம் தொடரும்...

கோடி கோடியாக பணம் மாட்டிய பணிப்பெண்

விமானத்தில் கோடி கோடியாக பணத்தை கடத்திய விமானப் பணிப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார். டில்லியில் இருந்து ஹொங்கொங் புறப்பட்ட ஜெட் ஏர்வேஸ் விமானத்தில் விமானப் பணிப் பெண்ணாக பணியாற்றியவரிடம், இருந்து 480,200 டொலர் தொகையை இந்திய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் பறிமுதல் செய்துள்ளனர்.



விமானப் பணிப்பெண்ணிடம் நடத்திய விசாரணையில், டில்லியில் உள்ள பயண முகவர் உரிமையாளர் மூலமாக அமெரிக்க டொலரை ஹொங்கொங்கில் உள்ள சிலருக்கு வழங்கிவிட்டு அதற்கு மாற்றாக, தங்க கட்டிகளை வாங்கி வந்து கொடுத்து வந்திருப்பது தெரியவந்துள்ளது. இது பல நாளாக நடந்து இருக்கிறது. இதுவரை கோடிக்கணக்கில் இவர் பணத்தை மாற்றி உள்ளார் என்று கூறப்படுகிறது. தன்னுடைய உடையில் மறைத்து இவர் பணத்தை கடத்தி இருக்கிறார். பணிப்பெண் என்பதால் பெரிய சோதனை இல்லாமல் இவ்வளவு நாள் தப்பித்துள்ளார்.

ஜெட் ஏர்வேஸில் பணியாற்றும் தேவ்ஷி குல்ஷ்ரேதா (devshi-kulshreshtha) என்ற இப்பெண் ஹொங்கொங்கில் இருக்கும் மாபியா கும்பல் ஒன்றுடன் தொடர்பில் இருந்துள்ளார். கறுப்பு பணத்தை தங்கமாக மாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள கும்பலுடன் இவ் விமானப் பணிப் பெண்ணுக்கு தொடர்பு இருப்பது தெரியவந்துள்ளதாக தெரிவித்த அதிகாரிகள், பயண நிறுவன உரிமையாளர்தான் இந்த மோசடிக்கு மூளையாக செயல்பட்டுள்ளதாகவும், அவரை கைது செய்து விசாரித்தால் முழு விவரமும் தெரிய வரும் என்றனர்.

இது பற்றி மேலும் கூறிய வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள், தொழிலதிபர்களிடம் இருந்து பணத்தை சேகரித்து, விமான சிப்பந்தி மூலமாக ஹொங்கொங் கொண்டு சென்று அங்கிருந்து தங்க கட்டிகளை பெற்று வந்த மோசடி சம்பவம் தெரியவந்துள்ளது. விமான பணிப்பெண்ணுக்கு இதற்காக ஒரு சதவீத தரகுத் தொகையும் வழங்கி வந்துள்ளனர். 10ற்கும் மேற்பட்ட தொழிலதிபர்கள், மேலும், சில விமான சிப்பந்திகளுக்கு தொடர்பு இருக்க கூடும் என்று நாங்கள் சந்தேகிக்கிறோம். அவர்களை கண்காணித்து வருகிறோம் என்றனர் அதிகாரிகள்.

இந்த சம்பவம் பற்றி ஜெட் ஏர்வேஸ் நிறுவனம் கூறும்போது, வருவாய் புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரணையின் போது பெரிய அளவிலான வெளிநாட்டு பணம் விமான ஊழியரிடம் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளது. ஊழியரை காவலில் எடுத்துள்ளனர். சட்ட முகமைகள் அளிக்கும் விவரங்கள் அடிப்படையில், அடுத்த கட்ட நடவடிக்கையை விமான நிறுவனம் எடுக்கும் என்று தெரிவித்தது.

பிரெஞ்சுப் பாணுக்கு கிடைத்த மரியாதை!

பிரெஞ்சுப் பாணான Baguette, உலகின் பாரம்பரியச் சின்னமாக (Patrimoine mondial) யுனெஸ்கோவினால் பதிவு செய்யப்பட உள்ளது.

வெதுப்பகங்களின் தேசிய சம்மேளனத்தின் (Confédération nationale de la boulangerie-pâtisserie) தலைவர் டொமினிக் அன்ராக்ட் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

ரசாக்களின் வெதுப்பியினை (galette de roi) எலிசே மாளிகைக்குக் கொண்டு சென்று, ஜனாதிபதி இமானுவல் மக்ரோனைச் சந்தித்த டொமினிக் அன்ராக்ட், இந்தப் பதிவிற்கான ஆதரவினை ஜனாதிபதியிடம் கோரி உள்ளார்.

கைமாறிய வெலிப் காலதாமதம்

கைமாறிய வெலிப் (Vélib) ஈருருளி வாடகை நிறுவனத்தைக் கையில் எடுத்த Smovengo நிறுவனம், புதிய வெலிப் ஈருருளி தரிப்பிட நிலையங்களை உருவாக்குவதில் பெரும் காலதாமதம் செய்து வருகின்றது.

இதற்கான வேலைகள் மிகவும் துரிதமாக நடாத்தப்பட உள்ளதாக Smovengo நிறுவனத்தின் தலைவர் Jorge Azevedo தெரிவித்துள்ளார்.

வாரத்திற்கு 60 ஈருருளி நிலையங்கள் என்ற விகிதத்தில் மிகவேகமாகத் தாங்கள் வேலை செய்வதாகவும், எதிர்வரும் மார்ச் 31ம் திகதிக்குள் 1400 நிலையங்களைப் பரிசிற்குள்ளும் புறநகர்ப் பகுதிகளிற்குள்ளும் நிறுவிவடுவதாக இவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இவர்கள் இந்தக் கால எல்லையைத் தாண்டினால், இவர்கள் மீது, அரசாங்கம், ஒரு மில்லியன் ஈரோக்கள் வரை குற்றப்பணம் விதிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிந்தழிந்த ஈரான் எண்ணெய்க் கப்பலால் சுற்றுச்சூழல் அபாய நிலை சீனா மறுப்பு

சீனக் கடல் பகுதியில் சரக்குக் கப்பலுடன் மோதி கடந்த ஒரு வாரமாகக் கொழுந்து விட்டு எரிந்துகொண்டிருந்த ஈரானிய எண்ணெய்க் கப்பல் கடந்த 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெடித்துச் சிதறி, கடலுக்குள் மூழ்கியுள்ளது. இக் கப்பல் வெடிப்பதற்கு முன்பாக சுமார் 800 முதல் 1000 மீற்றர் உயரத்துக்கு தீ கொழுந்து விட்டு எரிந்துள்ளது.

அந்தக் கப்பலில் இருந்த எரிபொருள் ஏறத்தாழ முழுவதும் எரிந்து தீர்ந்துவிட்டதாக அதிகாரிகள் தெரிவித்தாலும், மூழ்கிய கப்பலில் இருந்து எண்ணெய் கடலில் கசிந்து மாபெரும் சுற்றுச்சூழல் சீரழிவை ஏற்படுத்தலாம் என்று நிபுணர்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கப்பல் வெடித்துச் சிதறி, கடலுக்குள் மூழ்கியதைத் தொடர்ந்து, அந்தக் கப்பலில் இன்னும் மீட்கப்படாமல் இருந்த 29 பணியாளர்கள் இனியும் உயிர் பிழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஈரானைச் சேர்ந்த National Iranian oil tanker நிறுவனத்திற்குச் சொந்தமான, பனாமா நாட்டில் பதிவு செய்யப்பட்ட சாஞ்சி எண்ணெய்க் கப்பல், தென் கொரியாவை நோக்கி கிழக்கு சீன கடற் பகுதி வழியாக கடந்த 6ம் திகதி சென்று கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த ஹொங்கொங் சரக்குக் கப்பல் மீது பலமாக மோதி, தீப்பிடித்தது. அப்பபோது அந்தக் கப்பலில் சுமார் 136,000 தொன் அளவிலான மசகு எண்ணைய் இருந்துள்ளது. சுமார் 274 மீற்றர் நீளமுள்ள இந்த கப்பல் சீனாவின் தொழில்நகரமான சங்காயில் இருந்து சுமார் 160 கடல் மைல் தொலைவில் சென்று கொண்டிருந்தபோது அமெரிக்காவில் இருந்து சீனாவின் குவாங்டாங் நகருக்கு சுமார் 64 ஆயிரம் தொன் உணவு தானியங்களை ஏற்றிவந்த ஹொங்கொங் சரக்கு கப்பலின்மீது பயங்கரமாக மோதியது.

மோதிய அதிர்ச்சியில் ஈரான் நாட்டு எண்ணைய் கப்பல் தீப்பிடித்து எரிய தொடங்கியது. சுமார் 13 கப்பல்கள் மற்றும் ஈரானிய கொமாண்டோ பிரிவு ஒன்றும் தீயணைப்பிலும் அக்கப்பலில் இருந்தவர்களை மீட்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தன. எனினும், எண்ணெய்க் கப்பல் தீச்சுவாலையுடன், பெருமளவு புகையைக் கக்கி, தொடர்ந்தும் எரிந்துகொண்டிருக்கும் நிலையில், அதன் புகையும் கடுமையான மழையும் கடுமையான காற்றும், மீட்புப் பணிகளைக் கடினமானவையாக மாற்றியதாக அதிகாரிகள் குறிப்பிட்டிருந்தனர். ஏற்கனவே கப்பலில் பணியாற்றிய மூவரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட நிலையில் கப்பல் வெடித்துச்சிதறி கடலில் மூழ்கியுள்ளது. இதனால் அதில் எஞ்சியிருந்த 29 பணியாளர்களும் உயிர் பிழைத்திருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அந்தக் கப்பலில் ஈரானைச் சேர்ந்த 30 பணியாளர்களும், வங்கதேசத்தைச் சேர்ந்த 2 பணியாளர்களும் இருந்தனர்.

முன்னதாக கப்பல் தீப்பற்றியதும், கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருந்த கப்பலில், சீன மீட்புக் குழுவினர் உள்நுழைந்து தேடுதல் நடத்தினர். சுமார் 30 நிமிடங்கள் எரிந்துகொண்டிருந்த கப்பலில் அவர்கள் தேடுதல் நடத்தியிருந்தனர். அப்போது கப்பலில் பணியாளர்கள் வசிக்கும் பகுதிக்கு மீட்புக் குழுவினர் செல்ல முடியாத அளவுக்கு கடும் வெப்பம் நிலவியதால் அவர்கள் அங்கு செல்லவில்லை. எனினும், கப்பலில் அவசரகாலப் படகுகள் வைக்கப்பட்டிருந்த பகுதியிலிருந்து இரு உடல்களை மீட்டெடுத்திருந்த அவர்கள், கப்பலின் மின்னனு தகவல் பதிவுகள் மற்றும் காணொளிப் பதிவுகளையும் மீட்டு வந்துள்ளனர்.

இதுஇவ்வாறிருக்க, கப்பலில் இருந்த எண்ணெய் முழுவதும் எரிந்து தீராவிட்டால் அது கடலில் கசிந்து, பல கி.மீ. சுற்றளவில் கடல் வாழ் உயிரினங்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் பேரழிவை ஏற்படுத்தும் என்று சுற்றுச்சூழல் அமைப்புகள் எச்சரிக்கை விடுத்துள்ளன. ஆனால் அதனைச் சீனா மறுத்துள்ளது.

“ஈரானிய எண்ணெய் கப்பலில் இருந்து அபாயகரமான அளவில் எண்ணெய் கசிவு ஏற்பட்டு கடல் நீரில் பரவவில்லை. அந்தக் கப்பலில் நிரப்பப்பட்டுள்ள

தொடர்ச்சி 22ம் பக்கம்

பாகிஸ்தானில் இராணுவ தளம் திட்டத்தை மறுத்தது சீனா!

பாகிஸ்தானில் சீனா இராணுவ தளம் அமைக்க உள்ளது என்ற செய்தியை அந்நாட்டு அரசு மறுத்துள்ளது. இந்தியா, ஈரான் மற்றும் ஆப்கானிஸ்தான் கூட்டாக இணைந்து மேம்படுத்திய ஷபாகார் துறைமுகம் அருகே, பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தின் ஜிவானி பகுதியில் சீன இராணுவம் இராணுவ தளம் அமைக்க உள்ளது என செய்திகள் வெளியாகியது. இந்த செய்தியை தேவையற்ற யூகங்கள், என சீனா கூறியுள்ளது. சீனா கட்டமைத்த க்வாடர் துறைமுகத்திற்கும் நெருங்கிய பகுதியான ஜிவானியில் சீனாவை இராணுவ தளம் அமைக்க பாகிஸ்தான் அனுமதி வழங்கும் என தகவல்கள் வெளியாகி இருந்தது.

கடற்பகுதியில் ஆதிக்கம் செலுத்தும் விதமாக பாகிஸ்தானில் இரண்டாவது வெளிநாட்டு இராணுவ தளத்தை அமைக்க சீனா பேசிவருகிறது என வாசிங்டன் போஸ்ட் செய்தி வெளியிட்டது. இப்போது பாகிஸ்தானில் இராணுவம் தளம் அமைக்க உள்ளது தொடர்பாக வெளியான செய்தியை சீனா மறுத்து உள்ளது.

இவ்விவகாரம் தொடர்பாக பத்திரிக்கையாளர்கள் எழுப்பிய கேள்விக்கு சீன வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் லு காங், நீங்கள் எதை குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்கு தெரியவில்லை என்றார். பயங்கரவாத விவகாரத்தில் பாகிஸ்தான் மீது அமெரிக்கா அதிரடி நடவடிக்கையை தொடங்கிய நிலையில் அதற்கு பதிலடியாக பாகிஸ்தான் சீனாவிற்கு சிறப்பு தளம் வழங்க முன்வந்துள்ளது என்றெல்லாம் சீன மற்றும் வெளிநாட்டு ஊடகங்களில் செய்தி வெளியானது. டொனால்டு டிரம்ப் நடவடிக்கையானது பாகிஸ்தான் மற்றும் சீனா இடையிலான உறவை மேலும் மேம்படுத்தும் என்றெல்லாம் சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டது.

சவூதி அரேபியா மீது மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள்

யேமனில் வெளிநாட்டுத் தலையீட்டின் காரணமாக ஏற்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அறிக்கையொன்றில், சவூதி அரேபியா தலைமையிலான இராணுவக் கூட்டணியால் மேற்கொள்ளப்பட்ட பல மீறல்கள் பட்டியற்படுத்தப்பட்டுள்ளன.

2017ம் ஆண்டில், 157 பேரைக் கொன்ற 10 தாக்குதல்களை, ஐ.நா ஆராய்ந்துள்ளது. குடியேற்றவாசிகளின் படகு, இரவுச் சந்தையொன்று, வதிவிடக் கட்டடங்கள் 5, விடுதியொன்று, வாகனமொன்று, அரசாங்கப் படைகள் ஆகியன இத்தாக்குதல்களின் இலக்குகளாக அமைந்தன என வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

தாக்குதல்களை மேற்கொள்வதற்கு, துல்லியமாக வழிநடத்தப்படும் ஏவுகணைகள் பயன்படுத்தப்பட்ட நிலையில், மேற்குறிப்பிட்ட இடங்களே, தாக்குதலுக்கான இலக்காக அமைந்திருக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, பொதுமக்களின் இலக்குகளை, வேண்டுமென்றே தாக்கியது என்றே கருத்திற் கொள்ள வேண்டியிருக்கிறது என, ஐ.நா அறிக்கை தெரிவிக்கிறது.

குறித்த தாக்குதல்களை நடத்தியமைக்கான காரணங்களை வெளிப்படுத்துமாறு, சவூதி அரேபியா தலைமையிலான இராணுவக் கூட்டணியிடம் கோரப்பட்டிருந்த போதிலும், இவ்வறிக்கையைத் தயாரித்த ஐநா குழுவுக்குப் பதில்களை அனுப்ப, சவூதி இராணுவக் கூட்டணி தவறியது என்று கூறப்படுகிறது.

தாக்குதல்களைத் தவிர, எதேச்சதிகாரக் கைதுகள், சுதந்திரத்தைப் பறித்தல், காணாமல் போகச் செய்யப்படுதல் ஆகியன, பரவலாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் காணப்படுகின்றன என, அவ்வறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. குறிப்பாக, ஐக்கிய அரபு அமீரக முகாம்களில் இவை காணப்படுகின்றன என, அவ்வறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. யேமன் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் ஐக்கிய அரபு அமீரகம், பல்வேறு வகையான சித்திரவதைகளை மேற்கொண்டு வருகிறது என வெளிப்படுத்தப்படுகிறது. அதேபோல், இவ்விராணுவக் கூட்டணியால் நிதியளிக்கப்படும், ஆயுதமளிக்கப்படும் ஆயுதக்குழுக்கள், யேமனின் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் உறுதித்தன்மைக்கும் அச்சுறுத்தலாக அமைகின்றன என, அவ்வறிக்கை குறிப்பிடுகிறது.

ஈரானில் ஆங்கிலம் தடை

ஈரானில் அரசு மற்றும் தனியார் ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆரம்பப் பாடசாலைகளில் ஆங்கிலம் கற்பிப்பது மேற்கத்திய கலாசார திணிப்புக்கு வழிவகுக்கிறது என தலைவர்கள் எச்சரிக்கை விடுத்ததையடுத்து அந்நாட்டின் கல்வித்துறை இந்த அதிரடி முடிவை எடுத்து உள்ளது.

மாறும் அமைச்சரவை

பிரித்தானியப் பிரதமர் தெரேசா மே, தனது அமைச்சரவையை விரைவில் மாற்றியமைக்க இருப்பதாக தெரிவித்துள்ளார். இருப்பினும் நிதி, வெளியுறவு, உட்துறை உள்ளிட்ட துறைகளை சேர்ந்த அமைச்சர்கள் தங்களது பதவியில் நீடிப்பார்கள் என அவர் உத்தரவாதம் அளித்துள்ளார்.

மூளை வெடித்து வௌவால்கள் சாவு

அவுஸ்திரேலியாவில் கடந்த சில தினங்களாக தொடர்ந்து வெப்பம் அதிகரித்து காணப்படுகிறது. சமீபத்தில் அங்கு அதிகபட்சமாக 45 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவாகியுள்ளது. இதன்காரணமாக அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் மேற்கு திசையில் உள்ள கேம்பல்டௌன் என்ற புறநகர் பகுதியில் நூற்றுக்கணக்கான வௌவால்கள் மூளை வெடித்து உயிரிழக்கும் கோரச் சம்பவம் நிலவி வருகிறது. முன்னதாக, 1939ம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 47.3 பாகை செல்சியஸ் வெப்பம் பதிவானதே அங்கு இதுவரை அதிகபட்சமாகஉள்ளது குறிப்பிடத்தக்கது.

ஓப்ரா வின்பிரே எதிர் டிரம்ப்

அமெரிக்காவில் 2020ம் ஆண்டு நடக்க உள்ள ஜனாதிபதி தேர்தலில் கறுப்பினத்தை சேர்ந்த நடிகையும், தொலைக்காட்சிப் பிரபலமுமான ஓப்ரா வின்பிரே களம் இறங்கக்கூடும் என தகவல்கள் வெளியாகி உள்ளன. அப்படி அவர் தன்னை எதிர்த்து போட்டியிட்டால், நிச்சயம் அவரை தான் தோற்கடிப்பேன் என்று டிரம்ப் கூறியுள்ளார்.

அபாய நிலையில் 60,000 குழந்தைகள்

மியான்மரில் ராக்கின் மாகாணத்தில் 60 ஆயிரம் குழந்தைகள், மிகப் பயங்கரமான நிலையில் தங்க வைக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் குப்பைகள், சாணம் ஆகியவற்றுக்கு இடையே தத்தளிக்கும் சூழலில் உள்ளதாகவும் ஐ.நா. சபையின் யுனிசெப் அமைப்பு ஒரு அறிக்கையில் கூறியுள்ளது.

சீனாவின் அதிரடி

சீனா கடந்த ஆண்டில் மட்டும் ஆபாசப் படங்கள், தகவல்களைக் கொண்ட

20

1 இலட்சத்து 28 ஆயிரம் இணையத்தளங்களை மூடி விட்டதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

கொலம்பிய போராளிகளுக்கு ஐ.நா. வேண்டுகோள்

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் அரசுக்கு எதிராக 50 ஆண்டுகளுக்கும் மேலாக போரிட்டு வரும் போராளிகள், வன்முறையை கைவிட்டு அரசுடன் அமைதி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஐ.நா. பொதுச்செயலாளர் ஆண்டனியோ குட்டரெஸ் கேட்டுக்கொண்டுள்ளார். அங்கு இருதரப்புக்கும் இடையேயான போர் நிறுத்த ஒப்பந்தம் முடிவடைந்ததை தொடர்ந்து மீண்டும் தாக்குதல்கள் தொடங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது.

சிலந்தியை கொல்ல வீட்டை கொளுத்திய இளைஞர்!

நுளம்பிற்குப் பயந்து வீட்டைக் கொளுத்தினானாம் என்றொரு பழமொழி உண்டு. அமெரிக்காவில் இது உண்மையிலேயே நடந்துள்ளது. அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் வீட்டிற்குள் நுழைந்த சிலந்தியை கொல்ல முயற்சித்த இளைஞர் தவறுதலாக தனது வீட்டையே கொளுத்திக் கொண்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. வீட்டிற்குள் பெரிய அளவிலான விசச் சிலந்தி ஒன்று புகுந்துள்ளது. அந்த சிலந்தியை கொள்ளிக்கட்டையை கொண்டு கொல்வதற்காக இளைஞர் முயற்சித்தார். இறுதியில் எட்டுக்கால் பூச்சியை வெற்றிகரமாக கொன்ற இளைஞர், தவறுதலாக படுக்கைக்கும் தீவைத்து விட்டதை பின்னரே உணர்ந்தார். மளமளவென பரவிய தீயால் படுக்கையறை முழுவதும் எரிந்து வீட்டை நோக்கியும் பரவியது. அங்கு வந்த தீயணைப்பு துறையினர் போராடித் தீயை அணைத்தனர்.

ஹவாய் தீவு மக்களை பதறவைத்த குறுந்தகவல்!

ஹவாய் தீவில் ஏவுகணை தாக்குதல் நடக்கப்போவதாக குறுந்தகவல் (எஸ்எம்எஸ்) மூலம் பரவிய வதந்தியால் அந்நாட்டு மக்கள் பீதிக்கு உள்ளாயினர். அமெரிக்காவின் ஹவாய் தீவில் கடந்த 13ம் திகதி சனிக்கிழமை காலை பரவிய குறுந்தகவல் ஒன்று அனைவரையும் பீதிக்கு உள்ளாக்கியது. 'பேரழிவை ஏற்படுத்தும் ஏவுகணை தாக்குதல் ஹவாய் தீவில் நடக்கப்போகிறது. அனைவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவும். இது ஒத்திகை இல்லை உண்மை' என்று அந்த குறுந்தகவல் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதைப் படித்த மக்கள் அனைவரும் பீதியாக



Earlier Today

EMERGENCY ALERTS 1m ago

Emergency Alert

BALLISTIC MISSILE THREAT INBOUND TO HAWAII. SEEK IMMEDIATE SHELTER. THIS IS NOT A DRILL.

→ 21

கொலம்பியாவில் பாலம் இடிந்து

கட்டுமான தொழிலாளர்கள் பலி

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் 450 மீற்றர் நீளம் கொண்ட ஒரு பாலம் கட்டப்பட்டு வந்த நிலையில் திடீரென இடிந்து விழுந்தது. இதன்போது 9 தொழிலாளர்கள் பலியாகியுள்ளனர். கொலம்பியாவின், கண்டிநமார்கா – மேதா மாகாண எல்லைகளுக்கு இடையே மலைப் பகுதியில் சிரஜாரா என்ற இடத்தில் 450 மீற்றர் நீளம் கொண்ட ஒரு பாலம் கட்டப்பட்டு வந்தது. இந்தப் பாலம், அந்த நாட்டின் தலைநகர் பகோட்டாவையும், வில்லாவிசென்சியோ நகரையும் இணைக்கிற நெடுஞ்சாலையின் ஒரு அங்கமாகும். இந்தப் பாலத்தின் ஒரு பகுதி கட்டி முடிக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 15ம் திகதி திங்கட்கிழமை திடீரென இடிந்து விழுந்தது. இதில் கட்டுமான தொழிலாளர்கள் சிக்கிக்கொண்டனர். இடிபாடுகளுக்கு இடையே அகப்பட்டு கொண்ட தொழிலாளர்கள் அலறினர். உடனடியாக மீட்பு படையினர் விரைந்து வந்து மீட்பு பணிகளை நடத்தினர். இந்த விபத்தில் 9 கட்டுமான தொழிலாளர்கள் பலியாகியதுடன், 5 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. போக்குவரத்துத்துறை அமைச்சர் ஜேர்மன் கர்டோனா உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து பார்வையிட்டார். இந்த விபத்துக்கு காரணம் என்ன என்பது குறித்து விசாரணை நடத்தப்படுகிறது.

ரோஹிங்கியோ அகதிகள் விவகாரம்

வங்கதேசத்துடன் மியான்மர் உடன்பாடு திரும்பப் பெற 2 ஆண்டு அவகாசம்

மியான்மரில் இருந்து உயிர்தப்பி அயல் நாடான வங்கதேசத்தில் தஞ்சமடைந்துள்ள ரோஹிங்கியோ அகதிகளை, 2 ஆண்டுகளுக்குள் தாயகம் அனுப்ப இரு நாடுகள் இடையே ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வாரமொன்றுக்கு ஆயிரத்து ஐந்நூறு பேர் வீதம் மீளப் பெற்றுக்கொள்ள மியன்மார் சம்மதம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் ரோஹிங்கியோ அகதிகள் மியான்மர் திரும்புவதற்கான கால நிர்ணயம் முடிவு செய்யப்பட்டுள்ளதால், இந்த விவகாரத்தில் நிலவி வந்த நிச்சயமற்ற தன்மை குறைந்திருப்பதாகக் கருதப்படுகிறது.

இதுகுறித்து வங்கதேச அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: வங்கதேச முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள ரோஹிங்கியோ அகதிகளை மியான்மருக்குத் திரும்ப அனுப்பத் தொடங்கிய இரு ஆண்டுகளுக்குள், அனைத்து அகதிகளையும் ஏற்றுக்கொள்ள அந்தநாட்டுஅரசுசம்மதம்தெரிவித்துள்ளது.

குடும்ப உறுப்பினர்கள் மட்டுமன்றி, அநாதை ஆக்கப்பட்டவர்கள், விரும்பத் தகாத சம்பவங்களால் பிறந்த குழந்தைகள் ஆகியோரது அடையாளங்களும் முறைப்படுத்தப்படும். இன்னும் சில நாட்களில் இதற்கான பணிகள் தொடங்கப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், மியான்மர் அகதிகள் எந்தத் திகதியிலிருந்து தாயகம் அனுப்பப்படவிருக்கிறார்கள் என்பது குறித்து வங்கதேச அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே, வங்கதேசமும், மியான்மரும் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில், இந்த மாதம் 23ம் திகதி முதல் ரோஹிங்கியோ அகதிகள் திரும்ப அனுப்பப்பட வேண்டும். எனினும், அந்தக்காலக்கெடு திகதிக்குள் அகதிகளை மியான்மருக்கு அனுப்புவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதற்கான சாத்தியம் இல்லை என்று வங்கதேச அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, தாயகம் திரும்பிச் செல்லும் தங்களுக்கு மியன்மார் அரசு எவ்வாறான அழுத்தங்களை எதிர்காலத்தில் பிரயோகிக்குமோ என்ற அச்சம் ரொஹிங்யாக்களை விட்டு நீங்கவில்லை என்று தொண்டு நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மியான்மரின் ராக்கைன் மாகாணத்தில் பெரும்பான்மையாக வசித்து வரும் ரோஹிங்கியோ முஸ்லிம் இனத்தவர்கள், வங்கதேசத்தைப் பூர்விகமாகக் கொண்டவர்கள். பல தலைமுறைகளாக மியான்மரில் வசித்து வந்தாலும், அந்த நாட்டில் அவர்கள் சட்டவிரோத வங்கதேச அகதிகளாகவே பரவலாகக் கருதப்படுகின்றனர்.

மியான்மர் அரசும், ரோஹிங்கியோ இனத்தவருக்கு முழுமையான குடியுரிமை அளிப்பதைத் தவிர்த்து வருகிறது. இதன் காரணமாக, தங்களது உரிமையை நிலைநாட்ட ரோஹிங்கியோக்களில் ஒரு பிரிவினர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் அவர்கள் நிகழ்த்திய தாக்குதலில் சில பாதுகாப்புப் படையினர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, மியான்மர் இராணுவம் நடத்திய கடுமையான பதிலடித் தாக்குதலில் ஏராளமான பொதுமக்கள் உயிரிழந்தனர்.

மேலும், உள்ளூர் கலவரக்காரர்களுடன் இணைந்து ரோஹிங்கியோ கிராமங்களுக்கு இராணுவம் தீவைத்ததாகவும், பாலியல் பலாத்காரம் போன்ற வன்முறைகளில் ஈடுபட்டதாகவும் குற்றம்சாட்டப்படுகின்றது. இந்த வன்முறைக்கு அஞ்சி, கடந்த ஒக்டோபர் மாதத்திலிருந்து மட்டும் 6.5 இலட்சத்துக்கும் மேற்பட்ட அகதிகள் வங்கதேசத்தில் தஞ்சமடைந்தனர்.

30 ஆண்டுகள் கடந்தும் தேடப்படும் பயங்கரவாதிகள்!

1986ம் வருடம் செப்டம்பர் 5ம் திகதி மும்பையிலிருந்து நியூயோர்க் நோக்கி அமெரிக்காவைச் சேர்ந்த பான் ஆம் (Pan Am - Flight 73) விமானம் கராச்சி விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்ப தரையிறங்கியபோது பணயமாகப் பிடிக்கப்பட்டது. பான் ஆம் விமானத்தை நோக்கி பாதுகாப்பு படையினர் உடையில் வந்த பயங்கரவாதிகள் விமானத்தை தங்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர். கடத்தப்பட்டபோது விமானத்தில் 14 நாடுகளைச் சேர்ந்த பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் என 381 பேர் இருந்தனர்.

லிபியாவை சேர்ந்த, 'அபு நிதால்' என்ற பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நான்கு பேரின் கட்டுப்பாட்டில் அந்த அமெரிக்க விமானம் வந்தது. சைப்ரஸ் நாட்டில் சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் தங்கள் கூட்டாளிகளை விடுவிக்க வேண்டும் என்று பயங்கரவாதிகள் இதன்போது கோரிக்கை விடுத்தனர்.

இதற்கிடையில், பாகிஸ்தான் அரசு தரப்பில் பயங்கரவாதிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது. பதினேழு மணி நேரப் பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படவில்லை. இதையடுத்து, விமானத்தில் இருந்த பயணிகளைநோக்கிவேட்டுக்களைத் தீர்த்தனர். இதில், 20 பயணிகள் உயிரிழந்தனர். இதில் 12 இந்தியர்களும், 2 அமெரிக்கர்களும் அடங்குவர்.

இதற்கிடையே, தனது உயிரையும் பொருட்படுத்தாது விமான பணிப்பெண்ணாக இருந்த நீர்ஜா பனோந்த் (இவர் இந்தியாவைச் சேர்ந்தவர். மொடலாக இருந்து விமான பணிப்பெண்ணாக மாறியவர்), சமயோசிதமாக செயல்பட்டு, அவசர வெளியேற்ற வழியாக பயணிகளை ஒவ்வொருவராக இரகசியமாக வெளியே அனுப்பினார். இதைக்கவனித்த பயங்கரவாதிகள், நீர்ஜாவை சுட்டுக்கொன்றனர். இந்தக் கடத்தல் சம்பவத்தில் 43 பேர் பலியானதுடன், 100ற்கும் மேற்பட்ட பயணிகள் காயம் அடைந்தனர். எனினும் பயங்கரவாதிகள் தப்பிச்சென்றுவிட்டனர்.

எனினும் விசாரணைகளில் இந்த விமானத்தை கடத்திய பயங்கரவாதிகள் வாடவுட் முகம்மது ஹபீஸ் அல் துர்கி, ஜமல் சயீத் அப்துல் ரகீம், முகம்மது அப்துல்லா காலி உசைன் ரஹ்யால் மற்றும் முகம்மது அகமது அல் முன்வர் என்பது தெரியவந்தது. இந்த பயங்கரவாதிகள் பற்றி அளிக்கப்படும் ஒவ்வொரு தகவலுக்கும் 5 மில்லியன் டொலர் வழங்கப்படும் என்று அமெரிக்கா அறிவித்தது. அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான எப்.பி.ஐயின் தேடப்படும் பட்டியலில், மேற்கூறிய பயங்கரவாதிகளின்பெயர்கள் இடம்பெற்றுள்ளது.

எனினும் இந்த தாக்குதல் சம்பவம் நடைபெற்று 30 ஆண்டுகளுக்கு மேலாகியும் பயங்கரவாதிகள் கைது செய்யப்படவில்லை. இந்த சூழலில், எப்.பி.ஐ நான்கு பயங்கரவாதிகளின் வயதான நிழற்படங்களை வெளியிட்டுள்ளது. வயது முதிர்ந்த நிலையில், அவர்களின் முகத்தோற்றம் எவ்வாறு இருக்கும் என்பதை கணினி தொழில்நுட்ப உதவியுடன் வரைந்து எப்.பி.ஐ வெளியிட்டுள்ளது. வாஷிங்டன் பீல்ட் அலுவலக முகமையில் இந்த வழக்கு இன்னும் விசாரணையில் உள்ளது. குற்றம் சாட்டப்பட்ட பயங்கரவாதிகளில் ஒரு சிலர் உயிரிழந்ததாக தகவல் வெளியானாலும் அது இன்னும் உறுதிபடுத்தப்படாமலேயே உள்ளது.

இந்தக் கதையை மையமாக வைத்தே 'பயணம்' என்ற பெயரில் ஒரு தமிழ் திரைப்படம் எடுக்கப்பட்டது. அதில் பயங்கரவாதிகள் அனைவரும் சுட்டுக்கொல்லப்பட்டதுபோல் காட்டப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



பெனாசிர் பூட்டோ கொலை 10 ஆண்டுகளின் பின் உரிமைகோரியது தலிபான்!

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவராக இருந்த முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ 2007ம் ஆண்டு டிசெம்பர் 27ம் திகதி ராவல் பிண்டியில் நடந்த நாடாளுமன்ற தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தபோது தீவிரவாதிகள் நடத்திய துப்பாக்கிச்சூடு மற்றும் தற்கொலை தாக்குதலில் கொல்லப்பட்டார். இதன்போது அவருடன் 20ற்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இப்படுகொலைக்கு பாகிஸ்தானில் இயங்கும் தெக்ரிக்–இ–தலிபான் தீவிரவாதிகள் தான் காரணம் என அப்போதைய அதிபர் பர்வேஷ் முஷ்ரப் குற்றம் சாட்டினார். அதை தலிபான்கள் மறுத்தனர். ஆனால், பெனாசீர் பூட்டோ படுகொலைக்கு ஜனாதிபதி பர்வேஷ் முஷ்ரபிற்கும் தொடர்பு இருப்பதாக குற்றம்சாட்டப்பட்டு வழக்கு தொடரப்பட்டது. பயங்கரவாத தடுப்பு நீதிமன்றத்தில் நடைபெற்ற இவ்வழக்கு விசாரணை முடிவில் கடந்த ஓகஸ்ட் மாதம் ஐந்து தலிபான்களும் விடுதலை செய்யப்பட்டனர். எனினும், பணியில் அலட்சியமாக இருந்ததாக இரு காவல்துறை அதிகாரிகளுக்கு 17 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பாகிஸ்தானின் முன்னாள் அதிபர் மு'ாரப் (தற்போது இலண்டனில் உள்ளார்) இந்த வழக்கில் தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார். ஆனால், இப்போது பெனசீர் பூட்டோ கொலை செய்யப்பட்டதற்கு தலிபான் பயங்கரவாத இயக்கம் பொறுப்பு ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தற்போது பெனாசிர் பூட்டோ கொலைக்கு நாங்களே பொறுப்பேற்கிறோம் என தலிபான்கள் அறிவித்துள்ளனர். பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்ட 10 ஆண்டுகளுக்குப் பின் இந்த உண்மையை தலிபான் கூறியுள்ளது. தலிபான் தீவிரவாத அமைப்பின் தலைவர் அபுமன்சூர் ஆசிம் முப்தி நூர்வாலி எழுதிய புத்தகம் கடந்த ஆண்டு நவம்பர் 30ம் திகதி ஆப்கானிஸ்தானில் உள்ள பக்திகா மாகாணத்தில் பார்மல் என்ற இடத்தில் உள்ள மசீத் கனினி மையத்தில் வெளியிடப்பட்டது. 'இன்குலாப் மெஹ்சூத் செளத் வஜிரிஸ்தான் – பிரிட்டிஷ் ராஜ் முதல் அமெரிக்க ஏகாதிபத்தியம் வரை' என்ற உருது மொழியில் எழுதப்பட்ட 588 பக்கங்களை கொண்ட இப்புத்தகத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது தற்போது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

அதில், தலிபான்களின் தற்கொலை படை தீவிரவாதிகளான பிலால் என்கிற சயீத் மற்றும் இக்ரா முல்லாக் ஆகியோர் தாக்குதல் நடத்தியதாக கூறப்பட்டுள்ளது. பொதுக்கூட்ட மேடையில் பேசிக்கொண்டிருந்த பெனாசிர் பூட்டோவின் கழுத்தில் தீவிரவாதி பிலால் குறி வைத்து துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தினான். பின்னர் தனது உடலில் கட்டியிருந்த குண்டுகளை வெடிக்கச் செய்து கூட்டத்தினரை கலைத்தான் என்றும் புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தில் பெனாசிர் கொலை செய்யப்பட்டது ஏன் என்ற விவரமும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சிக்கு வந்தவுடன் அமெரிக்காவுடன் இணைந்து முஜாகிதீன்களுக்கு எதிரான நடவடிக்கைக்கும், தீவிரவாத குழுக்களை தடை செய்யவும் திட்டமிட்டிருந்தார். அந்த தகவல் கொல்லப்பட்ட தலிபான் நிறுவனர் பைதுல்லா மெக்சூத்துக்கு தெரியவந்தது. எனவே பெனாசிர் பூட்டோவைக் கொலை செய்தோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்த நூலில், இந்த படுகொலைக்கு முன்னரே இரண்டு முறை பெனாசீர் பூட்டோவை கொல்ல தற்கொலைப் படை தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2007 ஒக்டோபர் மாதத்தில் கராச்சியில் நடந்த தாக்குதலில் பெனாசீர் உயிர் தப்ப, 140 பேர் உயிரிழந்தனர். ஆனால் அதன் பிறகும் அரசு பெனசீர் பூட்டோவின் பாதுகாப்பை அதிகரிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அந்த புத்தகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் தலிபான் அமைப்பின் வரலாறு, தாக்குதல்கள் மற்றும் ஆப்கானிஸ்தானில் அவர்கள் படையின் செயல்பாடுகள் உள்ளிட்டவையும் இடம்பெற்றுள்ளன.

தலிபான்களின் இந்த ஒப்புதல் வாக்குமூலத்தையடுத்து, பெனாசிர் பூட்டோ கொலையில் இதுவரையில் நீடித்து வந்த மர்மம் தற்போது விலகியுள்ளதாகக் கூறப்படுகின்றது. இதேவேளை, தாக்குதல் வெற்றிகரமாக முடிவடைந்ததும் இரண்டாவது நபரான இக்ரா முல்லாக் அப்பகுதியில் இருந்து தப்பிவிட்டார் என்றும் இப்போதும் அவர் உயிருடன் தான் உள்ளார் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

துருக்கியில் தரையிறங்க முற்பட்ட விமானம் விபத்து!

துருக்கியின் ட்ரப்சோன் (Trabzon) விமான நிலைய ஓடுபாதையில் தரையிறங்க முற்பட்ட விமானமொன்று ஓடுபாதையை விட்டு விலகிச் சென்று கடலின் பள்ளத்தாக்கில் பாய்ந்தது. துருக்கியின் தலைநகரான அங்காரா விமான நிலையத்திலிருந்து சனிக்கிழமை (13) இரவு புறப்பட்ட 737 –800 எனும் இலக்கமுடைய விமானம், ட்ரப்சோன் விமான நிலையத்தில் தரையிறங்க முற்பட்டபோது ஓடுபாதையை விட்டு விலகிச்சென்று கருங்கடலில் விழ முற்பட்டுள்ளது. இருப்பினும் அவ்விமானம் பாதுகாப்பாக மீட்கப்பட்டதுடன் மேற்படி விமானத்தில் பயணித்த 162 பயணிகளும் விமானியும் சிப்பந்திகளும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

உலகை அதிரவைத்த விக்கிலீக்ஸ் மன்னன்

ஈகுவடார் குடியுரிமை பெற்றார் அசாஞ்சே!

விக்கிலீக்ஸ் இணையதளத்தின் உரிமையாளர் ஜ?லியன் அசாஞ்சேவுக்கு ஈக்குவடார் நாடு குடியுரிமை வழங்கி உள்ளது. இதையடுத்து தான் ஈக்குவடார் நாட்டின் குடிமகன் என்பதைக் குறிக்கும் வகையில் அந்நாட்டு சின்னம் பொறித்த டி சர்ட் அணிந்த படத்தை அசாஞ்சே வெளியிட்டுள்ளார். விக்கிலீக்ஸ் நிறுவனரான ஜூலியன் அசாஞ்சே அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்தவர். 2010ம் ஆண்டு அமெரிக்க இராணுவத்தின் இரகசியக் கோப்புகளை விக்கிலீக்ஸ் வலைதளத்தில் கசியவிட்டு அமெரிக்காவை நெருக்கடியில் ஆழ்த்தியும், உலகையளவில் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தினார். அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் ஏராளமான தூதரகத் தொடர்பாடல் இரகசிய அறிக்கைகளை வெளியிட்டு மேலும் அதிர்வை ஏற்படுத்தினார். வாராவாரம் அமெரிக்க உளவுத்துறை ஆவணங்களை தன் இணையத்தில் வெளியிட்டுக் கொண்டிருந்தார்.

அவரைக் கைது செய்ய அமெரிக்கா தீவிர நடவடிக்கை மேற்கொண்டது. இதற்கிடையே, 2012ல் சுவீடன் நாட்டில் இரு பெண்களை பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இந்த விவகாரத்தில் அசாஞ்சே கைதாகும் நிலை ஏற்பட்டது. இதையடுத்து இலண்டனில் உள்ள ஈக்குவடார் நாட்டு தூதரகத்தில் அசாஞ்சே தஞ்சமடைந்தார். ஈகுவடார் தூதரகத்தினுள் இருந்து கொண்டே அவர் பல முக்கிய தகவல்களை தன் இணையதளத்தில் வெளியிட்டார். இதனால் ஈகுவடாருக்கு நிறைய பிரச்சனைகள் வந்தது. உலகத்தை இணையத்தால் கலக்கியவன் இணையம் இல்லாமல் இருக்கும் நிலை வந்தது. ஈகுவடார் அவருக்கு அளித்த கணினியைப் பிடுங்கியது. செல்பேசியில் இணைய சேவையை நிறுத்தியது. அவருக்கும் அந்த நாட்டின் தலைவர்களுக்கு இடையிலேயே கூட நிறைய பிரச்சனைகள் வந்தது. ஆனாலும் அவர் பாதுகாப்பிற்கு குறைவு இல்லாமல் இருந்தார்.

அமெரிக்காவும், இலண்டனும் அவர் எப்போது வெளியே வருவார் கைது செய்யலாம் என்று எதிர்பார்த்திருந்தது. 2012 முதல் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளாக ஈக்குவடார் தூதரகத்தில் தஞ்சமடைந்த அசாஞ்சேவுக்கு நிரந்தர குடியுரிமையை ஈக்குவடார் நாடு வழங்கி அனுமதி அளித்துள்ளது. இது தொடர்பான உத்தரவை ஈகுவடார் வெளியுறவுத்துறை அமைச்சர் மரியா ஃபெர்னாண்டா எஸ்பினோசா பிறப்பித்தார். இதையடுத்து தூதரகத்தில் உள்ள அசாஞ்சே விரைவில் ஈக்குவடார் செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. இனி அவரின் விக்கிலீக்ஸ் இல் எதை எல்லாம் வெளியிடப் போகின்றாரோ என்று அனைவரும் இப்போதே எதிர்பார்க்கத் தொடங்கிவிட்டனர்.

சமூக வலைத்தளங்கள் மூலம் தகவலைப் பகிர்ந்துகொண்டனர். ஆனால், அடுத்த பத்து நிமிடங்களிலேயே இது வெறும் வதந்தி என்றும் யாரும் இதை நம்பி, பகிர வேண்டாம் மற்றொரு தகவல் வந்தது. இது குறித்து கருத்து தெரிவித்த ஹவாய் மாகாண ஆளுநர் டேவிட், பேரிடர் மேலாண்மை அமைப்பின் ஊழியர்கள் தவறான பட்டன் அழுத்தப்பட்டதால் தவறான செய்தி பரவிவிட்டது என்றும் இதற்காக மக்களிடம் மன்னிப்பு கேட்பதாகவும் தெரிவித்தார்.

சீனாவில் கிறிஸ்தவ தேவாலயம் தகர்ப்பு

சீனாவில் அரசுடன் மோதலில் ஈடுபட்ட கிறிஸ்தவ அமைப்பினரின் தேவாலயத்தை அந்த நாட்டு அதிகாரிகள் இடித்துத் தரைமட்டமாக்கினர். இதன் மூலம், கடவுள் மறுப்புக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட அந்த நாட்டு கொம்யூனிஸ்ட் அரசுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையிலான மோதல் வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளதாக பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். சீனாவின் தெற்குப் பகுதியில் உள்ள லின்ஃபென் நகரில் உள்ள அந்த கோல்டன் லாம்ஸ்டேன்ட் தேவாலயத்தை துணை இராணுவப் படையினர் கனகரக இயந்திரங்கள் மற்றும் வெடிமருந்துகளைப் பயன்படுத்தித் தகர்த்ததாக சம்பவத்தை நேரில் பார்த்தவர்களும், சர்வதேச தொண்டு நிறுவனத்தினரும் தெரிவித்தனர். 6 கோடி கிறிஸ்தவர்களைக் கொண்ட சீனாவில், அரசு அங்கீகாரம் பெறாமல் தேவாலயங்கள் கட்டப்படுவது அதிகரித்து வருவதையொட்டி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது.

புதிய நாட்டின் புதுச் சட்டம்

சோமாலியா நாட்டிலிருந்து பிரிந்து, 1991ம் ஆண்டில் தன்னை சுதந்திர தனி நாடு என்று சோமாலிலாந்து பிரகடனம் செய்துகொண்டாலும், சர்வேதேச நாடுகளால் அந்நாடு தனிநாடாக இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை. இந்நிலையில், சுதந்திரத்தை பிரகடனம் செய்துகொண்டபின், முதல் முறையாக சோமாலிலாந்து பாலியல் வல்லுறவுக்கு எதிராக சட்டம் இயற்றியுள்ளது. இதுவரை சோமாலியாவில் பாலியல் வல்லுறவுக்கு எதிரான சட்டம் எதுவும் இல்லை. வன்கொடுமை செய்த ஆணுக்கே, பாதிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து வைக்கும் வழக்கம் இதுவரை அங்கு நிலவி வந்தது. தற்போது இயற்றப்பட்டுள்ள சட்டத்தின்படி பாலியல் வன்கொடுமை செய்யும் நபர்கள் குறைந்தபட்சம் 30 ஆண்டுகளை சிறையில் கழிக்க வேண்டியிருக்கும். அதிகரித்து வரும் பாலியல் வல்லுறவுக் குற்றங்களைத் தடுக்க இந்தப் புதிய சட்டம் உதவும் என்று சோமாலிலாந்து நாடாளுமன்றத்தின் அவைத்தலைவர் பாஷே மொகமத் ஃபாரா தெரிவித்துள்ளார். தற்போது கூட்டுப் பாலியல் வல்லுறவுகளும் நடக்கின்றன. பாலியல் குற்றங்களை முழுமையாகத் தடுப்பதே இச்சட்டத்தின் நோக்கம் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஜொனியை பேச அனுப்பிவிட்டு...

இந்தியாவுடனான போர் வெடித்த போது ஜொனி இந்தியாவிலே இருந்தார். பேச்சுவார்த்தைக்காக நெடுங்கேணியில் இந்திய வானூர்தியில் வந்திறங்கிய ஜொனி அங்கிருந்து மறைமுகமாக விசுவமடு கரைக்கு அழைத்து வரப்பட்டார். இவை குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் வரலாற்றுத்துறைப் பொறுப்பாளர் யோகரத்தினம் யோகி கூறியதாவது, மணலாற்றுக் காட்டிலிருந்து என்னை ஜொனியை அழைத்துவர தலைவர் அனுப்பினார். மேஜர் தங்கேசுடன் நான் அவரை விசுவமடுவில் சந்தித்தேன். இரண்டு நாட்கள் நான் ஜொனியுடன் விசுவமடுவில் இருந்தேன். அப்போது ஜொனி, தலைவரின் உயிருக்கு எந்தநேரமும் ஆபத்து வரப் போகிறது. எனவே நீங்கள் ஏதோ ஒருவகையில் அமைதியைப் பேசி அதன்பிறகு ஒரு நிலை எடுக்கலாம் என்று சொல்லிக் கொண்டிருந்தார்.

அவருக்கு இங்குள்ள நிலைமைகளைச் சொன்ன போது, அமைதி ஏற்பட சாகுவரை உண்ணாநிலைப் போராட்டத்தை இந்தியாவில் நடத்துவேன் என்றும் ஜொனி கூறினார். பிறகு நான் ஒரு இழுபறியுடன்தான் மேஜர் தங்கேசுடன் புறப்பட்டோம். போகின்ற வழியில் இந்த இந்த இடங்களைச் சுட்டிக்காட்டி அங்கு இந்திய பாசறைகள் அமைக்கும், அங்கு உங்கு சுற்றி வளைக்கும் உணவுப் பிரச்சனை வரும் – தண்ணீர் பிரச்சனை வரும் என்றெல்லாம் கூறினார். அவர் கூறியதுபோல் பின்னர் இந்தியப் படை அந்த அந்த இடங்களில் எல்லாம் பாசறைகள் அமைத்தது உண்மைதான். நான் அவரைக் கூட்டிச் செல்லும்போது, ‘தலைவரைச் சந்தித்து பெரும்பாலும் உங்கள் கருத்துகளைச் சொல்லுங்கள் – சொல்வீர்களா என்று தெரியவில்லை – இருந்தாலும் சொல்லுங்கள்’ என்று சொன்னேன்.

நாங்கள் பாசறையை அடைந்த போது இரவு 11.30 மணி இருக்கும். அவர் உறங்கிக் கொண்டிருந்தார். வாசலில் ஜொனியைப் பற்றி சொன்னேன். காலையிலே சந்திக்கிறேன் என்று மெதுவாகத்தான் சொன்னேன். அப்போது தலைவர் உள்ளிருந்து கேட்டார், ‘ஜொனி வந்தாச்சா? யோகி வந்துள்ளாரா?’ என்று. அந்தக் காலகட்டத்தில் மெல்லிய ஒலிக்குக் கூட விழித்து விழிப்பாக இருப்பார். அதேபோல் யாராவது காட்டைவிட்டு வெளியே போய்விட்டால் எப்போதும் விழிப்பாக இருக்கிற பழக்கம் உண்டு. அந்த வகையில் உறங்கிக் கொண்டிருந்தபோதும் தலைவர் விழிப்பாகத்தான் இருந்தார்.

தலைவருடன் 2, 3 நாட்கள் ஜொனி இருந்தார். பின்னர் ஜொனி அங்கிருந்து இந்தியா செல்லத் தயாராக இருந்தபோது, ஜொனியை ஒரு பக்கமாக அழைத்துச் சென்று கேட்டேன், ‘என்ன நடந்தது? எல்லா விசயத்தையும் சொல்லிவிட்டீர்களா?’ என்று கேட்டேன். அவர் வாயைப் பொத்திக் கொண்டு சொன்னார்... ‘ எதுவுமே கதைக்காதீங்க.. நான் ஒன்றுமே கதைக்கலை. அவர் சொன்னதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்தேன்’ என்றார். ‘என்ன முடிவு?’ என்று கேட்டேன். தலைவர் கூறினார், ‘இந்திய படை அழைத்துதான் இங்கு வந்ததாக சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் திரும்பிப் போய்விட்டு தலைமறைவாகி இங்கே வாருங்கள். பெரிய பயிற்சி முகாமுக்கு பயிற்சி கொடுக்க வேண்டியிருக்கிறது. யாழ். குடாவை கைப்பற்ற வேண்டியுள்ளது. அதைச் செய்வதற்கான ஆயுதத்துடன் வாருங்கள்’ என்றார். ‘நான் போகிறேன். திரும்பி அந்த ஆயுதங்களோடுதான் வருவேன்’ என்றார் ஜொனி. இடையிலேயே ஒரு தளம்பல் நிலையில் ஜொனி இருந்தபோதும் இங்கே தலைவரைச் சந்தித்தபோது மிக உறுதியோடு மீண்டும் சென்று இங்கே திரும்பி பெரிய அளவில் பயிற்சிகளை தந்து போராளிகளை வளர்த்து யாழ்ப்பாண குடாநாட்டை கைப்பற்றுவதற்கான நம்பிக்கையோடுதான் சென்றார்.

ஆனால் அவர் செல்லும்போது தேராவிலுக்கு அண்மையில் இந்தியப் படையின் சுற்றி வளைப்பில் அவர் கொல்லப்பட்டார். மிகப் பெரிய சிறந்த பண்பான உயர்ந்த ஒரு போராளியை நாங்கள் இழந்தோம். அவரைப் பொறுத்தவரை யாழ். குடாநாடு என்பது அவருக்கு வீடு போல். எல்லா இடமும் அவருக்குத் தெரியும். 1983 ஆம் ஆண்டிலிருந்து அவர் வீரச்சாவடைகின்ற வரை அவரது பங்களிப்பு இருந்தது. போராளிகளால் மட்டுமல்ல– பொதுமக்களாலும் மதிக்கப்படுகிற ஒரு மனிதனாக ஜொனி வாழ்ந்தார்.

அவலச் சாவுகளும்...

வவுனியாவில் கோர விபத்தில்
இருவர் பலி, இருவர் படுகாயம்

வவுனியா – குருமன்காடு பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் இரு இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர். மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். தைப்பொங்கலை கொண்டாடுவதற்கு பயணித்து கொண்டிருந்த போதே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. வவுனியா நகரப் பகுதியில் இருந்து தொடருந்து நிலைய வீதி ஊடாக வைரவப்புளியங்குளம் நோக்கி பயணித்த கார் ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் அதிகாலை 1.20 அளவில் வீதியின் அருகாமையில் இருந்த கற்குவியலிலும் மற்றும் கம்பத்துடனும் மோதுண்டு விபத்துக் குள்ளாகியுள்ளது. காரில் 4 பேர் பயணித்த நிலையில் ஒருவர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் மேலும் 3 படுகாயமடைந்த நிலையில் மீட்கப்பட்டு வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இந்த விபத்துச் சம்பவத்தின் போது இல. 36/1, புகையிரத நிலைய வீதி வைரவப்புளி யங்குளம் வவுனியாவைச் சேர்ந்த இராஜேந்திரன் – பிரபாத் (வயது 21) என்ற இளைஞர் சம்பவ இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார், சிகிச்சை வழங்கப்பட்டு வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி கணேசபுரம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த சந்திரகுமார் சாந்தப்பிரகாஸ் (வயது 20) என்ற இளைஞனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார். படுகாயமடைந்த நிலையில், ஓயார் சின்னக்குளம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த எம்.விதுசன் (வயது 20) என்பவரும், சாஸ்திரி கூமாங்குளம் வவுனியா என்ற முகவரியைச் சேர்ந்த கதிர்காமநாதன் சசிகரன் (வயது 22) ஆகியோர் தொடர்ந்தும் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.?

மாடு மேய்த்த இளைஞன் சடலமாக மீட்பு!

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவு காரைக்கட்டு பகுதியில் மாடுகளைப் பராமரிக்கும் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். காரைக்கட்டு பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய அழகையா அற்புதன் என்ற இளைஞன் வழமையாக மாடுகள் மேய்க்கும் தொழிலையே கொண்டிருந்தவர் என்றும் தைப்பொங்கல் தினத்திற்கு மறுநாள் திங்கட்கிழமை வழமைபோன்று பட்டிப் பொங்கல் பொங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இருந்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் பட்டிப்பொங்கல் தினத்தன்று அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். இம்மரணத்துக்கான காரணம் பற்றி விரிவான விசாரணைகளில் சிறீலங்காக் காவல்துறையினர் ஈடுபட்டுள்ளனர்.

விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

மாத்தறை, அகுரெஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற விபத்தில் கொக்கவில் பிரதேசத்தைச் சேர்ந்த செல்வகுமார் (வயது–55) என்பவர் உயிரிழந்தார். கட்டுப்பாட்டை இழந்த வாகனம் வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதியதில் விபத்து ஏற்ப்பட்டுள்ளது. விபத்தில் காயமடைந்த வானின் சாரதி மாத்தறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பாலத்தின் அடியில் இளைஞன் சடலம்

கிளிநொச்சி – வட்டக்கச்சி – பன்னங்கண்டி பாலத்தின் அடியில் இருந்து ஆணொருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. சம்பவத்தில் பலியானவர் வட்டக்கச்சி – மயவனுரை சேர்ந்த 22 வயதான இராசேந்திரம் சர்வானந்தம் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இதே வேளை, உந்துருளியைஅதிகவேகத்தில் செலுத்தியமையால், அது சாரதியின் கட்டுப்பாட்டை மீறி, பாலத்தின் கீழ் கவிழ்ந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகி இருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

விபத்தில் காயமடைந்த மாணவன் மரணம்

நள்ளிரவில் வீதியைக் கடக்க முற்பட்டபோது இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த மாணவன் சுமார் 3 மாதங்களின் பின்னர் கடந்த 16ம் திகதி உயிரிழந்தார். யாழ். கொக்குவில் மத்தியைச் சேர்ந்த சிவானந்தன் மதுசன் (வயது 8) என்பவரே உயிரிழந்தார். கடந்த ஒக்டோபர் மாதம் தனது ஒன்றுவிட்ட சகோதரனுடன் கொழும்பு சென்று திரும்பிக் கொண்டிருந்தவர், ஆரச்சிக்கட்டு என்ற இடத்தில் உள்ள உணவகத்தில் இரவு 12.30 அளவில் உணவு உட்கொண்டுவிட்டு வீதியைக் கடந்தபோது வாகனம் மோதிவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டது. கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் கடந்த டிசெம்பர் முதலாம் திகதி யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தார். எனினும் அவர் கோமா நிலையில் இருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

கடலில் விழுந்து முதியவர் தற்கொலை

மட்டக்களப்பு – கல்லடி புது முகத்துவாரம், களப்பிலிருந்து மீட்கப்பட்ட ஆணின் சடலம் மட்டக்களப்பு நகர் பொதுச் சந்தை வியாபாரிகள் சங்கத் தலைவரான 73 வயதுடைய நான்கு பிள்ளைகளின் தந்தையான வைத்திலிங்கம் தர்மலிங்கம் என அடையாளம் காணப்பட்டுள்ளது. குறித்த நபர் தற்கொலை செய்து கொண்டுள்ளதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. குறித்த நபர் வீட்டில் சண்டைபிடித்து விட்டு வெளியேறியதாக உறவினர்கள் தெரிவித்தனர். இந்நிலையில் அவர் கல்லடிப் பாலத்திலிருந்து கடலுக்குள் பாய்ந்து தற்கொலை செய்திருக்கலாமென உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

எரிந்தழிந்த ஈரான் எண்ணெ...

எரிபொருள், வாயு நிலையிலிருந்து திரவ எரிபொருளாக மாற்றப்பட்டது ஆகும். எனவே, கடலில் கொட்டினாலும் சில மணி நேரங்களில் அந்த எரிபொருள் ஆவியாகி காற்றில் கலந்துவிடும். அதன் காரணமாக, அந்த எரிபொருள் கடல் நீரில் பரவி மாசுபாட்டை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. அந்த எரிபொருளைக் கொண்டு மாதிரி சோதனைகளைச் செய்து பார்த்ததில், எரியும் கப்பலில் இருந்து கடலில் எண்ணெய் கொட்டினாலும், ஐந்து மணி நேரத்துக்குள் அந்த எரிபொருளின் ஒரு சதவீதத்துக்கும் குறைவான அளவே கடலில் இருக்கும் எனவும், எஞ்சிய எரிபொருள் ஆவியாகிவிடும் எனவும் தெரிய வந்துள்ளது. எனினும், சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுக்கும் வகையில் நாங்கள் சுத்தப்படுத்தும் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகிறோம்" என்று சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, சீன மீட்புக் குழுவினர் அந்தப் பகுதியில் கப்பலில் உயிரிழந்தவர்களின் உடல்களைத் தேடும் பணிகளிலும், எண்ணெய்க் கசிவைக் கட்டுப்படுத்தும் பணியிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். மாயமாகியுள்ளவர்களின் உடல்களைத் தேடும் பணிகள் 1600 சதுர கிலோ மீற்றருக்கும் மேல் விரிவுபடுத்தப்பட்டுள்ளதாக அந்த சீன வெளியுறவுத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

National Iranian oil tanker நிறுவனத்திற்குச் சொந்தமான எண்ணெய்க் கப்பல் விபத்துக்குள்ளாவது, கடந்த 2 ஆண்டுகளில் இது இரண்டாவது முறையாகும். ஏற்கனவே, அந்த நிறுவனத்தின் எண்ணெய்க் கப்பல் மற்றொரு சரக்குக் கப்பலுடன் 2016ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் மோதி ஏற்பட்ட விபத்தில், இரு கப்பல்களும் சேதமடைந்தன. எனினும், அந்த விபத்தில் உயிர்ச் சேதமோ, சுற்றுச்சூழல் சீர்கேடோ ஏற்படவில்லை.

மிக வெப்பமான கோள்....

ஒரு கோளின் வெப்பம், அது சூரியனிடம் இருந்து பெறும் வெளிச்சத்தையும், அந்த வெளிச்சம் அது எவ்வளவு தூரம் பிரதிபலிக்காமல், தனக்குள்ளே கிரகித்துக் கொள்கிறது என்பதையும் பொறுத்தது. வெள்ளிக் கோளில் இந்தப் பாதிப்பு மிகவும் அதிகம். அதன் அளவு கிட்டத்தட்ட பூமியோட அளவுதான். அதில் வாயு மண்டலம் முழுவதும் பெரும்பாலும் கார்பன்–டைஒக்சைடாகவே இருக்கின்றது. காற்றழுத்தம் கூட, பூமியை விட தொண்ணூறு மடங்கு அதிகம். கார்பன்–டை–ஒக்சைட் எப்போதுமே வெப்பத்தை போர்வை போல பாதுகாக்கும். இதனால் புதன் கோளைவிட வெள்ளிக் கோள் அதிக வெப்பமாக இருக்கின்றது என்கின்றனர் விஞ்ஞானிகள்.

கவிதைக்காக பல்கலைக்கழகம்....

தந்தை வாங்கிக் கொடுத்த படகில் ஏறி, அட்லாண்டிக் கடலைக் கடந்து, இங்கிலாந்து வந்தார்.

ஓபன் ஹைமர் படித்து முடித்த பின்னர், அவருக்கு பல பல்கலைக் கழகங்களில் இருந்து அழைப்பு வந்தது. கடைசியாக, அவர் பெர்க்லியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் வேலைக்குச் சேர்ந்தார். வேலையில் சேர்ந்த முதல் நாளே அந்தப் பல்கலைக்கழகத்தின் தலைமை அதிகாரி அவரிடம் வந்து, “உங்களுக்குப் பல பல்கலைக்கழகங்களில் இருந்து அழைப்பு வந்தும், நீங்கள் ஏன் இந்த பல்கலைக்கழகத்தைத் தேர்ந்தெடுத்தீர்கள்?” என்று கேட்டார்.

அதற்கு ஓபன்ஹைமர், “இங்குள்ள நூலகத்தில் 16 மற்றும் 17ம் நூற்றாண்டைச் சேர்ந்த சில பழைய பிரெஞ்சுக் கவிதைகளை நான் ஒருமுறை படித்தேன். அவற்றை மீண்டும் படிக்க வேண்டும் என்ற ஆவலில் தான் இங்கு வந்து சேர்ந்தேன்” என்றார்.

தத்துவ கதை...

அந்த ஊர்க்காரர்களிடம் இங்கே பன்றிகள் எங்கே அதிகம் இருக்கும் என கேட்டான், அவர்கள் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு ஊரின் எல்லை தாண்டி ஒரு மலக்குவியல் உள்ள இடம் உண்டு, அங்கே நிறைய இருக்கும் ஆனால் அங்கே போகமுடியாது. துர்நாற்றம் வீசும் என்றார்கள். சரி என்று சொல்லிவிட்டு அந்த இடம் நோக்கி நடந்தான் சீடன். நெருங்கநெருங்கவே இந்த இடம் இருப்பது தெரிந்துவிட்டது சீடனுக்கு. அந்த அளவு துர்நாற்றம். மூக்கை பிடித்துக் கொண்டு குருநாதரை தேடினான். ஒரு இடத்தில் பெரிய பன்றி ஒன்று தனது குட்டிகளுடன் ஒரு பெரிய மலக்குழியில் படுத்து விளையாடிக் கொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்தான் அதன் நெற்றியில் குருநாதர் உருவம் தோன்றி மறைந்தது.

உடனே வாளை உருவி குருவே என்று கூவியபடி பாய்ந்தான். சடாரென்று திரும்பிய அந்த பன்றி ஒரு நொடியில் அவன் கையை எட்டிப்பிடித்து சீடா இந்த வாழ்வில் நான் ஆனந்தமாக உள்ளேன் கெடுத்து விடாதே என்று கெஞ்சியது. விக்கித்து நின்றான் சீடன்.

தத்துவம் : எந்த நிலை பிறப்பானாலும் அந்த நிலைக்கு அதன் செயல்கள் சிறப்பே, உயர்வே.

அதாவது மனிதனாக இருந்தபோது கேவலமாக இருந்த பன்றிப் பிறப்பு பன்றியாக உள்ளபோது சொர்க்கமாக தெரிகிறது.

Argenteuil பிரதேசத்தில் தமிழ்ச்சங்கத்தின் பொங்கல்விழா

பிரான்சு புறநகர் பகுதியில் ஒன்றான Argenteuil பிரதேசத்தில் தமிழ்ச்சங்கத்தின் பொங்கல்விழா தமிழ்ச்சோலை மாணவர்களால் சிறப்பாக நடாத்தப்பட்டது. இதில் பாராளுமன்ற உறுப்பினர்கள் , நகரமுதல்வர்கள் என பலர் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தனர்.

பிரான்சு சோதியா கலைக் கல்லூரியின் வருடாந்த பொங்கல் விழா!

பிரான்சு லாச்சப்பல் பகுதியில் அமைந்துள்ள சோதியா கலைக் கல்லூரியின் வருடாந்த பொங்கல் விழா கடந்த 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் மிகவும் சிறப்பாக இடம்பெற்றது. வழமைபோன்று கல்லூரியின் பிரதம நிர்வாகி செல்வக்குமார் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கல்லூரியின் முன்றிலில் கோலமிட்டு பொங்கல் இடப்பட்டது. மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. இந்நிகழ்வில் கல்லூரியின் நிர்வாகத்தினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

பரிஸ் லா சப்பலில்
AMBAAL STORE
பல் பொருள் அங்காடி
Tél: 01 42 05 41 85
192, rue du Fbg.st.Denis 75010 Paris

VICHNESH SHOP
அனைத்து வகையான மளிகைப் பொருட்கள் மற்றும் அனைத்து நாடுகளுக்கான தொலை பேசி அட்டைகள் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம்
8 Esplanade de l europe
95100 Argenteuil
Tel: 01 39 81 35 60

பாலன்ஸ் சலூான்
தமிழர்களால் நடத்தப்படும் ஆண்கள் அழகு நிலையம்
29 rue Philippe de Girard,
75010 Paris. M° La Chapelle
Tél: 06 63 01 75 80

Baby Baloon
பேபி பலூான் டெக்கரேஷன்
Port : 06 13 06 20 29
Tél : 01 39 80 85 23

SEREE MAHAL
ARTICLES DE CADEAUX, BRICOLAGE
வீட்டு விழாக்களுக்குத் தேவையான தரமான அன்பளிப்புப் பொருட்கள் மலிவு விலையில்!
100% எலி, பூச்சி கொல்லி மருந்துகள் எம்மிடம் கிடைக்கும்!
14, rue Cail, 75010 Paris
Tel: 06 69 58 61 61
09 51 15 82 03
M La Chapelle ou Gare du Nord

பரம் திருமண சேவை
யாழ்ப்பாணம், பிரான்சு போன்ற நாடுகளிலிருந்து மணமகன், மணமகளை தெரிவு செய்ய தொடர்புகொள்ள வேண்டிய சேவை
தொடர்புகளுக்கு: 0753844284
இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

ASA FOOD
SPECIALIST STRING HOPPER
உங்கள் சகலவிதமான கொண்டாட்டங்களுக்கு எம்மிடம் இடியப்பம் , சம்பல் , சொதி என்பனவற்றை முன் அறிவிப்புடன் மிகவும் மலிவாகபெற்றுக்கொள்ளலாம்
தொடர்புகளுக்கு
06 95 96 60 64
BUS 346 620 Docteur calmette

சுவர்ண மஹால்
SWARNA MAHAL
பழைய நகைகளைக் கொடுத்து அதற்கு பெறுமதியான புதிய நகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்!
ஓடர் நகைகள் எதுவாயினும் ஒரு கிழமைத் தவணையில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்!!
www.swarnamahal-france.com
122 Av Paul Vaillant Couturier 93120 La Courneuve
Tél - 01 48 36 40 75 Port - 06 50 17 51 91 / 06 21 23 87 25
Email: swarnamahal93120@gmail.com

ஜெனிவா ஐக்கிய நாடுகள் சபையின் 37 வது மனிதவுரிமைக்கூட்டத்தொடர்

எமது மக்களின் விழவிற்காக நீதிகேட்டு
தொடரூந்துப்பயணம்

மாபெரும் பேரணிக்கு வலுச்சேர்ப்போம்.

12.03.2018

Gare du Lyon ↔ Geneve

புறப்படும் நேரம்
காலை9.00 மணி

ஜெனிவாவிலிருந்து
புறப்படும் நேரம் 18.00
பரிஸ் வந்தடையும் நேரம் 21.50

> *நாம் உறுதியுடன் தொடர்ந்து போராடுவோம் எமது தாயக பூமியை எதிரியிடமிருந்து மீட்டெடுத்து சுதந்திர தமிழீழம் அமைக்கும் வரை நாம் தொடர்ந்து போராடுவோம்.*
>
> - தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள்-

Le 12 Mars 2018, la communauté diaspora tamoule se réunira à Genève, devant le siège de Nation- Unis, pour demander justice pour le peuple d'Eelam tamoul.

Nous réclamons que une solution justes soient prises concernant le Génocide de 2009 commis au Sri Lanka a l'encontre de peuple Tamoule.

Nous voulons notamment qu'une enquête indépendante et impartiale soit menée sur les crimes de guerre et crimes contre l'humanité commis en 2009 au Sri Lanka contre le peuple Tamoule.

காலை 9.00 Gare du Lyonல் இருந்து TGV தொடருந்து புறப்படவுள்ளது. உங்கள் பயணத்தின் முன் பதிவை எம்மோடு தொடர்பு கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளும் படி கேட்டுக்கொள்கின்றோம்

மேலதிக தொடர்புகளுக்கு:

தமிழர் ஒருங்கிணைப்புக்குழு பிரான்சு	தமிழ் மக்கள் பேரவை	தமிழ் சங்கங்களின் கூட்டமைப்பு
01 43 15 04 21	06 52 72 58 67	06 62 84 66 06